மனுஷீகப் பெருமையும் தெய்வீகத் தாழ்மையும்

"உன் தேவனுக்கு முன்பாக
மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல்
வேறே என்னத்தைக்
கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்"
(மீகா 6:8).

15/-

வெளியீடு எண் : C 13

மனுஷீகப் பெருமையும் தெய்வீகத் தாழ்மையும்

First Edition : March 2004
Second Edition: September 2004
Reprint : 2007
Reprint : 2010

இந்நூலைப் பிரசுரிக்க விரும்பும் எவருக்கும் பதிப்புரிமை அளிக்கப்படுகிறது உண்மையில், பாரெங்குமுள்ள மாந்தர் அனைவரும் பெருமையின் அகோர விளைவுகளைக் கண்டுணர்ந்து, அதினின்று நீங்கலாக்கப்பட்டு, இம்மையிலும் மறுமையிலும் ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்க்கையைத் தங்களுக்கு நல்கும் கிறிஸ்துவின் தாழ்மையைத் தரித்துக்கொள்ளத்தக்கதாக, இந்நூது எல்லா மொழிகளிலும் வெளியிடப்படுவதைக் காண நாங்கள் விழைகின்றோம்.

பிரதிகளுக்காகத் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
பெந்தெகொஸ்தே சபை,
ரோஜா தெரு, S.V. நகர் போஸ்ட்,
இரும்புலியூர், சென்னை - 63.
இந்தியா.
தொலைபேசி : (044) 2279 - 0079
Email : tpmibr@gmail.com

Printed by

Pentecost Press Trust,
Roja St., S.V. Nagar Post,
Irumbuliyur, Chennai - 63.

பொருளடக்கம்

அதிகாரம்	பக்கம்
1. விழுந்துபோன தூதர்களின் பெருமை	1
2. பெருமையின் தீய விளைவுகள் சில!	17
3. பெருமையுள்ளவர்களின் முடிவு பயங்கரமானது!	30
4. தாழ்மை - அருமையானதோர் ஜீவியம்!	35
5. கிறிஸ்துவில் எவ்வித பெருமையுமில்லை	47
6. கிறிஸ்துவினுடைய தாழ்மையின் ஐந்து அம்சங்கள்	80
7. தாழ்மையின் விலைமதித்தற்கரிய பிரதிபலன்கள்	95

முகவுரை

மனிதன் சிருஷ்டிக்கப்படுவதற்கு வெகுகாலத்திற்கு முன்பே தூதர்களைத் தேவன் சிருஷ்டித்தார். இருப்பினும், அவர்களில் சிலர் பெருமையினிமித்தம் விழுந்துபோயினர். இவ்விதம் விழுந்துபோன தூதர்களை அதாவது பிசாசுகளைத் தண்டிக்கும் பொருட்டாகத் தேவன் நரகம் அல்லது நித்திய அக்கினியை ஆயத்தம் பண்ண வேண்டியதாயிற்று (மத். 25 : 41). ஆகவே பெருமை நரகத்துடன் நேரடியான தொடர்புடையது. வேறு வார்த்தைகளில் கூறின், பெருமை நரகத்தை உருவாக்குகிற படியால் பெருமையே நரகமாயிருக்கிறது.

தூதர்கள் முற்றிலும் ஒளியுள்ளவர்களாய் உருவாக்கப் பட்டிருந்தனர்; அவர்களுள் சிலர் பெருமையடைந்து விழுந்து போயினர். அவர்களைப் போல மனிதனும் பெருமையினால் விழுந்துபோகாதிருக்கும் பொருட்டாக, சர்வ ஞானமுமுள்ள தேவன், தாம் மனிதனைச் சிருஷ்டித்தபோதே சகலவித முன் னெச்சரிக்கைகளையும் எடுத்துக் கொண்டார். எனவே அன்பும் கரிசனையுமுள்ள தேவன், மனிதன் தான் எந்த வஸ்துவைக் கொண்டு உருவாக்கப்பட்டானோ அதைப் பற்றிப் பெருமை பாராட்டக்கூடாதபடிக்கு அவனைப் பூமியின் மண்ணினால் உருவாக்கினார். தேவன் மனிதனை உருவாக்கிய பின்னர் அவர் ஏதேன் என்னும் ஒரு தோட்டத்தை உண்டாக்கி அவனை அதில் வைத்தார் (ஆதி. 2 : 7, 8). ஒருவேளை மனிதனை அவர் ஏதேன் தோட்டத்து மண்ணினால் உருவாக்கியிருந்தால் அவன், 'நான் சாதாரண மண்ணினால் உருவாக்கப்பட்டவனல்ல, ஏதேன் தோட்டத்து மண்ணினால் உருவாக்கப்பட்டவன்' என்று மேன்மை பாராட்டியிருக்கக் கூடும். மேலும் மனிதன் சிருஷ்டிகளில் அதிமேன்மையான சிருஷ்டியாயிருந்தபோதிலும், ஆறாவது நாளில், அதாவது சிருஷ்டிப்பின் கடைசி நாளில்தான்

உருவாக்கப்பட்டான். அந்த ஆறாம் நாளிலுங்கூட பூமியிலுள்ள சகல மிருகங்களும் உருவாக்கப்பட்ட பின்னரே கடைசியாக மனிதன் சிருஷ்டிக்கப்பட்டான். ஏன்? தேவன் தமது படைப்பின் முதல் நாளில் மனிதனை உருவாக்கியிருந்தால், 'நான்தான் ஆறுநாள் சிருஷ்டிப்பிலும் தேவனுக்கு உதவி செய்தேன்' என்று அவன் மேன்மைபாராட்டியிருக்கக் கூடும். இவ்வாறு மனிதன் பெருமையடைந்து விழுந்துபோகாதிருக்கும் பொருட்டாக நம்முடைய தேவன் முன்னெச்சரிக்கையுள்ளவராக இத்தனை முயற்சிகளையும் எடுத்துக்கொண்ட போதிலும், இன்று நம்முடைய உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரை - இரத்தத்தை உறிஞ்சும் அட்டையைப் போல் - பெருமை நம்மை ஒட்டிக்கொண்டிருக்கிறது. நாமோ இதை உணரக்கூடாதபடிக்குக் குருடராய் இருக்கிறோம்! அதிக தாமதமாகிவிடுமுன்னதாகவே இந்த அபாயகரமான ஒட்டுண்ணியைக் கண்டுகொள்ளும்படி தேவன் தாமே நம் கண்களைத் திறந்தருளுவாராக.

பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேர் என்றால், ***பெருமையே*** எல்லாத் தீமைக்கும் வித்தாகும். வித்திலிருந்துதான் வேர் முளைக்கிறது. எனவே நாம் பெருமையாகிய வித்தை அழித்துவிட்டால், எல்லாத் தீமையையும் வேரோடு பிடுங்கிப் போடலாம். நேயரே, "*பொல்லாப்பு (தீமை)* **உனக்கு நேரிடாது**" (சங். 91 : 10) என்ற வாக்குத்தத்தம் உன்னதமானவரின் மறைவிலிருக்கிற தாழ்மையுள்ள பரிசுத்தவான்களுக்கே (வச. 1), அல்லது தங்களைத் தாழ்மையுடன் கர்த்தருக்குள் மறைத்துக்கொள்பவர்களுக்கே அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை நினைவிற்கொள்ளுங்கள். இது எத்தகைய ஆசீர்வதிக்கப்பட்ட சத்தியமாயிருக்கிறது! உண்மையிலேயே நாம் தாழ்மையுள்ளவர்களாய் இருப்போமாயின், "பொல்லாப்பு உனக்கு நேரிடாது" என்னும் ஆசீர்வதிக்கப்பட்ட வாக்குத்தத்தம் நமக்கே உரியதாகும்; ***"எல்லாத் தீமைக்கும்"*** பதிலாக ***எல்லா நன்மையையும்*** நாம் பெறுவோம். மாறாக, எவ்வளவு அதிகமாக நாம் பெருமையுள்ளவர்களாயிருக்கிறோமோ

அவ்வளவதிகமாய் நாம் எல்லாத் தீங்கினாலும் தாக்கப்படுவோம். இந்தப் பயங்கரமான உண்மைக்கு முன்பாக நாம் நடுங்குவோமாக!

'பெருமை' ஏன் இவ்வளவு தீமையுள்ளதாகக் கணிக்கப்பட்டிருக்கிறது? கொலைபாதகம், துர்நடத்தை, தூஷணம் முதலான பாவங்கள் பிசாசினாலோ, நம்மைச் சுற்றியுள்ள மக்களாலோ, பாவம் நிறைந்த உலகத்தினாலோ, அல்லது பாவ மாம்சத்தின் பெலவீனத்தினாலோ தூண்டப்படுகின்றன. ஆனால், இவ்வித தீய தூண்டுதல்கள் அறவே இல்லாத தூய்மையான, துப்புரவான பரலோகத்தில்தான் பெருமை என்ற பாவம் ஆரம்பித்தது. எனவே பெருமை எனும் பாவத்திற்கு நாமே நூறு சதவீதம் உத்தரவாதிகளாகிறோம். இதன் காரணமாகவே பெருமைக்கு மிகவும் கடுமையான தண்டனை கொடுக்கப்படுகிறது. மரணத்துக்கேதுவான சில வியாதிகளுக்கும் மற்றும் சில மனநோய்களுக்கும் மனிதனின் இந்தப் பெருமையே நேரடியான காரணமாக உள்ளது. மிகவும் துக்ககரமான சில சம்பவங்களும் விபத்துக்களுங்கூட பெருமையின் விளைவாக இருக்கக்கூடும்.

லூசிபர் (அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளி) பெருமையான எந்தக் *கிரியையையும்* செய்யவில்லை. அவனுடைய மனதில் ஒரு பெருமையான எண்ணம் உதித்தது. அவ்வளவுதான்! "நான் வானத்துக்கு ஏறுவேன், ... என் சிங்காசனத்தை உயர்த்துவேன் ... என்றும் நீ உன் ***இருதயத்தில்*** சொன்னாயே" என அவனைக் குறித்து நாம் வாசிக்கிறோம் (ஏசாயா 14 : 13, 14). இது அவன் நித்தியமாக வேதனையை அனுபவிக்கும்படியாக, அகாதமான பாதாளத்துக்கு அவனைத் தள்ளிற்று. லூசிபரின் உள்ளத்தில் எழுந்த இப்பெருமையான எண்ணம் அந்த க்ஷணமே அவனை அகாதமான பாதாளத்திற்குத் தள்ளிற்றென்றால், நமது செயல்களிலும் மனப்பான்மைகளிலும் பெருமையை வெளிப்படுத்தியிருக்கிற நாம் எந்த அளவுக்கு அஞ்ச வேண்டியவர்களாயிருக்கிறோம்! நமது எல்லாப் பெருமைக்கும் இறுமாப்புக்கும் தக்கதாக பூமி இது வரை தன் வாயைத் திறந்து நம்மை

விழுங்காமலிருக்கிறது என்றால், அது தேவன் நம்மேல் பாராட்டிய அவரது இரக்கம் மாத்திரமே என்பதை நாம் தாழ்மையுடன் ஒத்துக்கொள்வோமாக!

பெருமையுள்ள ஒருவன் மனஸ்தாபத்துடன் தன்னைத் தாழ்த்தி கர்த்தரிடத்தில் திரும்பாவிட்டால், அவன் மிகவும் மோசமாக வாதிக்கப்பட்டு வேதனையை அனுபவிக்கும்படியாகப் பிசாசின் கரங்களில் ஒப்புக்கொடுக்கப்படுவதுங்கூட சாத்தியமாகும்: 'ஆகையால் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: அவன் தன் வளர்த்தியிலே மேட்டிமையாகி, கொப்புகளின் தழைகளுக்குள்ளே தன் நுனிக்கிளையை ஓங்கவிட்டபடியினாலும், அவனுடைய இருதயம் தன் மேட்டிமையினால் உயர்ந்துபோனபடியினாலும், நான் **அவனை ஜாதிகளில் மகா வல்லமையுள்ளவன் கையிலே ஒப்புக்கொடுத்தேன்**' (எசே. 31 : 10, 11 - Eng.). இங்கு கூறப்பட்டுள்ள "ஜாதிகளில் மகா வல்லமையுள்ளவன்" பிசாசானவனே.

அண்டசராசரம் அனைத்திலும் மிகவும் கொடிய அழிவுண்டாக்கும் ஒரு ஏது பெருமையே ஆகும். எல்லா யுத்தங்களுக்கும், வன்முறைச்செயல்களுக்கும், இரத்தஞ்சிந்துதலுக்கும் மனிதரிலுள்ள பெருமையே காரணமாகும். பெருமை நீக்கப்பட்டுவிடுமாயின் இந்தப் பூமி மெய்யாகவே பூரண சமாதானமும் மகிழ்ச்சியுமுள்ள ஒரு பரலோகமாகத் திகழும். சமாதானத்தையும் மகிழ்ச்சியையும் கொல்லுவது பெருமையே! தாழ்மையுள்ளவர்கள் (சிறுமைப்பட்டவர்கள், சாந்தகுணமுள்ளவர்கள்) மகிழ்வார்கள் என வேதவசனம் கூறுகிறது (சங். 34 : 2 ; 69 : 32 -Eng.). பெருமையானது இவ்வுலகிலேயே மிகவும் கொடிய அழிவுண்டாக்கும் வல்லமையாய் இருப்பது போல, தெய்வீகத் தாழ்மையானது மிகவும் ஆசீர்வதிக்கப்பட்ட ஆக்கவேலை செய்யும் ஒரு ஏதுவாக, நம்மில் மெய்யான தெய்வீக சுபாவத்தைக் கட்டியெழுப்பக் கூடியதாயிருக்கிறது. ஒருவனுடைய சுபாவம் மறுரூபமாக்கப்பட வேண்டு

மானால், அவன் முதலாவது செய்ய வேண்டியது தன்னைத்தான் தாழ்த்துவதேயாகும். தன்னைத்தான் தாழ்த்தாத ஒருவனுக்குப் பரலோகத்தைக் குறித்தோ, பரலோகத்திற்கடுத்த காரியங்களைக் குறித்தோ வாஞ்சை இராது.

பெருமையுள்ள ஒருவன் எவ்வளவாக நம்பிக்கையற்ற நிலையில் இருக்கிறான் என்பதையும், கர்த்தராகிய இயேசு எவ்வளவாக முற்றிலும் தாழ்மையுள்ளவராயிருக்கிறார் என்பதையும் இந்நூல் சித்திரிக்கிறது. இதனை வாசிக்கும் ஒரு நபர் தனது உண்மையான நிலைமையைக் கண்டுகொள்வதற்கும், தன்னைத்தான் தாழ்த்துவதற்கும், அதன் மூலம் ஒரு நேர்த்தியான, நற்கந்தம் வீசும் தாழ்மையின் வாழ்க்கையைப் பெற்றனுபவிக்கவும் இது வழிவகுக்கும். தாழ்மையில் தங்கியிருக்கும் எண்ணிறந்த ஆசீர்வாதங்களைப் பெற்றனுபவிக்கும்படி வாசகர் ஒவ்வொருவருக்கும் ஆண்டவர்தாமே அருள்புரிவாராக.

அதிகாரம் 1

விழுந்துபோன தூதர்களின் பெருமை

சிங்காசனங்கள், கர்த்தத்துவங்கள், துரைத்தனங்கள், அதிகாரங்கள் என தேவதூதர்களில் நான்கு வகுப்புகள் உள்ளன (கொலோ. 1 : 16). இவர்களில் சிலர் பெருமையின் காரணமாக விழுந்துபோயினர். விழுந்துபோன தூதர்களுள் குறிப்பாக ஐந்து கூட்டத்தினரைப் பற்றி வேதவாக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்கள் யாவரும் பொதுவாகப் பெருமையினிமித்தமே விழுந்துபோனபோதிலும், பெருமையானது அவர்களுக்குள் வெவ்வேறான உருவில் இருந்தது. பெருமையானது எந்த வடிவத்திலும் நமக்குள் நுழைந்து நம்மை அழித்துப்போடாதவாறு நாம் ஜாக்கிரதையாக இருப்பதற்கு இது நமக்கு ஓர் எச்சரிப்பாயிருக்கிறது.

விழுந்துபோன தூதர்களின் கூட்டத்தின் ஐந்து பிரிவுகளைப் பற்றியும், அவர்களுடைய விழுகைக்குக் காரணமாயிருந்த பெருமையின் வெவ்வேறு வகைகளைக் குறித்தும் நாம் இங்கு காண்போம்.

1. **லூசிபர்** (அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளி) :

"அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே, ... நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக

என் சிங்காசனத்தை உயர்த்துவேன்; வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும், நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்; உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும் நீ உன் இருதயத்தில் சொன்னாயே. ஆனாலும் நீ அகாதமான பாதாளத்திலே தள்ளுண்டு போனாய்" (ஏசாயா 14 : 12 - 15).

தன்னைத்தானே உயர்த்தியது அல்லது தனக்கு இருந்ததைக் காட்டிலும் உயர்ந்த ஸ்தானத்தையும் கனத்தையும் பற்றிப் பிடித்துக்கொள்ள முயற்சித்ததே லூசிபரின் பெருமையாகும். அவன் ஏற்கனவே மேன்மை பொருந்திய ஒரு தூதனாயிருந்தான்; ஒருவேளை அவன் ஒரு பிரதான தூதனாயிருந்திருக்கக் கூடும். அவனுக்கு ஒரு சிங்காசனமும் இருந்திருக்கக் கூடும். கர்த்தராகிய இயேசு பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமாக இருக்கிறார் (வெளி. 22 : 16); லூசிபர் 'அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளி' என்று அழைக்கப்பட்டான். இது இவன் மிகுந்த வல்லமையும் பிரகாசமுமுள்ள தூதனாயிருந்திருக்கிறான் என்பதைக் காட்டுகிறது. தேவன் அவனுக்கு அருளியிருந்த சகல வல்லமையிலும் மகிமையிலும் அவன் திருப்தியாய் இருக்கவில்லை. மாறாக இன்னும் அதிக வல்லமை, அதிக அந்தஸ்து, அதிக கனம் போன்றவற்றை அவன் விரும்பினான். இந்த ஆவியானது அரசியலிலும், மத சார்பற்ற உலகிலும் மாத்திரமல்ல, ஆவிக்குரிய அல்லது மத சம்பந்தப்பட்ட உலகிலுங்கூட மிக தீவிரமாகக் கிரியை செய்துவருகிறது. உலகில் மேலான அதிகாரம், தலைமை ஸ்தானம், உயர் பதவி, மேலான கனம் ஆகியவற்றை அடைவதற்காக மனிதரிடையே பெரும்பாலான சண்டைகளைத் தூண்டி விடுவது இந்த லூசிபரின் ஆவியே! பிறருடன் போட்டியிட்டுக்கொண்டு உயர்ந்த ஸ்தானங்களைப் பற்றிப் பிடித்துக் கொண்டவர்களான தலைவர்களில் பெரும்பான்மையினரும் உலகப்பிரகாரமான, அரசியல் சம்பந்தப்பட்ட, அல்லது மத

சார்புள்ள ஸ்தானங்களை வகிப்பினும், அவர்கள் *லூசிபரின் ஆவியினால் பீடிக்கப்பட்டவர்களே.* இக்கூற்று அதிர்ச்சியூட்டுவதாய் இருப்பினும் இது முற்றிலும் உண்மையே!

"***அவர் பெருகவும்*** (அதாவது என்னைவிட மற்றவர்கள் மேன்மையானவர்களும், பெரியவர்களும், அதிக கனம் பொருந்தியவர்களுமாக வேண்டும்) ***நான் சிறுகவும்*** வேண்டும் (அதாவது நான் கிறிஸ்துவுக்குள் முற்றிலுமாக மறைந்திருக்க வேண்டும்)" (யோவான் 3 : 30) என்று இருதயத்தின் ஆழத்திலிருந்து ஜெபிப்பதே தாழ்மையின் ஆவி ஆகும். "நீ உனக்குப் பெரிய காரியங்களைத் தேடுகிறாயோ? தேடாதே; இதோ, மாம்சமான யாவர்மேலும் தீங்கை வரப்பண்ணுகிறேன்" என்று கர்த்தர் உரைக்கிறார் (எரே. 45 : 5). இந்த உலகில் உயர்ந்த ஸ்தானத்தையும் அதிகாரத்தையும் தேடுவதற்குப் பதிலாக, நாம் நம்மைத் தாழ்த்தி, நித்தியமான வல்லமையையும் மகிமையையும் தேடும்படியாகக் கர்த்தர்தாமே நம் ஆவிக்குரிய கண்களைத் திறந்தருளுவாராக.

லூசிபரின் ஆவி, ஜனங்கள் தங்களைக் குறித்து மேன்மையாகவும், மற்றவர்களை அற்பமாகவும் எண்ணும்படி செய்கிறது. மற்றவர்களை அற்பமாக எண்ணுவது பெருமையின் ஒரு வடிவமே ஆகும். லூக்கா 18 : 11, 12 - இல் பரிசேயன் 'நான்' என்று ஐந்து முறை சொல்வதையும், ஏசாயா 14 : 13, 14 - இல் லூசிபரும் 'நான்' என்ற பதத்தை ஐந்து முறை பயன்படுத்துவதையும் இவ்வேதபகுதிகளின் ஆங்கில மொழிபெயர்ப்பில் நாம் காண்கிறோம். 'உன்னைவிட நான் பரிசுத்தன்' என்ற சிந்தை அல்லது மனப்பான்மையே லூசிபரின் ஆவியாகும்.

"நீ தரையிலே விழ வெட்டப்பட்டாயே!" என்றும், "நீ அகாதமான பாதாளத்திலே தள்ளுண்டுபோனாய்" என்றும் (ஏசாயா 14 : 12 , 15) லூசிபரைக் குறித்து நாம் வாசிக்கிறோம். பெருமையானது உண்மையில் நம்மைத் தரையில் விழ வெட்டப்படவும்,

பாதாளத்தில் தள்ளுண்டுபோகவும் பண்ணும். மேலும் மிகுந்த வல்லமையுள்ள தூதனாயிருந்த லூசிபர் விழுந்தபோது பலட்சயமானான், அதாவது பெலவீனனானான் (வச. 10). பெருமை நம்மை ஆவியிலும், சில சமயங்களில் சரீரத்திலுங்கூட பெலவீனராக்கிவிடும். மறுபக்கத்தில் மெய்யான தாழ்மையோ நம்மைப் பெலப்படுத்துகிறது. அருமை நண்பனே! உன்னிலிருப்பது கிறிஸ்துவின் ஆவியா அல்லது லூசிபரின் ஆவியா? - நீ எந்த ஆவியை உடையவனாக இருக்கிறாய்?

2. அபிஷேகம்பண்ணப்பட்ட கேரூப் :

"நீ காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம்பண்ணப்பட்ட கேரூப்; தேவனுடைய பரிசுத்த பர்வதத்தில் உன்னை வைத்தேன்; அக்கினிமயமான கற்களின் நடுவே உலாவினாய். நீ சிருஷ்டிக்கப்பட்ட நாள் துவக்கி உன்னில் அநியாயம் கண்டுபிடிக்கப்பட்டது மட்டும், உன் வழிகளில் குறையற்றிருந்தாய். உன் வியாபாரத்தின் மிகுதியினால், உன் கொடுமை அதிகரித்து நீ பாவஞ்செய்தாய்; ஆகையால் நான் உன்னைத் தேவனுடைய பர்வதத்திலிருந்து ஆகாதவனென்று தள்ளி, காப்பாற்றுகிற கேருபாய் இருந்த உன்னை அக்கினிமயமான கற்களின் நடுவே இராதபடிக்கு அழித்துப்போடுவேன். உன் அழகினால் உன் இருதயம் மேட்டிமையாயிற்று; உன் மினுக்கினால் உன் ஞானத்தைக் கெடுத்தாய்; உன்னைத் தரையிலே தள்ளிப்போடுவேன்" (எசே. 28 : 14 - 17).

அபிஷேகம் பண்ணப்பட்ட கேருபைக் குறித்து மேலே கூறப்பட்டுள்ள வேதவசனங்களின் விளக்கத்திலிருந்து, அவன் வல்லமையிலும் மகிமையிலும் லூசிபரைவிட மிகவும் உயர்ந்தவனாய் இருந்திருக்க வேண்டுமென நாம் விளங்கிக்கொள்ளுகிறோம். அவன் தானியேலைப் பார்க்கிலும் ஞானமுள்ளவனாயிருந்திருக்கிறான் (எசே. 28 : 3). லூசிபர் தேவனுடைய பரிசுத்த பர்வதத்திற்கு ஏற விரும்பினான். ஆனால் அபிஷேகம்

பண்ணப்பட்ட கேருபோ ஏற்கனவே அங்கே இருந்தான். இந்தத் தூதனை மூடிக்கொண்டிருந்த ஒன்பது வித விலையேறப்பெற்ற கற்களும் பின்னாட்களில் பிரதான ஆசாரியனுடைய மார்ப்பதக்கத்தில் காணப்பட்டன. அவன் அழகிலும் ஞானத்திலும் பிரகாசத்திலும் பூரணனாயிருந்து "அக்கினிமயமான கற்களின் நடுவே" உலாவிக்கொண்டிருந்தான். கற்பனை செய்துகூட பார்க்கக்கூடாத அளவிற்கு அவன் எவ்வளவு அழகும் பிரகாசமும் உடையவனாய் இருந்திருக்க வேண்டும்! அவனுடைய பெருமைதான் என்ன? அது தேவன் அவனுக்கு அளித்திருந்த மேன்மையைக் குறித்த பெருமை - அதாவது, அவனுக்கு அவர் கொடுத்திருந்த அழகு, ஞானம் என்பவை குறித்த பெருமையே ஆகும். நம்மைப் பொறுத்தவரை இது கர்த்தரால் நமக்கு அருளப்பட்டிருக்கும் வரங்கள், தாலந்துகள், திறமைகள், வெளிப்படுத்தல்கள் போன்றவற்றைக் குறித்த பெருமையாகும்; அல்லது நாம் கர்த்தரின் சேவையில் எவ்வளவு பிரயோஜனமுள்ளவர்களாயிருக்கிறோம் என்பதைப் பற்றிய பெருமையாகும்.

"நீ காப்பாற்றுகிறதற்காக (Eng. - covereth) அபிஷேகம் பண்ணப்பட்ட கேருப்" (எசே. 28 : 14) - ஒருவேளை அவன் கிருபாசனத்தை மூடியிருந்த கேருபீன்களில் ஒன்றைப் போல இருந்திருக்கக் கூடும். அப்படியானால் அவன் தூதர்களுள் மிக மேன்மையானவர்களிலும் மிகவும் பிரயோஜனமானவர்களிலும் ஒருவனாய் இருந்திருக்க வேண்டும்! தன் ஊழியத்திற்காகத் தேவனால் அருளப்பட்ட ஒரு விசேஷித்த அபிஷேகம் அவனில் இருந்தது. மிகவும் விலையேறப்பெற்ற கற்கள் அவனை மூடிக்கொண்டிருந்ததுமல்லாமல், அவனில் இசைக்கருவிகளும் ஆயத்தப்பட்டிருந்தன (வச. 13). ஆகவே அவன் அசைவாடும்போது அவனிலிருந்து இன்னிசை எழுந்திருக்கக் கூடும். மேலும் அவன் மனிதரின் கற்பனைக்கு அப்பாற்பட்ட விதத்தில் ஒளிமிளிரும் பிரகாசமுள்ளவனாய் மின்னித்துலங்கிக் கொண்டிருந்திருக்கக்

கூடும். அவன் ஒருவேளை பரலோக இசைக்குழுவின் தலைவனாக இருந்திருப்பான். ஆனால் இவை யாவும் அவனுக்குத் தேவனால் அருளப்பட்ட ஈவுகள் மாத்திரமே என்பதை உணராத அவனுடைய இருதயம் பெருமையினால் மேட்டிமையடைந்திருந்தது.

எசேக்கியேல் 28 : 19 - இல், "ஜனங்களில் உன்னை அறிந்த அனைவரும் உன்னிமித்தம் திகைப்பார்கள்; மகா பயங்கரமாவாய்; இனி ஒருபோதும் இருக்கமாட்டாய்" என நாம் வாசிக்கிறோம். இவ்வசனத்தின் ஒரு ஆங்கில மொழிபெயர்ப்பு (NIV), 'நீ ஒரு பயங்கரமான முடிவிற்கு வந்திருக்கிறாய்' என்று கூறுகிறது. அதிக தாலந்துகள் உள்ளவனாயிருந்தபோதிலும் இந்தக் கேருப் ஒரு பயங்கரமான முடிவை அடைந்தான். இது நம்மெல்லாருக்கும் ஒரு எச்சரிப்பாயிருப்பதாக. தேவனுடைய இரக்கத்தினால் நம்மில் சிலர் கர்த்தரின் சேவையில் பலவிதங்களில் பிரயோஜனமுள்ளவர்களாயும், பலவித வரங்களாலும் தாலந்துகளாலும் பிரகாசிப்பவர்களாயும் இருக்கக் கூடும். ஆனால் நாம் நெருப்பிலிடப்பட்ட கரித்துண்டைப் போன்றவர்களே என்பதை எப்போதும் நம் நினைவிற்கொள்ள வேண்டும். நெருப்பு அணைந்த பின் மிஞ்சுவது கறுப்பான கரித்துண்டு மட்டுமே; அதைத் தொடும் எவரையும் அது மாசுப்படுத்திவிடும்!

நாம் எவ்வளவு அதிக வரங்களுடையவர்களாயிருக்கிறோமோ, எவ்வளவு அதிகமாய்க் கர்த்தருக்காகப் பிரயோஜனப்படுகிறோமோ, அவ்வளவு அதிகமாய் அவருக்குக் கடமைப்பட்டவர்களாயும் இருக்கிறோம். நம்மில் ஏதாயினும் நன்மை இருக்குமாயின், அல்லது சமுதாயத்திலோ, சபையிலோ நாம் ஒரு நபராக இருப்போமாயின், அதெல்லாம் அவருடைய கிருபை மாத்திரமே. எனவே, நாம் இன்னும் அதிகமதிகமாய் நன்றியுள்ளவர்களாகவும் அவருக்கு முன்பாகத் தாழ்மையுள்ளவர்களாகவும் இருப்போமாக.

3. ஐபிராத்து நதியண்டையில் கட்டப்பட்டிருக்கிற நான்கு தூதர்கள் :

"எக்காளத்தைப் பிடித்திருந்த ஆறாம் தூதனை நோக்கி: ஐபிராத்தென்னும் பெரிய நதியண்டையிலே கட்டப்பட்டிருக்கிற நான்கு தூதர்களையும் அவிழ்த்துவிடு என்று சொல்லக்கேட்டேன். அப்பொழுது மனுஷரில் மூன்றிலொருபங்கைக் கொல்லும்படிக்கு ஒருமணிநேரத்திற்கும், ஒரு நாளுக்கும், ஒரு மாதத்திற்கும், ஒரு வருஷத்திற்கும் ஆயத்தமாக்கப்பட்டிருந்த அந்த நான்கு தூதர்களும் அவிழ்த்துவிடப்பட்டார்கள்" (வெளி. 9 : 14, 15).

மேற்கூறப்பட்டுள்ள விழுந்துபோன நான்கு தூதர்களும் தாங்கள் அவிழ்த்துவிடப்பட்டவுடனே புறப்பட்டுப் போய் பூமியின் ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கைக் கொல்லுவார்கள். அப்போது பூமியின் ஜனத்தொகை சுமார் 600 கோடியாக (6 பில்லியன்) இருக்குமானால், அதில் 200 கோடி மக்கள், விழுந்துபோன இந்த நான்கு தூதர்களால் கொல்லப்படுவார்கள். உலக சரித்திரத்திலேயே - ஹிரோஷிமா அல்லது நாகசாகி அழிவிலும், மற்றும் ஹிட்லர் காலத்திலுங்கூட - இப்படிப்பட்ட சம்பவம் நிகழ்ந்ததில்லை. எனவே இந்த நான்கு தூதர்களும் கொலைபாதக ஆவிகள் என்பது மிகத் தெளிவாகிறது. விழுந்துபோன இந்த நான்கு தூதர்களின் மேட்டிமை, கோபத்தின் மூலமாக வெளிப்படுத்தப்படும் பெருமையாகும். கோபத்தின் ஆவியே கொலைபாதகத்தின் ஆவியாகும். முதன்முதலில் கோபங்கொண்ட மனிதன் (காயீன்) ஒரு கொலை செய்தான் (ஆதி. 4 : 5, 8). ஏரோது கோபங்கொண்டு பெத்லகேமிலிருந்த இரண்டு வயதுக்குட்பட்ட எல்லா ஆண்குழந்தைகளையும் கொன்றான் (மத். 2 : 16). கோபமும் பெருமையும் எப்போதும் ஒருங்கிணைந்தே செல்கின்றன. உண்மையில், கோபம் என்பது மிகுதியான பெருமையின் ஒரு நிச்சயமான அடையாளமாகும். 'மோவாப் மெத்தப் பெருமைக்காரன்; அவன் பெருமையையும் மூர்க்கத்தையும் நான் அறிவேன்

என்று கர்த்தர் சொல்லுகிறார்' (எரே. 48 : 29, 30). "மோவாபின் பெருமையையும், ... அவன் ***அகங்காரத்தையும், அவன் உக்கிரத்தையும்*** குறித்துக் கேட்டோம்; அவன் மெத்தப் பெருமைக்காரன்" (ஏசாயா 16 : 6). "அகங்காரமும் இடும்புமுள்ளவனுக்குப் பரியாசக்காரனென்று பெயர், அவன் ***அகந்தையான சினத்தோடே*** நடக்கிறான்" (நீதி. 21 : 24). தன்னிலிருந்த பெருமையினிமித்தமாக, தாவீது தேவனால் நியமிக்கப்பட்ட ராஜா என்பதை ஏற்றுக் கொள்ள முடியாதிருந்த சவுல், அவன்மீது அநேகமுறை சினங் கொண்டு அவனைக் கொலைசெய்ய எத்தனித்தான். அவ்வாறே ராஜாவாகிய உசியா மனமேட்டிமையுள்ளவனானபோது, கர்த்தரின் ஊழியக்காரர் மேல் வெகுவாய்க் கோபங்கொண்டான் (II நாளா. 26 : 16 - 19).

கோபத்தில் பல வகைகள் உள்ளன. அவற்றுள் 'மறைவான கோபமே' மிகவும் மோசமான வகை கோபமாகும் - அதாவது, அது ஒரு மனுஷனுக்கு விரோதமாக உள்ளத்திற்குள் கோபத்தை வைத்துக்கொண்டு, புறம்பாகவோ, அந்த மனிதனைப் பார்க்கும் போது புன்முறுவல் புரிவதாகும். *கோபத்தின் பல வகைகளுள், மிகவும் மோசமான இவ்வகையான கோப சுபாவம் உள்ளவர்கள் இந்தச் சுபாவம் தங்களிலிருப்பது தங்களுக்கு ஒரு பிரச்சினையே அல்ல என்று நினைக்கின்றனர்.* இது மிகப் பெரிய வஞ்சனையாகும். காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள் என்று வேதாகமம் கூறுகிறது. திருடுதல், புகை பிடித்தல், மது அருந்துதல் முதலான பாவங்கள் பாதாளத்தில் தொடர முடியாது. ஆனால் ஒரு கோபக்காரன் நரகத்திலுங்கூட தொடர்ந்து கோபக்காரனாக இருப்பான் என வேதாகமம் கூறுகிறது; உண்மையில் அவன் கோபத்தினால் அங்கு தன் பற்களைக் கடித்துக்கொண்டிருப்பான் (மத். 8 : 12).

மறைவான கோபத்திற்கு வேதாகமத்தில் ஒரு உதாரணம் உள்ளது. லேவியும் சிமியோனும் தங்கள் சகோதரியாகிய தீனாளை ஏமோரின் குமாரனாகிய சீகேம் என்னும் பிரபு தீட்டுப்படுத்தி

விட்டதாகக் கேள்விப்பட்டபோது, தங்கள் கோபத்தை மனதில் மறைத்து வைத்து, ஏமோரின் புத்திரருடன் விவாக சம்பந்தம் செய்ய விருப்பம் கொண்டவர்களைப் போல் பாசாங்கு செய்தார்கள். தக்க தருணம் கிடைத்தபோது அவர்கள் பட்டயங்களை எடுத்து அப்பட்டணத்து ஆண்மக்கள் யாவரையும் கொன்றுபோட்டார்கள் (ஆதி. 34 : 25). அவர்களுடைய கோபம் அவ்வளவு பொல்லாததாயிருந்தபடியால், அவர்களுடைய தகப்பனாகிய யாக்கோபும் தன் மரணப்படுக்கையில் அவர்களது கோபத்தைச் சபித்தான்: "சிமியோனும், லேவியும் ஏகசகோதரர்; அவர்களுடைய பட்டயங்கள் கொடுமையின் கருவிகள். என் ஆத்துமாவே, அவர்களுடைய இரகசிய ஆலோசனைக்கு உடன்படாதே; என் மேன்மையே, அவர்கள் கூட்டத்தில் நீ சேராதே; அவர்கள் தங்கள் கோபத்தினாலே ஒரு புருஷனைக் கொன்று, தங்கள் அகங்காரத்தினாலே அரண்களை நிர்மூலமாக்கினார்களே. *உக்கிரமான அவர்கள் கோபமும் கொடுமையான அவர்கள் மூர்க்கமும் சபிக்கப்படக்கடவது;* யாக்கோபிலே அவர்களைப் பிரியவும், இஸ்ரவேலிலே அவர்களைச் சிதறவும்பண்ணுவேன்" (ஆதி. 49 : 5 - 7). யாக்கோபு தன் குமாரர் யாவரையும் ஆசீர்வதித்தான்; ஆயினும் சிமியோனுக்கும் லேவிக்கும் அவன் ஒரு ஆசீர்வாதமும் கொடுக்கவில்லை - சாபம் மட்டுமே அவர்களுக்குக் கிடைத்தது.

ஒரு வகையில், கோபக்காரன் மதுபானத்திற்கு அடிமைப் பட்டிருக்கும் ஒருவனைப் பார்க்கிலும் மோசமானவன். மதுபானத்திற்கு அடிமைப்பட்ட ஒருவன் அதை அருந்தாமல் இருக்கும் சில சமயங்களிலாகிலும் நல்லவனாக இருக்கக் கூடும். ஆனால் ஒரு கோபக்காரன் எப்போதுமே அபாயகரமானவன். சடுதியாக வெடித்துச் சிதறி, பெரும் நாசம் விளைவிக்கும் ஒரு எரிமலையைப் போல் அவனுடைய கோபம் சடுதியான அழிவையும் மரணத்தையும் வருவிக்கக் கூடும்.

அருமையான நண்பனே! நீ ஒருவேளை மிக மோசமான வகை கோபம் உடையவனாக இருக்கலாம் - உன் கோபம், எரிச்சல், வெறுப்பு, பகை, கசப்பு போன்றவற்றை மூடி மறைத்து வைக்கக்கூடிய திறமைசாலியாக நீ இருக்கக் கூடும். புறம்பாக நீ கனிவான உள்ளமுள்ளவனாகத் தோற்றமளித்துக்கொண்டு, உள்ளாகவோ கோபத்தினால் கொதித்துக்கொண்டு இருக்கலாம். இதுவே மிகவும் மோசமான வகை கோபமாகும்; இது மாய்மாலம் செய்தல் ஆகும். உன் (பரம) பிதாவினிடத்திலிருந்து ஒரு சாபத்தை நீ பெறுமுன் நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்துடன் மனந்திரும்புவாயாக! இந்தப் பயங்கரமான கோபத்தின் ஆவியிலிருந்து ஆச்சரியமான விடுதலை பெற்ற ஏராளமான கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். அதன் பின்னர் அவர்களது வாழ்க்கை முற்றிலுமாக மறுரூபமாக்கப்பட்டிருக்கிறது. அவர்களில் சிலர் தாங்கள் கோபத்தின் ஆவியிலிருந்து விடுதலையாக்கப்பட்டபோது, சிங்கம், புலி போன்ற ஏதோ ஒரு துஷ்ட மிருகம் தங்களை விட்டு வெளியே சென்றதைப் போல் தாங்கள் உணர்ந்ததாகச் சாட்சி பகர்ந்திருக்கிறார்கள். உன்னிலுள்ள கோபத்தின் ஆவி அநேகரைக் கொல்லும் ஆற்றலையுடைய பயங்கரமான கொலைபாதகத்தின் ஆவியாகிய பிசாசின் ஆவி என்று நீ உணருவாயானால் உன் உள்ளத்தின் ஆழத்திலிருந்து தேவனை நோக்கிக் கதறுவாய்! அப்பொழுது நீ முழுமையான விடுதலையைப் பெறுவாய்; ஒரு ஆச்சரியமான சமாதானமும் உன்மேல் உதிக்கும். இருள் நீக்கப்படும்போது வெளிச்சம் உட்பிரவேசிப்பது போல, உன்னிலுள்ள கோபத்தின் ஆவி நீங்கும்போது உன் இருதயத்தை ஒரு அமைதியான, சாந்தமுள்ள ஆவி நிறைத்துவிடும். நீ கோபப்பட விரும்பினாலுங்கூட உன்னால் கோபப்பட முடியாத அளவிற்குச் சாந்தமுள்ள ஆவியுள்ளவனாயிருக்கும் இடத்துக்கு உன்னைக் கொண்டுவர கர்த்தரால் கூடும். அது அவருடைய அதிசயமான கிருபையாகும். மெய்யான தாழ்மையுள்ள ஒருவன் கோபம், எரிச்சல், வெறுப்பு, கசப்பு, கடுஞ்சின எதிர்ப்பு ஆகியவற்றினின்று விடுதலை பெற்ற

வனாக இருப்பான். ஏனெனில் இவை யாவும் பெருமையின் தீமையான பக்கவிளைவுகள் ஆகும். இந்தப் பெருமையாகிய கண்ணியிலிருந்து நாம் விடுதலையாக்கப்படும்படி அருமை ஆண்டவர்தாமே நமக்குக் கிறிஸ்துவின் தாழ்மையை அனுதினமும் போதிப்பாராக!

4. *நித்திய சங்கிலிகளால் கட்டப்பட்டு, அந்தகாரத்தில் அடைத்து வைக்கப்பட்டிருக்கிற தூதர்கள் :*

"தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும், மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்துவைத்திருக்கிறார்" (யூதா 6). "பாவஞ்செய்த தூதர்களைத் தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுத்(தார்)" (II பேதுரு 2 : 4).

தூதர்களில் இக்கூட்டத்தினரின் பாவம்தான் என்ன? அது சுயாதீனமாய் நடத்தலின் அல்லது சுய சித்தத்தைச் செய்தலின் பெருமையே ஆகும். இவர்கள், தேவன் தங்களை வைத்த இடத்தில் நிலைத்திருக்க விரும்பவில்லை. தாங்கள் இருந்த இடம் மிகச் சிறந்தது அல்ல என்பது போலவும், தாங்கள் சென்றடைவதற்கு அதைவிட இன்னும் மேன்மையான இடம் தங்களுக்குத் தெரியும் என்பது போலவும் அவர்கள் நடந்துகொண்டார்கள். அவர்கள் மேன்மையுள்ள தூதர்களாய் இருந்தபோதிலும் தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்டு தேவனுடைய சித்தத்திற்குப் புறம்பே அலைந்து திரிந்தனர். நாமும் அவ்விதமே இருக்கக் கூடும். சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல், மற்றவர்களிடம் கர்த்தரைக் குறித்து சாட்சி பகருதல், ஏழைகளைப் போஷித்தல் போன்ற அநேக நற்கிரியைகளை நாம் செய்யக் கூடும். ஆனால் அவை அவ்வேளையில் நாம் செய்ய வேண்டிய தேவனுடைய சித்தமாயிராமல், நமது சொந்தத் திட்டமும் சித்தமுமாகவே

இருக்கக் கூடும். நாம் கர்த்தரின் சேவையில் நட்சத்திரங்களைப் போல் பிரகாசிக்கிறவர்களாயிருந்தாலும், தேவசித்தத்தை விட்டு விலகி, மார்க்கந்தப்பி அலைகிறவர்களாயிருப்போமாயின், நித்தியத்தில் காரிருளே நம் பங்காயிருக்கும்; இவர்கள் "மார்க்கந்தப்பி அலைகிற நட்சத்திரங்களுமாயிருக்கிறார்கள்; இவர்களுக்காக என்றென்றைக்கும் காரிருளே வைக்கப்பட்டிருக்கிறது" (யூதா 13) என திருவசனம் நம்மை எச்சரிக்கிறது. கர்த்தரின் சித்தத்தின் மத்தியில் நிலைத்திராமற்போவது தேவனுக்கு விரோதமாய்க் கலகம்பண்ணுவதேயன்றி வேறல்ல. யோனா கர்த்தருடைய சமுகத்தை விட்டு ஓடிப்போனபோது துவக்கத்தில் சகலமும் அவனுக்குச் சுமூகமாகத் தோன்றின. ஆனால் பின்பு ஒரு பெருங்காற்று கப்பலில் மோத, அவன் ஆழ்ந்த பிரச்சினைக்குள்ளானான். தேவனுடைய சித்தத்தைவிட்டு நாம் வெளியே செல்லும்போது ஒருவேளை உடனடியாக எந்தப் பிரச்சினையும் நம்மைச் சந்திக்காமல் சகலமும் சுமூகமாகவே இருப்பது போல நமக்குத் தோன்றலாம். ஆனால் நிச்சயமாகவே ஒரு 'பெருங்காற்று' அடிப்பதுமல்லாமல் அதினின்று நாம் தப்பிப் பிழைப்பதும் கடினமாகிவிடும்! யோனாவைப் போல நாமும் நம்முடன் கூட இருப்பவர்களின் ஜீவனுக்கே அபாயம் விளைவிக்கவும் கூடும்.

மேலும் சுயாதீன ஆவியானது நம்மை முறையிடவும் முறுமுறுக்கவும் செய்கிறது (யூதா 16); நாம் கர்த்தத்துவத்தை (ஆளுகைகளை) அசட்டைபண்ணி, மகத்துவங்களைத் தூஷிக்க அஞ்சாதவர்களாகிறோம் (வச. 8). சுயாதீனமாய் நடந்த தூதர்கள் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டப்பட்டு, காரிருளில் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று ஏற்கனவே நாம் கண்டோம். இந்த அந்தகாரம் சாதாரண இருள் அல்ல; இது தாங்கமுடியாத வேதனையைக் கொடுத்து, சித்திரவதைக்குள்ளாக்கும் ஒரு இருளாகும். "ஐந்தாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை மிருகத்தினுடைய சிங்காசனத்தின்மேல் ஊற்றினான்; அப்பொழுது அதின் ராஜ்யம் இருளடைந்தது; அவர்கள் வருத்தத்தினாலே தங்கள் நாவுகளைக் கடித்துக்கொண்டார்கள்"

(வெளி. 16 : 10). இந்த இருள் அவர்கள் தங்கள் வேதனையின் மிகுதியினால் தங்கள் நாவுகளைக் கடித்துக்கொள்ளும் அளவுக்கு வேதனையுள்ளதாய் இருக்கும். சுயாதீனத்தினால் வரும் பெருமை அல்லது நமது சுயசித்தத்தின்படி ஊழியம் செய்வது முடிவில் நம் வாழ்வில் காரிருளைக் கொண்டுவரும்.

அருமை நண்பனே! நீ உன் சொந்தச் சித்தத்தைச் செய்துகொண்டிருக்கிறாயா? நீ சுயாதீன ஆவியின் பெருமையுள்ளவனாய், மற்றவர்களோடு (அதாவது, நீ யாரோடு கலந்தாலோசிக்க வேண்டுமோ அவர்களோடு) கலந்தாலோசிக்க வேண்டிய அவசியமில்லை என்று எண்ணிக் கொண்டிருக்கக் கூடும். இந்தச் சுயாதீன ஆவியின் பெருமையை நீ விட்டுவிடு. மார்க்கந்தப்பி அலைந்து திரியும் நட்சத்திரமாக நீ இராதே. தேவனும், உன்னை நடத்தும்படி அவரால் நியமிக்கப்பட்டிருப்பவர்களும் உன்னை எங்கு நடத்துகிறார்களோ, அங்கு செல். தேவனுடைய கிருபை உன்னைக் காக்க முடியாத இடத்திற்கு அவருடைய சித்தம் உன்னை ஒருபோதும் எடுத்துச் செல்லாது.

5. சாத்தான் :

சாத்தான் விழுந்துபோன தூதர்கள் அனைவருக்கும் தலைவன் ஆவான். கர்த்தராகிய இயேசுவின் கூற்றும் இதனை உறுதிப்படுத்துகிறது (லூக்கா 11 : 15, 18). சாத்தான் எல்லாத் தீமைகளின் உருவாய் இருக்கிறான். அவனுடைய பெருமையே, பெருமைகளிலெல்லாம் மிக மோசமான பெருமையாகும் - அது தந்திரமான பெருமை அல்லது மறைவான பெருமையாகும். அவனுடைய கிரியைகள் யாவும் மிகவும் தந்திரமானவை. அவன் தனது உபாய தந்திரத்தினால் மனுஷருடைய *மனதைக் கெடுக்கிறான்*. "ஆகிலும், சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்ததுபோல, உங்கள் மனதும் கிறிஸ்துவைப் பற்றிய உண்மையினின்று விலகும்படி கெடுக்கப்படுமோவென்று பயந்திருக்கிறேன்" (II கொரி. 11 : 3) என்று அப். பவுல் கூறுகிறார். ஒரு அர்த்தத்தில் ஒருவனுடைய ஆவி, ஆத்துமா, சரீரம்

ஆகியவற்றை மனதுதான் தலைமைதாங்கி நடத்துகிறது. ஒரு நாட்டின் தலைநகர் கைப்பற்றப்பட்டுவிட்டால் மற்ற இடங்கள் யாவும் இலகுவாகக் கைப்பற்றப்படக் கூடும். மனதின் பெலனே ஒரு மனிதனின் உண்மையான பெலன் என்பதைச் சாத்தான் நன்கு அறிவான். நமது மனது சாத்தானால் கெடுக்கப்பட்டு அல்லது கைப்பற்றப்பட்டுவிடுமாகில், நாம் தொடர்ந்து ஆலயத் திற்குச் செல்லுதல், ஜெபம் செய்தல், வேதம் வாசித்தல் ஆகிய வற்றைச் செய்துகொண்டிருந்தாலும் ஏற்கனவே நாம் அவன் கைவசமாகிவிடுகிறோம். நம்முடைய மனது கெடுக்கப்படும்போது நாமும் கெடுக்கப்படுகிறோம். நம் மனதில் விழுகை சம்பவிக்கும் போது, நாமும் விழுந்துபோகிறோம்.

'பொய்யான தாழ்மையிலும் விருப்பமுற்று எவனும் உங்கள் பந்தயப்பொருளை நீங்கள் இழந்துபோகும்படி உங்களை வஞ்சியாதிருக்கப்பாருங்கள்' (கொலோ. 2 : 19 NKJV). நாம் கவனமாயிராவிட்டால் 'பொய்யான தாழ்மையில்' அகப்பட ஏதுவாகும்; இதுவும் ஆபத்தானது. அதிக பெருமையுள்ள ஒருவன் தன்னை மிகவும் தாழ்மையுள்ளவன் என்று எண்ணிக்கொண்டால், இந்தப் பெருமையிலிருந்து அவன் விடுபடுவான் என்ற நம்பிக்கைக்கே இடம் இல்லை. நாம் தாழ்மையுள்ளவர்கள் போல் காணப்படக் கூடும் - அநேகர் நமது தாழ்மையை மெச்சிக் கொள்ளக் கூடும். சாத்தானும் இப்பெரும் பொய்யை நாம் நம்பும்படி செய்வான். ஏனெனில் அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாய் இருக்கிறான். மிகவும் தாழ்மையுள்ளவர்களைப் போல் காணப்படுகிற சிலர் மிகவும் மோசமான வகைப் பெருமை யுள்ளவர்களாக இருக்கக் கூடும் என்பது அதிர்ச்சியூட்டக் கூடியதாயிருப்பினும் உண்மை இதுவே!

ஒரு தேவபிள்ளை தன் தரிசனத்தில் ஏராளம் பேர் பர லோகத்தை நோக்கி ஓடிக்கொண்டிருப்பதைக் கண்டார்கள். அவர்கள் யாவரும் நீண்ட தூரம் ஓடி ஓடி, முடிவாகப் பரலோ கத்தின் வாசலை அடைந்தனர். தங்கள் நீண்ட காலப் பயணத்தின்

முடிவில், தாங்கள் நாடிவந்த இலக்கை வந்தெட்டிவிட்டதைக் கண்டு, அவர்கள் மிகவும் உள்ளம் பூரித்தனர். ஆவலுடன் அவர்கள் உட்பிரவேசிக்கப்போகையில் அதன் நுழைவாயிலில் நின்றுகொண்டிருந்த தேவதூதர்கள், 'நீங்கள் இவ்வளவு தூரம் ஓடிவந்தது நல்லதுதான்; ஆயினும் நீங்கள் உட்பிரவேசிப்பதற்கான அனுமதிச் சீட்டு எங்கே?' என்று கேட்டனர். தாங்கள் சற்றும் எதிர்பார்த்திராத இக்கேள்வியைக் கேட்டு, அவர்களில் பெரும் பாலானோரும் அதிர்ச்சியுற்று, திகைத்துப்போயினர். வெகு சிலரிடம் மாத்திரமே அவர்களிடம் எதிர்பார்க்கப்பட்ட அனுமதிச் சீட்டு இருந்தது. அவர்களுக்கு மாத்திரம் பரலோகத்தினுள் பிரவேசம் அளிக்கப்பட்டது. ராஜமரியாதையுடன் அவர்கள் பிதாவின் ராஜ்யத்திற்குள் வரவேற்கப்பட்டனர். மற்றவர்களோ வெட்கத்துடனும் துக்கத்துடனும் மனவேதனையுடனும் முகம் கறுத்துப்போனவர்களாய்ப் பின்னிட்டுத் திரும்பினர்!

வெகு சிலரின் கரங்களில் இருந்த அனுமதிச் சீட்டில் இரு வார்த்தைகள் மாத்திரமே பொறிக்கப்பட்டிருந்தன. அவை 'தாழ்மை, தூய்மை' (humility, purity) என்பவையே. திரும்பிச் சென்றவர்களில் வேறு பல நற்குணங்கள் இருந்தபோதிலும், தாழ்மையும் தூய்மையும் அவர்களிடம் இருக்கவில்லை. சிலர் தங்களில் தாழ்மை இருந்ததாக எண்ணி வஞ்சிக்கப்பட்டி ருந்தார்கள். ஆனால் அது பொய்யான தாழ்மையே!

இலட்சக்கணக்கானோர் உன்னைத் தாழ்மையுள்ளவன் என்று கூறினாலும், நீ ஒருபோதும் உன்னைத் தாழ்மை யுள்ளவன் என்று எண்ணிக்கொள்ளாதே! உன்னைத் தாழ்மை யுள்ளவன் என்று நீ எண்ணும் அந்த க்ஷணமே நீ பெருமை என்னும் அகாதமான பாதாளத்தில் விழுந்துவிடுகிறாய் - ஏனெனில் பெருமை ஒரு அகாதமான பாதாளம்! உன்னிடத்தில் கர்த்தராகிய இயேசு எப்போதாவது நீ தாழ்மையுள்ளவன் என்று கூறியிருக்கிறாரா? ஒருவேளை பிசாசானவன் அவ்வாறு உன்னிடம் கூறியிருப்பான். ஒருவனைக் குறித்து அவன்

தாழ்மையுள்ளவன் என்று தேவன் சொல்லும் சத்தத்தை எப்போதாவது நீ கேட்டதுண்டா? ஒரு பரிசுத்தவானின் தாழ்மை அவருடைய மரணத்திற்குப் பின் புகழப்படலாமேயன்றி, ஒருபோதும் அவரது மரணத்திற்கு முன்பு அல்ல. ஏனென்றால் அவர் மரிப்பதற்குச் சற்று முன்பு கூட மிகவும் பெருமையடைந்து தன் ஆசீர்வாதங்கள் யாவற்றையும் இழந்துவிடக்கூடும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஆசியாவில் இருந்த ஏழு சபைகளைக் குறித்தும் அவர்களது கிரியைகள், பிரயாசங்கள், பொறுமை, ஊழியம், விசுவாசம், அன்பு முதலானவற்றைப் பாராட்டினாரேயொழிய, ஒருபோதும் அவர்களது தாழ்மையைப் பாராட்டவில்லை என்பதை வெளிப்படுத்தின விசேஷம் இரண்டாம், மூன்றாம் அதிகாரங்களின் வாயிலாக நாம் அறிந்துகொள்கிறோம்.

நாம் நமது மனதைக் கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்து 'தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த ***எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்தி'*** (II கொரி. 10 : 5), ***உண்மையான மனத்தாழ்மையைத்*** தரித்துக் கொள்ள ஆண்டவர் தாமே நமக்கு உதவி செய்வாராக.

நமது பெருமை இமயமலையைப் போன்றது. நமது எல்லாப் பெருமைகளும் ஒரு நாளில் நமக்கு ஒருமிக்கக் காட்டப்படுமானால் அதன் சுமை தாங்காமல் நாம் விழுந்து மரித்துப் போகக்கூடும். எனவே தேவன் தமது இரக்கங்களினிமித்தம் ஒவ்வொரு முறையும் நாம் சந்திக்கும் சோதனைகள், கஷ்டங்கள் மூலமாக அவ்வப்போது நம்மிலுள்ள பெருமையின் கொஞ்சப் பகுதியை நமக்குச் சுட்டிக்காட்டுவதால் நாம் நம்மைத் தாழ்த்தி, மனந்திரும்பி, ஒவ்வொரு நாளும் கர்த்தர் பக்கமாகத் திரும்ப அது ஏதுவாகிறது. நமது பெருமை அகாதமான பாதாளத்தைப் போன்றது. நாம் எவ்வளவு ஆழமாகச் சென்று ஆராய்கிறோமோ, அவ்வளவு அதிகமாக நாம் அதைக் கண்டு கொள்ளலாம்.

அதிகாரம் 2

பெருமையின் தீய விளைவுகள் சில!

சகல துர்க்குணங்களுக்கும் உற்பத்தி ஸ்தானம் பெருமையே என்று நாம் ஏற்கனவே கண்டோம். ஜனங்கள் பொதுவாகப் பெருமையுடன் சம்பந்தமற்றவை என்று கருதும் சில தீமைகளைக் குறித்து இந்த அதிகாரத்தில் நாம் ஆராய்வோம்.

சுய அனுதாபம், அதிருப்தி, பணசம்பந்தமான கவலைகள் ஆகியவை பெருமையின் கசப்பான கனிகளே!

சுய அனுதாபம் என்பது ஒருவர் நீண்ட நாட்களாகப் பேணி வளர்த்துவரும் பெருமையின் தெளிவான ஓர் அறிகுறியாகும். சவுல் ராஜா ஏறக்குறைய பெருமையின் ஓர் உருவாகவே இருந்தான் என்று நாம் கூறலாம். அவன், 'எனக்காகப் பரிதாபப்பட உங்களில் ஒருவனாகிலும் இல்லையா?' (I சாமு. 22 : 8) என்று புலம்பினான். பெருமையுள்ளவர்கள், 'எனக்காக யாரும் கவலைப்படுவதில்லை, என்னை யாரும் நேசிப்பதில்லை, என்னை யாரும் விளங்கிக்கொள்வதில்லை' என்று எப்போதும் முறையிடுகிறவர்களும், முறுமுறுக்கிறவர்களுமாய் இருப்பார்கள். மற்றொரு விதத்தில் சொல்லப்போனால், அவர்கள் தங்கள் பெருமையினிமித்தம் தங்களை எல்லோரும் விசாரிக்க வேண்டும் அல்லது நேசிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். யாவரும் உங்களை நேசிப்பதற்கும், உங்களை விசாரிப்பதற்கும், உங்களைக் களிப்படுத்துவதற்கும் அல்லது உங்களைப் பாராட்டுவதற்கும்

நீங்கள் யார்? நீங்கள் அடைந்துள்ள மேன்மைதான் என்ன?). ஆனால் தாழ்மையுள்ளவர்களோ மற்றவர்களை நேசிப்பது, மற்றவர்களுக்கு உதவி செய்வது, மற்றவர்களை விசாரிப்பது போன்றவற்றைக் குறித்தே எப்போதும் சிந்தித்துக்கொண்டிருப் பார்கள். தேவனுடைய மகிமைக்காக மற்றவர்களுக்குப் பணி விடை செய்வதற்குத் தங்களையே தத்தம் செய்யும் ஜீவிய மானது அதிமேன்மையான சந்தோஷமானதும் மிகவும் ஆசீர் வதிக்கப்பட்டதுமான ஒரு ஜீவியமாகும். சுருங்கக் கூறின், பெருமை யுள்ளவர்கள் (தங்களுக்கு மற்றவர்கள் செய்யத் தவறியவைகளைக் குறித்த உணர்வுடன்) தங்கள் உரிமைகளின் மேலும், தாழ்மை யுள்ளவர்களோ (தேவனுடைய பிள்ளைகளாகத் தாங்கள் மற்ற வர்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்பதைக் குறித்த உணர்வுடன்) தங்களுடைய உத்தரவாதங்களின் மேலும் கவனம் செலுத்துகிறார்கள். வேறு வார்த்தைகளில் கூறின், பெருமை யுள்ளவர்கள் தங்களைப் பற்றியே சிந்தைகொண்டிருக்கும் சுய உணர்வுள்ளவர்களாகவும், தாழ்மையுள்ளவர்களோ தேவ உணர் வுள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

பேராசை, அதிருப்தி ஆகியவைகளுக்குக் காரணம் பெரு மையே. 'எதுவுமே எனக்குப் போதுமான அளவு இல்லை, நான் இன்னும் அதிகமதிகமாகப் பெற்றுக்கொள்ளத் தகுதியுள்ளவன்' என்று பெருமைக்காரன் முறையிடுவான். தேவன் எல்லா வற்றையும் மிகச் சிறந்த முறையில் அவனுக்குச் செய்து, மிகச் சிறந்ததையே கொடுத்திருந்தாலும், அவன் அதிருப்தியுள்ள வனாய்க் குறைகூறிக்கொண்டே இருப்பான். தன்னுடைய தோட்டத்தின் உருளைக்கிழங்கு விளைச்சலைக் குறித்து எப் பொழுதும் அதிருப்திகொண்டிருந்த ஒரு பெண்மணியைப் பற்றிக் கூறப்படும் கதை ஒன்று உண்டு. அவள் தன் சபைப் போத கரிடம் எவ்விதம் தன் தோட்டத்தில் ஒரு பகுதி உருளைக் கிழங் குகள் எப்போதுமே அழுகிப்போய்விடுகின்றன என்று குறைகூறி வந்தாள். இவ்வாறிருக்க, ஒரு வருடம் உருளைக் கிழங்குகள்

ஒன்றுமே அழுகிப்போகாமல், முற்றிலும் மிகவும் நல்ல விளைச்சல் உண்டாயிற்று. அப்பொழுது அவள் அதைப் பற்றியும் மிகவும் அதிருப்தியுற்று, 'நான் இப்பொழுது என் பன்றிகளுக்கு எதைக் கொடுப்பேன்?' என்று முறையிட்டாள்! தாழ்மையுள்ள வர்கள் தேவன் தங்களுக்கு எதைக் கொடுத்தாலும் - அது குறைவானாலும் அதிகமானாலும், எப்பொழுதும் நன்றியுள்ளவர் களாகவும், அதில் திருப்தியுள்ளவர்களாகவும் இருப்பார்கள். போதும் என்கிற மனதுடன் கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம். நாம் தேவபக்தியும், போதும் என்கிற மனது அல்லது திருப்தியும் உடையவர்களாயிருக்கத் தாழ்மை நமக்கு உதவி செய்கிறது.

பெரும்பாலான பண சம்பந்தமான கடன்களுக்குக் காரணம் பெருமையே. (தேவன் உண்மையற்றவர் போலவும், நம்மைக் குறித்துக் கவலைப்படாதவர் போலவும், அவர் நம் தேவைகளைச் சந்திக்க உண்மையற்றவராயிருப்பது போலவும்) 'எனக்கு இருக் கிறதைக் காட்டிலும் இன்னும் அதிகமான வசதிகள் உண்டாக்கப் பட வேண்டும். தேவன் எனக்குத் தந்திருப்பவைகளைக் காட்டி லும் இன்னும் அதிகமான சொகுசுகளுள்ளவனாயிருக்க எனக்குத் தகுதியுண்டு' என்று சிலர் குறைகூறுவதற்கு அடிப்படைக் காரணம் பெருமையே. தாழ்மையுள்ளவர்கள் எளிமையான ஜீவியம் செய்வார்கள். அவர்களுக்குப் பணத்தைப் பற்றிய பாரமோ, கவலையோ இராது. தாழ்மையும் விசுவாசமும் ஒன்றுடன் ஒன்று பூரணமாக இணைந்திருப்பவை. கர்த்தராகிய இயேசு வினிடத்தில் வந்த நூற்றுக்கதிபதியும், கானானிய ஸ்திரீயும் மிகுந்த தாழ்மையை வெளிப்படுத்தியதால் தங்களுடைய மிகப் பெரிய விசுவாசத்திற்காக அவரால் புகழப்பட்டனர். மத்தேயு 8 : 5 - 10 ; 15 : 22 - 28 காண்க.

பொறாமை, பெருமையின் ஒரு தீய பக்கவிளைவு!

' பெருமை உன்னைப் பொறாமையுள்ளவனாக மாற்றுகிறது. 'அவன் இறுமாப்புள்ளவனுமாயிருக்கிறான். அவைகளாலே பொறாமையும் உண்டாகிறது' என நாம் வாசிக்கிறோமே! (I தீமோ. 6 : 4). மற்றவர்கள் கனப்படுத்தப்படும்போது உன்னால் அதைக்

குறித்து சந்தோஷப்பட முடியவில்லை; நீ கலக்கமுற்று அவர்கள் மேல் கோபப்படுகிறாய். "சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம்" என்று இஸ்ரவேலின் ஸ்திரீகள் பாடின போது ராஜாவாகிய சவுலின் பெருமை கலக்கமடைந்தது (1 சாமு. 18 : 7, 8). அவன் பொறாமையினால் தூண்டப்பட்டு, தாவீதை அழிக்க விரும்பினான். அந்தப் பொறாமையே அவனுடைய வீழ்ச்சிக்குக் காரணமாயிற்று. உன்னில் பொறாமை இருக்குமானால், வெகு சுலபமாக உன் கால்கள் சறுக்கி, நீ நரகக் குழியில் விழக்கூடும். "ஆனாலும் என் கால்கள் தள்ளாடுதலுக்கும், என் அடிகள் சறுக்குதலுக்கும் சற்றே தப்பிற்று. ... வீம்புக்காரராகிய அவர் கள்மேல் பொறாமைகொண்டேன்" என சங்கீதக்காரன் கூறு கிறான் (சங். 73 : 2, 3). மனிதனுடைய உடலில் ஏற்படக்கூடிய மிகவும் மோசமான வேதனைகளில் ஒன்று, அவனுடைய எலும்புகள் சிதைந்து அல்லது கெட்டுப்போவதினால் உண்டாகும் வேதனையாகும் என்று கூறப்படுகிறது. இதையே பொறாமை மனிதனுக்குச் செய்கிறது. "சொஸ்தமனம் உடலுக்கு ஜீவன்; ***பொறாமையோ எலும்புருக்கி***" (நீதி. 14 : 30). உன்னை விட வயதில் இளையவரான ஒருவர் அல்லது அனுபவத்தில் குறைந்த ஒருவர் உனக்கு மேலாக உயர்த்தப்பட்டு உன்னைவிட அதிகமாகக் கனப்படுத்தப்படும்போது உன்னால் அதிலே சந்தோஷப்பட முடிகிறதா? இயல்பாக, அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் ராஜா வாகிய சவுலைப் போல் ஜனங்கள் கோபமடைந்து, எதிர்த்து, இளைப்பாறுதல் அற்றவர்களாகின்றனர்.

பொறாமை உன்னை நரகத்தில் விழத்தள்ளுமென்றால், மற்றவர்கள் உன்னைவிட அதிகமாகக் கனப்படுத்தப்படும்போது உன் இருதயத்தின் ஆழத்திலிருந்து நீ அடையும் சந்தோஷம் உன்னை நிச்சயமாகப் பரலோகத்திற்கு எடுத்துச் செல்லும். மோசே, எலியா என்பவர்களைப் போல யோவான்ஸ்நானன் அற்புதங்கள் எதுவும் செய்யாதவனாயிருந்தபோதிலும், அவன் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களில் மிகப் பெரியவனானான். இது

எப்படி? அவனுடைய ஜீவியமும் ஊழியமும் தெய்வீகத் தாழ்மை யினாலே உடுத்துவிக்கப்பட்டும், முடிசூட்டப்பட்டும் இருந்தன. அவ னுடைய மகிழ்ச்சியான ஜெபம், "அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்" என்பதாயிருந்தது. யோவான்ஸ்நானன் கர்த்தராகிய இயேசுவைக் காட்டிலும் வயதில் மூத்தவனாயிருந்தான். அவன் தன் ஊழியத்தையும் அவருக்கு முன்னதாகவே ஆரம்பித்திருந் தான்; அவன் அவருக்கு ஞானஸ்நானமும் கொடுத்தான். அவன், "என்னிலும் வல்லவர் ஒருவர் எனக்குப்பின் வருகிறார், அவ ருடைய பாதரட்சைகளின் வாரைக் குனிந்து அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல" என்று கூறினான் (மாற்கு 1 : 7).

பொறாமை கொல்லுகிறது. பொறாமையினாலே யூதர்கள் கர்த்தராகிய இயேசுவைக் கொலை செய்தார்கள் (மத். 27 : 17). *உன்னிலுள்ள பொறாமை இன்றும் ஆண்டவராகிய இயேசுவைக் கொலைசெய்கிறது.* பொறாமையைக் குணமாக்கும் மருந்து கிறிஸ்துவைப் போன்ற தாழ்மையே ஆகும். நீ எப்பொழுதாவது யோவான்ஸ்நானனைப் போல், 'ஆண்டவரே நான் சிறுக வேண்டும்' என்று ஜெபித்திருக்கிறாயா? வேறு வார்த்தைகளில் கூறின், 'ஆண்டவரே நான் ஒன்றுமில்லாமற் போகும்வரை தயவு செய்து ஒவ்வொரு நாளும் மென்மேலும் என்னைச் சிறி யவனாக்கும்' என்று நீ ஜெபித்திருக்கிறாயா? ***இதுவே கிறிஸ்து வைப் போன்ற தாழ்மை அல்லது கிறிஸ்துவின் ஆவியாகும்.***

'நான் மென்மேலும் பெரியவனாக, ஐசுவரியவானாக மாற வேண்டும்; நான் இன்னும் மேன்மையான வல்லமை, அந்தஸ்து, அதிகாரம், பேர், புகழ் போன்ற இவைகளையெல்லாம் உடை யவனாக வேண்டும்' என விரும்பும் லூசிபரின் ஆவி இன்று உலகில் பெரும்பான்மையினரை ஆட்கொண்டுள்ளது. இப்படிப் பட்ட ஜனங்களின் முடிவு என்னவாயிருக்கும்? 'நீ அகாதமான பாதாளத்திலே தள்ளுண்டுபோவாய்' (ஏசாயா 14 : 15 - Eng.) என்பதே அவர்களது முடிவாயிருக்கும்.

தன்னைத்தான் நீதிகரித்தலும் பொறுமையிழத்தலும் பெருமையின் விளைவுகளே!

பெருமை உனது சொந்தத் தவறுகளை ஒத்துக்கொள்ள உன்னை அனுமதிக்காது. நீ உன்னை நீதிகரித்துக்கொள்ளும் படியாக எப்பொழுதும் ஒரு நொண்டிச் சாக்குப்போக்கைக் கண்டுபிடிப்பாய், அல்லது யாராவது ஒருவர் மேல் குற்றத்தைச் சுமத்துவாய். ஏன்? மற்ற அநேக பாவங்களைப் போலல்லாமல் பெருமை உன்னைக் குருடனாக்குகிறது - உனது சொந்தக் குறைகளை உன்னால் காண முடியாது. ஆனால் மற்றவர்களிலோ நீ அநேகக் குறைகளைக் காண்பாய். நமது ஆதி பெற்றோராகிய ஆதாமும் ஏவாளும் 'ஜீவனத்தின் பெருமை' உடையவர்களாக இவ்விதம் செயல்பட்டனர் (ஆதி. 3 : 11 - 13).

கிறிஸ்துவின் தாழ்மை நமக்கு ஒரு முன்மாதிரியாயுள்ளது. பிலாத்துவின் முன்னிலையில் பிரதான ஆசாரியரும் மூப்பரும் அவருக்கு விரோதமாக அநேகக் குற்றங்களைச் சாட்டினபோது அவர் அமைதலாயிருந்தார். அவர் சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்தபொழுது, அந்த வழியாய் நடந்துபோன அநேகர் அவரைப் பரிகசித்து, அவரை நிந்திக்கும் வார்த்தைகளைப் பேசினர். ஆனால் அவரோ பேசாமலிருந்தார். பழைய ஏற்பாட்டு யோசேப்புங்கூட இதைப் போன்ற தாழ்மையுள்ளவனாய் இருந்தான். போத்திபாரின் மனைவி அவனைத் துர்நடத்தையுள்ள வனென்று குற்றஞ்சாட்டியபோது அவன் அமைதியாக இருந்தான். ஒரு நொடிப்பொழுது சிந்தித்துப் பாருங்கள். யோசேப்பு தன் நியாயத்தை விளங்கச் செய்யும்படி திருமதி போத்திபாரைக் குற்றப்படுத்தியிருந்தால் யார்தான் அவனை நம்பியிருப்பார்கள்? ஆனால் யோசேப்பு வாய் திறவாதிருந்தபடியால், ஏற்ற நேரம் வந்தபோது தேவன் அவனை எல்லாருக்கும் மேலாக உயர்த்தி, அவன் நிரபராதி என்பதை நிரூபித்துவிட்டார். 'தனித்திருந்து, மௌனமாயிருக்கக்கடவன்; தன் வாயைத் தூளில் நுழுந்து

வானாக; அப்படியானால் அவனுக்கு நம்பிக்கைக்கு இடமுண்டா யிருக்கும்' (புல. 3 : 28, 29 -Eng) என்னும் தேவனுடைய வார்த்தை எவ்வளவு உண்மையானது! இந்த வசனம் போதிப்பது யாது? நீ உன்னைத் தற்காக்கவும், உன் நீதியை விளங்கப்பண்ணவும் உன்னுடைய வாயைத் திறப்பாயென்றால் *உனக்கு நம்பிக்கைக்கு இடமிராது.* இதன் எதிர்மறையும் உண்மையே. யோசேப்பு அமைதியாயிருந்தபடியால் ஒளிமயமான எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையைப் பெற்றிருந்தான். கர்த்தராகிய இயேசுவும் அமைதியாக இருந்ததால் ஆசீர்வதிக்கப்பட்ட உயிர்த்தெழு தலின் நம்பிக்கை உடையவராயிருந்தார். அருமையான தேவ பிள்ளையே, நீ பிழையாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, தவறாக விளங்கிக்கொள்ளப்பட்டிருக்கிறாயா? தேவன் அனுமதித்தா லொழிய, நீ உன் நீதியை விளங்கப்பண்ணும்படி உன் வாயைத் திறவாதே. ஏற்ற வேளை வரும்போது தேவன் உன் நியாயத்தை விளங்கப்பண்ணுவார். தேவன் உனக்காக வழக்காடி உன் நீதியை விளங்கப்பண்ணும்போது, உனக்கு விரோதமாகப் பேசும் எல்லா வாய்களும் அடைக்கப்படும்.

பெருமையானது, மற்றவர்களுடைய தப்பிதங்களைச் சகிக் கக்கூடாதபடிக்கு உன்னைப் பொறுமையற்றவனாக்குகிறது. தேவன் உன்பேரில் எவ்வளவு பொறுமையாயிருக்கிறார் என்பதை நீ உணருவதில்லை. 'நீ எவ்வளவு அதிகமாகப் பூரணனாய் இருக்கி றாயோ அவ்வளவு அதிகமாக மற்றவர்களுடைய அபூரணங் களைச் சகித்துக்கொள்வாய். நீ எவ்வளவு அதிகமாக அபூரணனா யிருக்கிறாயோ அவ்வளவு அதிகமாக மற்றவர்களின் தவறுகளைச் சகிக்கப் பொறுமையற்றவனாயிருப்பாய்' என்னும் கூற்று மிக உண்மையானது. ஆவியில் பெருமையுள்ளவன் ஒருபோதும் தன் ஆவியில் பொறுமையுள்ளவனாயிருக்கமாட்டான். மேலும் ஆவியில் பொறுமையுள்ளவர்களுக்கு நல்ல முடிவு உண்டு - "ஒரு காரியத்தின் துவக்கத்தைப்பார்க்கிலும் அதின் முடிவு நல்லது; பெருமையுள்ளவனைப்பார்க்கிலும் பொறுமையுள்ளவன்

உத்தமன்" (பிர. 7 : 8). யோபு பொறுமையாயிருந்தபடியினாலே அவன் மேன்மையான முடிவை அடையும்படி கர்த்தர் கிரியை செய்தார்: "யோபின் பொறுமையைக்குறித்துக் கேள்விப்பட்டிருக் கிறீர்கள்; கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள்" (யாக். 5 : 11). பொறுமையின் ஆவியை நீங்கள் பெற்றுக்கொள் வதற்கான ஒரே வழி பெருமையின் ஆவியைத் துரத்திவிடுவதே யாகும். நீங்கள் எவ்வளவு தாழ்மையாக இருக்கிறீர்களோ, அவ்வளவு பொறுமையாக இருப்பீர்கள். இப்படிப்பட்டவர்கள் மட்டுமே கர்த்தருடைய இரகசிய வருகைக்காகப் பொறுமையுடன் காத்திருக்க முடியும். ***"இப்படியிருக்க, சகோதரரே, கர்த்தர் வரு மளவும் நீடிய பொறுமையாயிருங்கள்"*** (வச. 7).

அதைரியமும் மனத்தளர்ச்சியும் பெருமையின் விளைவுகளே!

பல சந்தர்ப்பங்களிலும், அதைரியமும் மனத்தளர்ச்சியும் பெருமையின் விளைவுகளாயிருக்கின்றன (I இராஜா. அதி. 19 காண்க). எலியா, தன் பிதாக்களைப் பார்க்கிலும் தான் நல்லவன் என்று எண்ணிக்கொண்டிருந்தான். ஆனால் தான் நினைத்தது தவறு என அவன் உணர்ந்தபோதோ அவனுடைய பெருமை தகர்க்கப்பட்டு, தான் சாக வேண்டும் என்று கோரும் அளவுக்கு அவன் முற்றிலுமாக அதைரியமடைந்தான் (வச. 4). அது போலவே யோனாவின் பெருமை பாதிக்கப்பட்டபோது, அவனும் சாக விரும்பினான்.

நீங்கள் அதைரியப்பட்டிருக்கும்போது, 'கர்த்தாவே என்னை எடுத்துக்கொள்ளும், நான் சாக வேண்டும்' என்று ஜெபம் செய்யாதிருங்கள். உண்மையில் ஒருவன் மரிப்பதற்கு அதுதான் மிகவும் மோசமான தருணமாகும். மாறாக, 'தேவனே, என் னுடைய பெருமையை உதறித் தள்ளிவிட எனக்கு உதவிய ருளும்' என்று ஜெபிப்பதே நலம். எலியா, தான் மரிக்க வேண்டும் என்று விண்ணப்பம் செய்தான். ஆயினும் ஏறக்குறைய மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு செய்யப்பட்ட இந்த

ஜெபத்திற்கு இன்னும் பதில் அளிக்கப்படவில்லை. அவன் மகா உபத்திரவ காலத்தில் மறுபடியும் உலகிற்கு வந்து மரிக்க வேண்டியதாயிருக்கிறது.

அதைரியத்தின் காரணமாக சிலர் தற்கொலை செய்து கொள்வதுண்டு. பெரும்பாலான அதைரியங்களின் வேர் பெரு மையே என்பதை அநேகர் உணராமல் இருக்கிறார்கள். உதாரண மாக, அகித்தோப்பேல் ஒரு சிறந்த ஆலோசனைக்காரனா யிருந்தான். அவனுடைய ஆலோசனைகள் ராஜாக்களால் பெரி தும் மதிக்கப்பட்டன. என்றாலும், ஒரு நாள் ராஜா அவனுடைய ஆலோசனையைப் புறக்கணித்து, வேறொருவனுடைய ஆலோச னையை ஏற்றுக்கொண்டான். இதினிமித்தம் அவனுடைய பெருமை ஆழமாகப் புண்படுத்தப்பட்டது. எனவே அவன் ஆழமான மனத்தளர்ச்சியிலும் அதைரியத்திலும் மூழ்கிப்போய் அதினிமித்தம் தற்கொலை செய்துகொண்டான் என்பது தெளிவு (II சாமு. 17 : 23). மாறாக, தாவீதின் குணாதிசயங்களில் மேலோங்கி நிற்பது அவனது தாழ்மையும் சாந்தகுணமுமாகும். ஒரு சமயத்தில் அவன் சிக்லாகில் தன்னுடைய மனைவிகள், பிள்ளைகள், வீடு முதலான யாவற்றையும் இழந்தான். எல்லாவற்றுக்கும் மேலாக, அவனை அது வரை பின்பற்றிவந்த அவனுடைய ஜனங்களே அவன்மேல் கல்லெறிய விரும்பினார்கள். சாதாரணமாக எந்த மனிதனும் இப்படிப்பட்ட சூழ்நிலையில் அதைரியத்தின் ஆழத்தை அடைந்திருப்பான். ஆனால், "தாவீது தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக்கொண்டான்" என்று நாம் வாசிக்கிறோம் (I சாமு. 30 : 6).

அருமையான நண்பனே, நீ ஆரோக்கியம், செல்வம், பேர், புகழ், மற்றும் இந்த உலகம் தரக்கூடிய எல்லாவற்றையும் பெற்றிருக்கலாம். ஆனால் நீ கிறிஸ்துவைப் போன்ற மெய்யான தாழ்மை உள்ளவனாயிராவிட்டால், ஒரு நாள் இவை யாவும் உனக்குக் கண்ணிகளாக மாறும். நீ கிறிஸ்துவின் மனத்தாழ்மையை

நாடித் தேடாவிட்டால் மனத்தளர்ச்சியில் ஆழமாய் அமிழ்ந்து போய் யாதொரு ஆறுதலையும் தேறுதலையும் கண்டுகொள்ளா மற்போவாய். மறுபக்கத்தில் நீ உண்மையில் தாழ்மையுள்ளவனாக இருந்தால், வாழ்க்கையில் நீ மிக ஆழ்ந்த பிரச்சினைகளைச் சந்திக்கும்போது, அதைப் போன்ற பிரச்சினைகளையுடைய மற்றவர்களுக்குத் தைரியம் அளிப்பவனாக இருப்பாய். **தாழ்மையுள்ள ஒருவன் ஒருபோதும் *அதைரியப்படவோ, மனந்தளரவோ மாட்டான்.*** அப். பவுல் இதற்கு ஒரு எடுத்துக்காட்டாவார். அவரது அறிக்கை, 'நான் பரிசுத்தவான்களெல்லாரிலும் சிறியவன்' (எபே. 3 : 8) என்பதாயிருந்தது. "வெகு மனத்தாழ்மையோடு ... நான் கர்த்தரைச் சேவித்தேன்" (அப். 20 : 19) என்று அவர் கூறுகிறார். அவர் ஒரு சிறைக் கைதியாக ரோமாபுரிக்குக் கப்பலில் பிரயாணம் செய்துகொண்டிருந்தபோது ஒரு பெரும் புயல் எழுந்ததின் காரணமாக இனி உயிர் தப்பிப் பிழைப்போம் என்ற நம்பிக்கையை யாவரும் இழந்துபோயினர். ஓர் கைதியாயிருந்தபோதிலும் அவர் கர்த்தருக்குள் திடப்படுத்தப்பட்டதுடன், "திடமனதாயிருங்களென்று இப்பொழுது உங்களுக்குத் தைரியஞ் சொல்லுகிறேன்" (அப். 27 : 22) என்று கூறி, மற்றவர்களையும் திடப்படுத்தினார். இவை பொருளற்ற வெறும் வார்த்தைகளாயிருக்கவில்லை. அருமையான இத்தேவமனிதன் தன் உற்சாகமூட்டும் வார்த்தைகளினாலும், செயலாலும் எவ்விதமாகக் கப்பலிலிருந்த எல்லாப் பயணிகளையும் தேவனுடைய மகிமைக்காகக் காப்பாற்றினார் என்பதை நாம் அறிவோமே!

நீ பெருமையுள்ள ஒரு மனிதனாக இருந்தால், உன்னைத் தாழ்த்தும்படியாக திடீரென ஒரு நாள் பேரழிவு ஒன்று உன்மீது மோதும். அப்போது உன் நண்பர்கள், உடைமைகள், மாளிகைகள், மற்றும் பணம் முதலியவை உன்னை விட்டு அகன்றோடும். நீ இந்தச் சூழ்நிலையைச் சந்திக்கும்படியாகத் தன்னந்தனியாக விட்டு விடப்படுவாய். அப்பொழுது நீ என்ன செய்வாய்? எங்கே போவாய்? யார் உனக்கு உதவி செய்வார்கள்? *"நாங்கள் பொய்யை*

எங்களுக்கு அடைக்கலமாக்கி, மாயையின் மறைவிலே வந்து அடைந்தோம் ... பொய் என்னும் அடைக்கலத்தைக் கல்மழை அழித்துவிடும்" (ஏசாயா 28 : 15, 17). பணம், நண்பர்கள் போன்ற பொய்யின் அடைக்கலங்கள் திடீரென்று உண்டாகும் சோதனைகளான கல்மழையினால் அழிந்துபோகும்.

பயம், பெருமையின் ஓர் உற்பத்திப்பொருள்!

பயம் பெருமையுடன் சம்பந்தப்பட்டது என்னும் உண்மையை அநேகர் அறியாமலிருக்கிறார்கள். பெருமையுள்ளவனாயிருந்த சவுல் தாவீதுக்குப் பயந்திருந்தான்: "சவுல் இன்னும் அதிகமாய்த் தாவீதுக்குப் பயந்து" இருந்தான் (I சாமு. 18 : 29). தாவீது, சவுலுக்கு உதவி செய்யும்படியாகச் சுரமண்டலம் வாசித்துக்கொண்டிருந்த ஒரு இடைச்சிறுவனாக மட்டுமே இருந்தான் என்பதை நாம் நம்முடைய நினைவிற்கொள்வோமாக. சவுலோ இஸ்ரவேலின் ராஜாவாயிருந்தான். தாவீதைக் கொல்லும்படியாக எப்போதும் அவனுடைய கையில் ஒரு ஈட்டி இருந்தது. தாவீதுதான் சவுலுக்குப் பயந்திருந்திருக்க வேண்டியதேயல்லாமல், சவுல் தாவீதுக்குப் பயந்திருக்க வேண்டிய அவசியமில்லாதிருந்தது.

தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார். அவரே எல்லா நன்மைகளுக்கும் காரணராகவும், உறைவிடமாகவும் இருக்கிறார். எனவே பெருமையுள்ள மனிதனுக்கு அவர் எதிர்த்துநிற்கும்போது அவன் அவருடைய எல்லா நன்மைகளையும் ஆசீர்வாதங்களையும் இழந்துபோகிறான். பயம் என்பது ஏதாவதொன்றை இழந்துவிடுவோம் என்ற எதிர்மறையான எதிர்பார்ப்பேயன்றி வேறல்ல. மரண பயம் என்பது ஜீவனை இழந்துவிடுவோம் என்ற எதிர்பார்ப்பாகும். எதிர்காலத்தைக் குறித்த பயம் என்பது எதிர்காலத்தில் ஏதாகிலும் நன்மையை இழந்துவிடுவோமோ என்பது போன்ற எதிர்பார்ப்பாகும். கர்த்தர் பெருமையுள்ளவனுக்கு எதிர்த்து நின்று,

நினைத்திருக்கக் கூடிய தம்முடைய நன்மைகளையும் அவனை விட்டு எடுத்துக்கொள்ளுகிறதினால் பெருமையுள்ளவன் தன்னுடைய ஜீவியகாலம் முழுவதும் பயமென்னும் இருட்டறையில் இருக்கும்படியாகக் கட்டப்பட்டிருக்கிறான்.

மறுபக்கத்தில், தேவன் தாழ்மையுள்ளவர்களுக்குக் கிருபை அளிக்கிறார். அவர் அருளும் சகல நன்மைகளையும் அவருடைய கிருபை என்று நாம் அழைக்கலாம். ஆதலால் தாழ்மையுள்ளோர் தேவனுடைய எல்லா நன்மைகளாலும் சூழப்பட்டு முடிசூட்டப்படுகின்றனர். அவர்கள் பயப்படுவதற்கான ஒரு காரணமும் இராது. சங்கீதம் 34:4-6-இல், 'இந்த ஏழை தாழ்மையுள்ள மனிதன் கூப்பிட்டான், கர்த்தர் கேட்டு அவனை எல்லா இடுக்கண்களுக்கும், எல்லா பயத்திற்கும் நீங்கலாக்கி இரட்சித்தார்' என்று நாம் வாசிக்கிறோம். அப்.பவுல் தன்னைக் குறித்து, 'பரிசுத்தவான்கள் எல்லாரிலும் சிறியவன்' (எபே. 3:8) என்று அறிக்கை செய்த ஒருவராயிருந்தார். அவர் கைது செய்யப்பட்டு நீரோ ராயனுடைய சிறைச்சாலையின் நிலவறையில் இருந்தபோது தான் சிரச்சேதம் பண்ணப்படப்போவதற்குச் சற்று முன் பிலிப்பியிலிருந்த விசுவாசிகளுக்கு எழுதிய தன் நிருபத்தை வெற்றி முழக்கத்துடன் முடித்தார். அது, '***கடைசியாக என் சகோதரரே, கர்த்தருக்குள் சந்தோஷப்படுங்கள்***' (பிலி. 3:1 - Eng.) என்பதே. இப்படிப்பட்ட அச்சுறுத்தும் சூழ்நிலையிலும் அந்தத் தாழ்மையுள்ள பரிசுத்தவானில் நாம் ஏதாகிலும் பயத்தைக் காண முடிகிறதா? இங்கு நாம் கற்றுக்கொள்ளும் பாடம் மிகவும் தெளிவாக உள்ளது - மரணத் தருவாயிலுங்கூட நாம் எல்லாப் பயங்களுக்கும் நீங்கலாகி இருக்க வேண்டுமானால் மெய்யான தாழ்மையைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

சில வேளைகளில் பெருமையின் காரணமாக ஜனங்கள் தாங்கள் ஆக்கினைத்தீர்ப்புக்குட்பட்டவர்களாயிருப்பதாக உணரு

கின்றனர். 'அவன் இறுமாப்படைந்து, பிசாசு அடைந்த ஆக்கினையிலே விழாதபடிக்கு' (1 தீமோ. 3:6) என்று அப்.பவுல் கூறுகிறார். சில வேளைகளில் பரிசுத்தமாக்கப்பட்டவர்களான தேவஜனங்களைக் கூட இந்த ஆக்கினைத்தீர்ப்பு பாழாக்கிவிடக் கூடும். 'எனக்கு நம்பிக்கையில்லை. தேவன் என்னைக் கை விட்டுவிட்டார். அவரால் ஒருபோதும் மன்னிக்கக் கூடாத பயங்கரமான பாவங்களை நான் செய்திருக்கிறேன். நான் நரகத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறேன்' என்பன போன்ற வார்த்தைகளை அவர்கள் கூறி தங்களைத் தாங்களே ஆக்கினைத் தீர்ப்புக்குள்ளாக்கும் நிலைக்கு வந்துவிடக் கூடும். தன்னைத் தான் குற்றப்படுத்திக்கொண்டிருப்பது வேதனைப்படுத்தும் ஓர் ஆவியாகும். சில வேளைகளில் இந்த ஆவியினால் தூண்டப்படும்போது ஜனங்கள் தற்கொலையும் செய்துகொள்ளுகிறார்கள். தாழ்மையுள்ள ஒரு பரிசுத்தவான் இத்தகைய குற்றப்படுத்தும் ஆவியினால் ஒருபோதும் தாக்கப்படுவதில்லை.

உண்மையில், தாழ்மையில் இலட்சக்கணக்கான ஆசீர்வாதங்களும், பெருமையில் இலட்சக்கணக்கான தீமைகளும் உள்ளன. தேவனை அறிந்து அவரை அனுபவித்து மகிழ்வதே நாம் இவ்வுலகில் ஜீவிப்பதின் நோக்கமாகும். தாழ்மையை நாம் கற்றுக்கொள்ளாவிடில் அவரை நாம் அறிந்துகொள்வதோ, அவரை அனுபவித்து மகிழ்வதோ சாத்தியமல்ல. நம் அருமை ஆண்டவர்தாமே கிறிஸ்துவைப் போன்ற மனத்தாழ்மையைக் கற்றுக்கொள்ள நமக்கு உதவி செய்வாராக.

அதிகாரம் 3

பெருமையுள்ளவர்களின் முடிவு பயங்கரமானது!

வேதாகமத்தைப் போல் பெருமையின் அபாயகரமான விளைவுகளைக் குறித்த எச்சரிப்புகளைக் கொடுக்கக் கூடிய வேறொரு புத்தகம் இவ்வுலகில் இல்லை. பெருமையுள்ளவர்கள் பயங்கரமான ஒரு முடிவை அடைவார்கள். ஏரோது ராஜா இதற்கு ஓர் உதாரணமாவான். "குறித்தநாளிலே ஏரோது ராஜவஸ்திரம் தரித்துக்கொண்டு, சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்து, அவர்களுக்குப் பிரசங்கம்பண்ணினான். அப்பொழுது ஜனங்கள் இது மனுஷ சத்தமல்ல, இது தேவசத்தம் என்று ஆர்ப்பரித்தார்கள். அவன் தேவனுக்கு மகிமையைச் செலுத்தாதபடியினால் உடனே கர்த்தருடைய தூதன் அவனை அடித்தான், அவன் புழுப்புழுத்து இறந்தான்" (அப். 12 : 21 - 23). பொல்லாத ராஜாவாகிய அவன் அப்போஸ்தலனாகிய யாக்கோபைக் கொலைசெய்ததுடன், அப்போஸ்தலனாகிய பேதுருவையும் கொலைசெய்யும் நோக்கத்துடன் அவரையும் காவலில் வைத்தான். மேலும் சிறைக் காவலர்களையும் அவன் அநியாயமாகக் கொன்றான். இத்தகைய தீய செயல்கள் அனைத்தும் தேவனுடைய நியாயத்தீர்ப்பை அவன் மீது உடனடியாகக் கொண்டுவரவில்லை; ஆனால் அவன் தேவனுக்கு மகிமையைச் செலுத்தத் தவறியபோது மும்மடங்கு

நியாயத்தீர்ப்பு அவன்மேல் உடனே வந்தது - தேவதூதன் அவனை அடித்தான்; அவனுடைய சரீரம் புழுக்களுக்கு இரையாயிற்று; அவன் இறந்துபோனான். ஒருவேளை ஏரோது தனது சொந்த மேன்மையைக் குறித்துப் பேசியிருந்திருக்கக் கூடும். நமது ஜீவியம், ஊழியம் ஆகியவற்றின் எல்லா அம்சங்களிலும் தேவனுக்கு மகிமை செலுத்துவதில் நாம் எவ்வளவு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்! இந்தப் புழுக்கள் நமது உள்ளான மனிதனைத் தின்னும் நம்முடைய பெருமையைக் காட்டுகின்றன. (ஆவிக்குரிய பெருமை மிக மோசமான பெருமையாகும்). நாம் செய்த நற்கிரியைகளுக்கான மகிமையை நமக்கென்று எடுத்துக்கொள்ளும் விஷயத்தில் நாம் அடிக்கடி குற்றவாளிகளாயிருக்கிறோம். இது தேவனுடைய பார்வையில் ஒரு பயங்கர பாவம் என்பதை நாம் உணரத் தவறிவிடுகிறோம். ஏரோதின் பாவம் நம்மில் உள்ளதா என்பதை நாம் எவ்வாறு அறிந்துகொள்ளலாம்? நாம் செய்த நற்கிரியைகளுக்காக ஜனங்கள் நம்மைப் பாராட்டுவதற்குப் பதிலாக, நம்மைக் குறைகூறும்போது நாம் சோர்வடைவோமாயின், அதுவே அப்பாவம் நம்மில் உள்ளது என்பதற்கான அறிகுறியாகும்.

ராஜாவாகிய சவுல் தன்னைத்தானே உயர்த்தியபோது அவனில் விழுகை ஆரம்பமாயிற்று. பெலிஸ்தரின் தாணையத்தை முறியடித்தவன் யோனத்தானே. ஆனால் சவுலோ, தானே அதைச் செய்தது போல் பிரசித்தம் பண்ணினான் (I சாமு. 13 : 3, 4). ராஜாவாகிய சவுலின் மாதிரியை நாம் பின்பற்றுவோமாகில், நமது அபிஷேகத்தையும் ஊழியத்தையும் நாம் இழந்துபோவோம். பெருமையுள்ளவனாயிருந்த சவுலின் மரணம் பயங்கரமானதாயிருந்தது. பெலிஸ்தரோடுள்ள கடைசி யுத்தத்தில் பெலிஸ்தர் அவனை மரணத்துக்கேதுவாகக் காயப்படுத்தினர். கொடிய வேதனையிலிருந்த அவன் தன் ஆயுததாரியை நோக்கி, "அந்த விருத்தசேதனம் இல்லாதவர்கள் வந்து, என்னைக் குத்திப் போட்டு, என்னை அவமானப்படுத்தாதபடிக்கு, நீ உன்

பட்டயத்தை உருவி, என்னைக் குத்திப்போடு என்றான்" (I சாமு. 31 : 4). இருப்பினும் அவனுடைய ஆயுததாரி அவனைக் கொன்று போட பயந்தான். "அப்பொழுது சவுல் பட்டயத்தை நட்டு அதின்மேல் விழுந்தான்". மரிக்கும் வேளையில் சவுலுக்குள் இருந்த பயங்கர பெருமையைச் சற்று கவனியுங்கள். விருத்த சேதனம் இல்லாத ஒரு பெலிஸ்தனால் கொல்லப்படுவது அவனுக்குத் தாக் குறைவானதாயிருந்தது - அவன் தன் ஆத்துமாவின் முடிவைக் குறித்துக் கருத்துள்ளவனாயிருப்பதைவிட, தன் அந்தஸ்து, கௌரவம் போன்றவற்றைப் பேணிக்கொள்வதைக் குறித்தே கரிசனையுள்ளவனாய் இருந்தான். கடைசியாக அவன் ஒரு அமலேக்கியனிடம் தன்னைக் கொல்லும்படி கேட்டுக் கொண்டான். அது ஒரு பெலிஸ்தன் அவனைக் கொல்லுவதைக் காட்டிலும் மிக மோசமானது. அந்த அமலேக்கியனுக்குச் சவுலைக் கொல்லுவது மிகவும் கடினமானதாக இருந்தது. அவன் சவுலின் மீது ஏறி நின்று (II சாமு. 1 : 10 - Eng.) அவனைக் கொல்ல வேண்டியதாயிற்று.

பெருமையுள்ள ஒரு மனிதனின் வாழ்க்கை பயங்கரமானது; அவனது மரணம் அதைக் காட்டிலும் கோரமானது. ஆனால், தாழ்மையுள்ளவர்களுக்கு இளைப்பாறுதலான ஒரு ஜீவியம் உண்டு. அவர்களின் மரணம் அவர்கள் நித்திய இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தலாயிருக்கும் (ஏசாயா 57 : 2). அவர்கள் தங்கள் ஜீவியத்திலும் ஊழியத்திலும் ஒரு பாக்கியமான முடிவை அடைகிறார்கள். "*உன்னுடைய பின்நாட்களில் உனக்கு நன்மை செய்யும்பொருட்டு, உன்னைச் சிறுமைப்படுத்தி*" (உபா. 8 : 15) என நாம் வாசிக்கிறோமே! எடுத்துக்காட்டாக, தாவீதைப் பாருங்கள். ஒரு விதத்தில் ராஜாவாகிய சவுலைவிட இவன் அதிகப் பாவம் செய்தவன் என நாம் கூறலாம். அவன் பத்சேபாளிடம் பாவம் செய்து, அதை மறைக்கும்படி அவளுடைய புருஷனையும் கொன்றுபோட்டான். இருப்பினும் அவனுக்குள் ஒரு நேர்த்தியான சுபாவம் இருந்தது - அவன் தன்னைத்தானே தாழ்த்தக்

கற்றுக்கொண்டிருந்தான். அவன் தன்னை ஒரு செத்தநாய், தெள்ளுப்பூச்சி, புழு என்றெல்லாம் அழைக்கிறான் (I சாமு. 24 : 14; சங். 22 : 6). தாழ்மையுள்ளவனாயிருந்த இம்மனிதனின் மகிமையான முடிவைக் கவனியுங்கள்: 'அவன் தீர்க்காயுசும் ஐசுவரியமும் மகிமையுமுள்ளவனாய், நல்ல முதிர்வயதிலே மரணமடைந்தான்' (I நாளா. 29 : 28).

உலகிலேயே மிக மோசமான நபராயிருக்கும் ஒருவனுங்கூட - அவன் எப்பேர்ப்பட்ட பொல்லாத காரியங்களைச் செய்திருந்தாலும், அவன் தேவனுக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்தினால் - மன்னிப்பையும் சுத்திகரிப்பையும் பெற்றுக் கொள்ளுவான். "தன் மனைவியாகிய யேசபேல் தூண்டிவிட்டபடியே, கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்ய தன்னை விற்றுப்போட்ட ஆகாபைப்போல ஒருவனுமில்லை ... அவன் நரகலான விக்கிரகங்களைப் பின்பற்றி, மகா அருவருப்பாய் நடந்துகொண்டான்". அதினிமித்தம், தீர்க்கதரிசியாகிய எலியாவினால் தனக்கு விரோதமாக உரைக்கப்பட்ட நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளை அவன் கேட்டபோது, "தன் வஸ்திரங்களைக் கிழித்து, தன் சரீரத்தின்மேல் இரட்டைப் போர்த்துக்கொண்டு, உபவாசம்பண்ணி, இரட்டிலே படுத்துத் தாழ்மையாய் நடந்து கொண்டான். அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை திஸ்பியனாகிய எலியாவுக்கு உண்டாயிற்று. அவர்: ஆகாப் எனக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்தினதைக் கண்டாயா? அவன் எனக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்துகிறபடியினால், நான் அவன் நாட்களில் அந்தப் பொல்லாப்பை வரப்பண்(ணேன்) ... என்றார்" (I இராஜா. 21 : 25 - 29). உண்மையில், தன் தலைமுறையில் பூமியிலிருந்த யாவரிலும், மற்றும் இஸ்ரவேலின் ராஜாக்கள் எல்லோரிலும் ஆகாப் மிகவும் மோசமானவனாயிருந்தான். இருந்தபோதிலும் அவன் தன்னைத்தான் தாழ்த்தியபோது தேவன் அவன்மீது இரக்கம் கொண்டார்; தேவநியாயத்தீர்ப்பிலிருந்து அவன் தப்புவிக்கப்பட்டான்.

யூதாவின் ராஜாவான மனாசேயும் தேவனுடைய மாபெரும் இரக்கத்திற்கு மற்றொரு பெரிய எடுத்துக்காட்டாவான். அவன் தான் பொல்லாதவனாயிருந்தது மட்டுமல்லாமல் யூத ராஜ்யம் அனைத்தையும் தேவனை அறியாத அஞ்ஞானிகள் செய்யும் பாவங்களைவிட மோசமான பாவங்களைச் செய்யப்பண்ணினான். எனினும் அவன் தன்னைத் தாழ்த்தியபோது, தேவன் எருசலேமுக்கும் அவனுடைய ராஜ்யபாரத்திற்கும் அவனைத் திரும்ப வரப்பண்ணினார். "கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக அழித்த ஜாதிகளைப் பார்க்கிலும், யூதாவும் எருசலேமின் குடிகளும் பொல்லாப்புச் செய்யத்தக்கதாய், மனாசே அவர்களை வழிதப்பிப்போகப் பண்ணினான். ... அவன் நெருக்கப்படுகையில், தன் தேவனாகிய கர்த்தரை நோக்கிக் கெஞ்சி, தன் பிதாக்களின் தேவனுக்கு முன்பாக மிகவும் தன்னைத் தாழ்த்தினான். அவரை நோக்கி, அவன் விண்ணப்பம்பண்ணிக்கொண்டிருக்கிறபோது, அவர் அவன் கெஞ்சுதலுக்கு இரங்கி, அவன் ஜெபத்தைக் கேட்டு, அவனைத் திரும்ப எருசலேமிலுள்ள தன்னுடைய ராஜ்யத்திற்கு வரப்பண்ணினார்" (II நாளா. 33 : 9 - 13). மனாசேயை எருசலேமுக்குத் திரும்ப வரப்பண்ணுதல் என்பது, நாம் நம்முடைய ஜீவியத்தில் இழந்துபோன மனசமாதானத்தைத் திரும்பப் பெறுவதையே காட்டுகிறது. (எருசலேம் என்பதற்கு, 'சமாதானம்' என்று பொருள்). அவனுடைய ராஜ்யத்திற்கு அவனைத் திரும்ப வரப்பண்ணுதல் என்பது, நம்மைப் பொறுத்த வரையில் நாம் இழந்துபோன ஊழியங்கள், வரங்கள், தாலந்துகள், ஆசீர்வாதங்கள், கிருபை போன்ற ஆவிக்குரிய ஐசுவரியங்களைத் திரும்பப் பெற்றுக்கொள்வதைக் குறிக்கிறது.

நம் முடிவு நித்திய இளைப்பாறுதலுக்குள் நம்மைப் பிரவேசிக்கச் செய்வதாய் இருக்கும்படியாக, நாம் அனைவரும் தாழ்மையாயிருக்கவும், எல்லாவற்றிலும் தேவனுக்கு மகிமையைச் செலுத்தவும் தேவன்தாமே நமக்குக் கிருபை அருளுவாராக.

அதிகாரம் 4

தாழ்மை - அருமையானதோர் ஜீவியம்!

தாழ்மையுடன் இணைக்கப்பட்ட அநேக ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் இருக்கின்றன. தாழ்மையின் ஜீவியம் உண்மையில் மிகவும் அருமையானதொன்றாகும்.

"பின்பு, பலமுள்ள வேறொரு தூதன் வானத்திலிருந்து இறங்கிவரக்கண்டேன்; மேகம் அவனைச் சூழ்ந்திருந்தது, அவனுடைய சிரசின்மேல் வானவில்லிருந்தது, அவனுடைய முகம் சூரியனைப்போலவும், அவனுடைய கால்கள் அக்கினி ஸ்தம்பங்களைப்போலவும் இருந்தது. திறக்கப்பட்ட ஒரு சிறு புஸ்தகம் அவன் கையில் இருந்தது; தன் வலதுபாதத்தைச் சமுத்திரத்தின்மேலும், தன் இடதுபாதத்தைப் பூமியின்மேலும் வைத்து" (வெளி. 10 : 1, 2).

'*இறங்கிவருதல்*' எனும் பதம் ஒருவன் தன்னைத் தானே தாழ்த்துவதைக் குறிக்கிறது. ஒரு பரிசுத்தவான் ஆவிக்குரிய ஜீவியத்தில் எவ்வளவதிகமாக முன்னேறிச் செல்கிறாரோ அவ்வளவதிகமாகத் தாழ்மையுள்ளவராக இருப்பார். மறுபக்கத்தில், பெருமை என்பது அகாதமான பாதாளமாயிருக்கிறது. அதில் உள்ளவர்கள் 'இறங்கி வருவதில்லை' - அதாவது தங்களைத் தாங்களே தாழ்த்துவதில்லை. அவர்கள் அங்கிருந்து 'மேல் நோக்கித் தாவும்படியாகவே' முயற்சிக்கிறார்கள். அருமையான தேவபிள்ளையே! நீ எங்கு இருக்கிறாய்? பரலோகத்திலா அல்லது அகாதமான

பாதாளத்திலா? உலகத்தின் பதவியையும் கனத்தையும் நாடி, உன்னை நீயே உயர்த்திக்கொண்டிருப்பாயாகில், நீ ஒருவேளை பாதாளக்குழியில் இருக்கக் கூடும். 'வானத்தில்' (பரலோகத்தில்) உள்ளவர்கள் மட்டுமே கீழே 'இறங்கி வர' முடியும் என்பதை நீ உன் நினைவிற்கொள்வாயாக.

'பலமுள்ள தூதன் இறங்கிவரக்கண்டேன்': இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் ஆவிக்குரிய பாடம் யாதெனில், நமது வல்லமை அல்லது பலம், நாம் 'கீழே இறங்குவதில்' அல்லது நம்மை நாமே தாழ்த்துவதில்தான் தங்கியிருக்கிறது என்பதே. பெருமையானது ஒருவனை ஆவிக்குரிய பிரகாரமாக மட்டுமல்ல, சில சமயங்களில் சரீரப்பிரகாரமாகவும் பலவீனப்படுத்துகிறது. லூசிபர் பெருமையின் காரணமாக அடைந்த தன் விழுகைக்கு முன்பு பலமுள்ள ஒரு தூதனாக இருந்தான் என்பது வெளிப்படை. எனினும் அவன் தன் விழுகைக்குப் பின்னர் பலவீனமடைந்தான் - "நீயும் எங்களைப்போலப் பலட்சயமானாயோ?" (ஏசாயா 14 : 10).

'மேகம் அவனைச் சூழ்ந்திருந்தது' : மேகம் என்பது மிகவும் இலேசான, பாரமற்ற வஸ்துக்களில் ஒன்றாகும். அது வானம் அல்லது ஆகாயத்தோடு சம்பந்தப்பட்டதாகும். வாழ்க்கையைக் கடும் பாரமுள்ளதாக்குவது பெருமையே ஆகும். தாழ்மையோ அதை மிகவும் இலகுவாக்குகிறது. கர்த்தராகிய இயேசு, 'என் சுமை இலகுவாய் இருக்கிறது' என்றார் (மத். 11 : 30).

'அவனுடைய சிரசின்மேல் வானவில்லிருந்தது': வானவில் தேவனோடு செய்யப்படும் உடன்படிக்கை அல்லது தேவனுடைய உடன்படிக்கையைக் குறிக்கிறது. 'கீழே இறங்கி வர' ஆயத்தமாயிருப்பவர்கள், தாங்கள் தேவனோடு செய்த உடன்படிக்கைகளைக் காத்துக்கொள்ளும் கிருபையை எப்பொழுதும் கண்டடைவார்கள். நம் வாழ்வின் எப்பகுதியிலாவது நம் தேவனோடு நாம் செய்த உடன்படிக்கையை முறித்திருப்போமானால் நம்மை நாமே

ஆராய்ந்து பார்த்து, அதன் காரணம் என்னவென்பதைக் கண்டறிவோமாக. ஒருவேளை பெருமை அல்லது 'நான்' என்கிற ஆணவமே இதன் மூலகாரணமாக இருக்கக் கூடும்.

'அவன் முகம் சூரியனைப்போல் இருந்தது': மகிமையடைந்த நம் கர்த்தரைப் பற்றிக் கூட இதே விளக்கத்தை நாம் காண்கிறோம் - "அவருடைய முகம் வல்லமையாய்ப் பிரகாசிக்கிற சூரியனைப்போலிருந்தது" (வெளி. 1 : 16). தேவபிள்ளைகளாகிய நமது முகம் அல்லது குணாதிசயம் கர்த்தரின் மகிமையுடன் பிரகாசிக்கத்தக்கதாக, நாம் கிறிஸ்துவின் தாழ்மையைத் தேடும்படி இது நம் யாவரையும் ஊக்குவிப்பதாக.

'அவனுடைய கால்கள் அக்கினி ஸ்தம்பங்களைப்போல் இருந்தது': தாழ்மையுள்ளவர்களின் கால்கள் 'ஜீவியத்தின் நடக்கை' அக்கினி ஸ்தம்பங்களைப் போன்றவை. அவர்கள் அக்கினி சோதனைகளினூடாகக் கடந்து செல்லும்போது எந்த அக்கினியும் அவர்களைச் சேதப்படுத்தவோ, தகித்துவிடவோ முடியாது. "நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய்; அக்கினி ஜுவாலை உன்பேரில் பற்றாது" (ஏசாயா 43 : 2).

'திறக்கப்பட்ட ஒரு சிறு புஸ்தகம் அவன் கையில் இருந்தது': திறக்கப்பட்ட புத்தகம் பரிசுத்த வேதாகமத்தைக் குறிக்கிறது. தாழ்மையான பரிசுத்தவான்களுக்கே வேத வசனத்திலுள்ள சத்தியங்கள் திறக்கப்படுகின்றன அல்லது வெளிப்படுத்தப்படுகின்றன. அவர்கள் 'பாலகர்' என்றும் அழைக்கப்படுகின்றனர். கர்த்தராகிய இயேசு, "பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்" (மத். 11 : 25) என்றார். தேவன் தம்முடைய வசனங்களிலுள்ள ஆழமான சத்தியங்களைத் தாழ்மையுள்ளவர்களுக்கே வெளிப்படுத்துகிறார். ஆனால் 'இறுமாப்புள்ளவனோ ஒன்றும் அறியான்!' (I தீமோ. 6 : 4).

'அவன் தனது வலதுபாதத்தைச் சமுத்திரத்தின்மேலும், இடது பாதத்தைப் பூமியின்மேலும் வைத்திருந்தான்': இது பூமி முழுவதின் மேலும் வல்லமையும் அதிகாரமும் உடையவர்களாயிருத்தலைக் காட்டுகிறது. மெய்யான தாழ்மை ஒருவனுக்குப் பூமி முழுவதின் மேலும் மட்டுமல்லாமல், அந்தகாரத்தின் வல்லமைகளின் மேலும் ஒரு தெய்வீக அதிகாரத்தைத் தருகிறது. 'ஒரு தூதன் பாதாளத்தின் திறவுகோலையும் பெரிய சங்கிலியையும் தன் கையிலே பிடித்துக்கொண்டு ***வானத்திலிருந்திறங்கிவரக்***கண்டேன். பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவுங் கட்டிவைத்தான்' (வெளி. 20 : 1, 2). சாதாரணமான ஒரு தூதன், தான் ***கீழே இறங்கிவந்தபோது*** விழுந்துபோன தூதர்கள் அனைவருக்கும் தலைவனாகிய சாத்தானைக் கட்டிப் பாதாளத்தில் தள்ளி அடைக்க வல்லமையுள்ளவனாய் இருந்தான் என்பது எத்தனை ஆச்சரியம்!

"இவைகளுக்குப்பின்பு, வேறொரு தூதன் மிகுந்த அதிகாரமுடையவனாய், வானத்திலிருந்து *இறங்கிவரக்*கண்டேன்; அவனுடைய மகிமையினால் பூமி பிரகாசமாயிற்று" (வெளி. 18 : 1). தாழ்மை என்பது மிக அதிகமான உன்னத வல்லமையை அளிப்பதுடன், முழு உலகத்தையும் தேவனுடைய மகிமையினால் பிரகாசிப்பிக்கவும் செய்கிறது. ***மெய்யான மனத்தாழ்மையுள்ள பரிசுத்தவான்கள் முழு உலகத்திற்கும் ஒளியாக இருக்கிறார்கள்.***

பிதாவின் சித்தம் செய்யும்படி கர்த்தராகிய இயேசு பரலோகத்திலிருந்து இறங்கி வந்தார். "என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் *வானத்திலிருந்திறங்கிவந்தேன்*" என்று அவர் கூறினார் (யோவான் 6 : 38). எவர்கள் 'இறங்கி வருகிறார்களோ', அதாவது தங்களைத் தாழ்த்துகிறார்களோ, அவர்களே நம் ஆண்டவர் செய்தது போல தேவனுடைய பரிபூரண சித்தத்தைச் செய்ய முடியும்.

தேவ மகிமையடைந்த புதிய எருசலேமாகிய ஜெயங்கொண்ட சபை - 'தேவனிடத்திலிருந்து, பரலோகத்தைவிட்டு *இறங்கி வந்தது*' (வெளி. 21 : 2). இப்பொழுது மனப்பூர்வமாகத் தங்களைத் தாழ்த்தி, ***கீழே இறங்கி வருபவர்கள்***, ஒருநாள் (அது இன்றையத் தினமாகவும் இருக்கக் கூடும்) ***"இங்கே ஏறிவா"*** (வெளி. 4 : 1) என்று பரலோகத்திலிருந்து ஒலிக்கும் கர்த்தருடைய எக்காள சத்தத்தைக் கேட்பார்கள். எனவே நாம் நம்முடைய ஜீவியத்தின் எல்லா அம்சங்களிலும் சகேயுவைப் போல துரிதப்பட்டு "*சீக்கிரமாய்* இறங்கி" வருவோமாக (லூக்கா 19 : 5).

தாழ்மையுள்ளவன் ஒருபோதும் இடறல் அடைவதோ, உள்ளத்தில் புண்பட்டிருப்பதோ இல்லை!

கசப்பு, பகை, புண்படுத்தப்பட்ட உணர்வுகள் ஆகியவற்றின் மூலகாரணம் ***மிக அதிகமான பெருமையின் ஆவி***தான் என்பது அதிர்ச்சி தருவதாக இருப்பினும், அது உண்மையே. "***இடும்புள்ளவன் (மிதமிஞ்சிய பெருமையுள்ளவன்) இடறிவிழுவான்;*** அவனை எடுத்து நிறுத்துவாரில்லை" (எரே. 50 : 32). 'இடறுதல்' என்பது 'மனத்தாங்கல் அடைதல்' அல்லது 'உள்ளத்தில் புண்படுத்தப்பட்டிருத்தல்' என்றும் பொருள்படும். இடும்புள்ளவன் விழும்போது யாதொரு மனிதனும் தூதனுங்கூட அவனுக்கு உதவி செய்ய இயலாது. மற்ற பல பாவங்களினிமித்தம் விழுகிறவர்களுக்கு யாராயினும் உதவி செய்து அவர்களைத் தூக்கிவிட முடியும். ஆனால் பெருமையின் காரணமாக விழுபவர்களுக்கு யாராலும் உதவி செய்ய முடியாது. பெருமையின் பயங்கர விளைவுகளைக் காணும்படி இது யாவரின் மனக் கண்களையும் திறக்க வேண்டும்.

நீ உன்னைத் தாழ்த்தி, நீ ஒரு தூசியே அன்றி வேறொன்றுமல்ல என்பதை உணர்ந்துகொள்வாயென்றால், மற்றவர்கள் உன்னைக் குறித்துத் தீமையாகப் பேசினாலோ அல்லது உன்னைத் தரக்குறைவாக நடத்தினாலோகூட நீ இடறலடைவதற்கு

ஒன்றுமிராது. தூசியை ஒருவர் மிதித்தாலும் அல்லது அதன்மீது துப்பினாலுங்கூட அதினிமித்தம் இடறலடைய அதற்கு ஒரு உரிமையும் இல்லையே! ***தாழ்மையுள்ள ஒரு மனிதன் ஒருபோதும்*** (அதாவது நிந்திக்கப்படும்போதும், பரிகசிக்கப்படும்போதும், தாழ்த்தப்படும்போதும், துன்புறுத்தப்படும்போதும்) ***தன் உணர்வில் புண்படுத்தப்பட முடியாது.*** நீ புண்படுத்தப்படும்போது, உண்மையில் புண்படுவது உன் பெருமையே. 'நான் மிக ஆழமாகப் புண்படுத்தப்பட்டிருக்கிறேன்' என்று நீ சொல்லுவாயாகில், உண்மையில் உனக்குள் மிக ஆழமான பெருமை இருக்கிறது என்றே நீ கூறுகிறாய். அதை நீ நிச்சயமாகவே ஒத்துக்கொள்ள மாட்டாய். அதுவும் உன் பெருமையின் நிமித்தமே!

கோபம், எரிச்சல், புண்படுத்தப்படுதல், இடறல்கள் ஆகியவை ஒன்றுமே இல்லாத அருமையான ஒரு ஜீவியத்தை நீ ஒரு நிமிடம் கற்பனை செய்து பார்! பணமும், மாளிகைகளும், உலகப்பொருட்களும் உனக்கு மகிழ்ச்சியை அல்லது சுகவாழ்வை அளிக்கமாட்டா. நம் பிரச்சினைகளைப் பெரும்பாலும் நாமே உருவாக்கிக்கொள்கிறோம். உன் சந்தோஷம், உன் சூழ்நிலைகளையோ அல்லது உனக்கு என்ன சம்பவிக்கிறது என்பதையோ பொறுத்ததல்ல. ஆனால் அச்சூழ்நிலைகளில் நீ எவ்விதம் செயல்படுகிறாய் என்பதையும், உனக்கு நேரிடுபவைகளைக் குறித்த உன் மனப்பான்மையையும் பொறுத்தே உன் சந்தோஷம் அமைகிறது. எடுத்துக்காட்டாக, ஒரு தோட்டத்தில் ஒரு ஆப்பிள் விதையையும், எட்டி விதையையும் நீ விதைக்கலாம். இரண்டு விதைகளுக்கும் ஒரே விதமான உரம், தண்ணீர் ஆகியவற்றை நீ பயன்படுத்துகிறாய். ஆனால் கடைசியாக, ஆப்பிள் மரம் சதைப்பற்றுள்ள இனிமையான பழங்களைத் தருகிறது, எட்டியோ மிகவும் கசப்பான பழங்களைத் தருகிறது. இவை இரண்டுமே ஒரே விதமான தண்ணீரையும் உரத்தையும் நிலத்தையும் அனுபவித்தன. இவ்வாறிருக்க, இந்த வித்தியாசத்தை உண்டுபண்ணியது யாது? வித்தியாசம் வித்தில்தான் உள்ளது! உன் இருதயத்தின் நிலையே

அந்த வித்தியாசமாகும். மனிதரின் இருதயத்தை இவ்விதைகளுக்கு நாம் ஒப்பிடலாம். ***நம் இருதயமே நம் பிரச்சினைகளின் மையமாகும்.*** ஒரு எட்டி மரம் ஒருபோதும் ஆப்பிள் மரமாக மாற முடியாது. ஆனால் உன் இருதயம் எட்டி மரத்தைக் காட்டிலும் அதிகக் கசப்புடையதாக இருந்தாலும், அதைச் சதைப்பற்றுள்ள இனிமையான கனிகளையுடைய ஆப்பிள் மரமாக மாற்றிவிட தேவனால் கூடும்.

தாழ்மை என்பது ஓர் இளைப்பாறுதலின் ஜீவியம்!

பெருமை ஒருவனைக் கற்பிக்கப்படக் கூடாதவனாக்குகிறது. பெருமையுள்ளவர்களை எவராலும் திருத்தவோ, ஒழுங்குபடுத்தவோ முடியாது. பெருமையுள்ள ஒருவனுக்குப் போதிக்கவோ, அல்லது அவனைத் திருத்தவோ யாராயினும் பிரயாசப்பட்டால் அவன், 'எனக்கு எல்லாம் தெரியும். ஒருவரும் என்னைத் திருத்தவோ, எனக்குப் போதிக்கவோ வேண்டியதில்லை' என்று கூறி, அவர்களுக்கு எதிர்த்துநிற்பான். பெருமையுள்ளவன் யாராலும் யாதொன்றும் கற்பிக்கப்படக் கூடாதவனாயிருக்கிறபடியால் அவன் ஒன்றும் அறியான். இதன் காரணமாகவே பெருமை ஒருவனைச் சுயாதீன ஆவியுள்ளவனாக்குகிறது. 'நான் யாரையும் கலந்தாலோசிக்க வேண்டியதில்லை. நான் செய்வது சரி என்பதை நான் அறிவேன்; எனவே நான் யாருடைய அபிப்பிராயத்தையும் கேட்க வேண்டிய தேவையில்லை' என்று அவன் கூறுவான். மாறாக, சாந்தமும் மனத்தாழ்மையுமுள்ளவர்களோ போதிக்கப்படத்தக்கவர்களாயும் திருத்தப்படக் கூடியவர்களாயும் இருக்கின்றனர். கர்த்தர் "சாந்தகுணமுள்ளவர்களுக்குத் தமது வழியைப் போதிக்கிறார்" (சங். 25 : 9).

கர்த்தராகிய இயேசு இவ்வுலகிற்கு வந்தபோது, அவர் எப்போதும் தம் பிதாவின் மேன்மையைக் குறித்தே பேசினார். அவர் தம்மைப் பற்றி, அதாவது தம்முடைய குணசீலத்தைப் பற்றிக் கூறியிருக்கும் ஒரே சந்தர்ப்பம், "நான் சாந்தமும் மனத்

தாழ்மையுமாய் இருக்கிறேன்; ... என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்" (மத். 11 : 29) என்பதே. கர்த்தராகிய இயேசு சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறார்; நாம் அவரிடத்திலிருந்து கற்றுக்கொள்ளும்படி அவர் நமக்குக் கூறியிருக்கிறார். ஏன்? நாம் நமது ஆத்துமாவுக்கு இளைப்பாறுதலைக் கண்டடையும்படியாகவே! நம்முடைய கர்த்தரின் இந்த நல்ல ஆலோசனையைத் தள்ளிவிட்டபடியால் இப்போது முழு உலகமும் இளைப்பாறுதலற்றிருக்கிறது. எனினும் அவரது சாந்தத்தையும் மனத்தாழ்மையையும் கற்றுக்கொண்ட சிலர் மாத்திரம் தங்கள் ஆத்துமாவில் இளைப்பாறுதலுள்ளவர்களாய், பாக்கியவான்களாக இருக்கிறார்கள். அருமையான வாசகரே! நீர் மெய்யான இளைப்பாறுதல் உள்ளவராயிருக்க விரும்புகிறீரா? அப்படியானால் கிறிஸ்துவைப் போன்ற தாழ்மையைக் கற்றுக்கொள்வீராக! "துன்மார்க்கரோ கொந்தளிக்கும் கடலைப்போலிருக்கிறார்கள்; அது அமர்ந்திருக்கக் கூடாமல், அதின் ஜலங்கள் சேற்றையும் அழுக்கையும் கரையில் ஒதுக்குகிறது. துன்மார்க்கருக்குச் சமாதானம் இல்லையென்று என் தேவன் சொல்லுகிறார்" (ஏசாயா 57 : 20, 21).

தேவன் தாழ்மையுள்ளவராயிருக்கிறார். எனவே தாழ்மையுள்ளோர் மட்டுமே அவரை அறிந்துகொள்ளவும் அவரிடமிருந்து கற்றுக்கொள்ளவும் இயலும். 'கிறிஸ்துவுக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கின்றன' (கொலோ. 2 : 3). வேறு வார்த்தைகளில் கூறின், கிறிஸ்து உலகிலேயே மிகப் பெரிய பல்கலைக்கழகமாகத் திகழ்கிறார். இந்தப் பல்கலைக்கழகத்தில் சேரும்படி அனுமதிக்கப்படுவதற்கான தகுதி *தாழ்மையே* ஆகும். அவர் மிகப் பெரிய பல்கலைக்கழகமாக இருப்பினும், இம்மைக்கும் மறுமை முழுமைக்கும் உரிய ஆசீர்வதிக்கப்பட்ட காரியங்களைக் கற்றுக்கொள்ளும்படி இத்தெய்வீக ஸ்தாபனத்திற்குள் மிகச் சிலரே பிரவேசித்திருக்கிறார்கள் என்பது எவ்வளவு வருந்தத்தக்கது! ஆனால் இது எத்தனை உண்மை!

இத்தகைய சமாதானமும் இளைப்பாறுதலுமுள்ள வாழ்க்கையில் நீர் பிரவேசித்துவிட்டால், இவ்வுலகிலிருக்கும் ஒன்றும் - மனிதனோ, அல்லது பிசாசோ உம் இளைப்பாறுதலைக் குலைத்துப்போட முடியாது. கல்லறைகளின்மேல் நாட்டப்பட்டிருக்கும் நினைவுச் சின்னங்களில், 'சமாதானத்துடன் இளைப்பாறுகிறார்' (R.I.P.) என்னும் வாசகம் பொறிக்கப்பட்டுள்ளதை நீர் பார்த்திருக்கலாம். நாம் இவ்வுலகில் வாழும்போதே இந்த வாசகம் நமக்குப் பொருந்துவதாயிருக்க வேண்டும்.

நீர் எவ்வளவதிகமாக மனத்தாழ்மையுள்ளவராய் இருக்கிறீரோ அவ்வளவதிகமான சமாதானமும் இளைப்பாறுதலும் உள்ளவராயிருப்பீர். நீர் எந்த அளவுக்குப் பெருமை உள்ளவராக இருக்கிறீரோ அந்த அளவுக்கு இளைப்பாறுதல் அற்றவராகவும் கலக்கமுள்ளவராகவும் இருப்பீர். இன்றே நீர் உம்மைத் தாழ்த்தி, கிறிஸ்துவாகிய மிகப் பெரிய பல்கலைக்கழகத்தில் பிரவேசிப்பீராக! தனித்தன்மை வாய்ந்த இப்பல்கலைக்கழகத்தில் நீர் இருக்கும் ஒவ்வொரு க்ஷணப்பொழுதும் உமக்கு இன்பமளிப்பதாயிருக்கும்; உம் ஜீவியமும் மறுரூபமடையும். மேலும் உம் வாழ்க்கை மற்றவர்களையும் தாழ்மையான ஜீவியம் செய்யும்படி அனல்மூட்டி எழுப்பும்.

தாழ்மையும் தூய்மையும் ஒருங்கிணைந்தே செல்லுகின்றன!

தாழ்மையுள்ளவர்களுக்குத் தேவன் கிருபை அளிக்கிறார் (யாக். 4 : 6). கிருபை என்னும் பதத்தின் ஆங்கில வார்த்தையான GRACE என்பதை ஒருவர் *'God's Riches At Christ's Expense'* என்று வரையறுத்துள்ளார். அதன் அர்த்தம், *'கிறிஸ்து செலுத்திய விலைக்கிரயத்தினால் நமக்குக் கிடைக்கும் தேவனின் ஐசுவரியங்கள்'* என்பதாகும். கிறிஸ்துவின் தாழ்மையில் நாம் பங்கேற்கும்போது அவருடைய பரிசுத்தத்தின் ஐசுவரியங்களை நாம் பெற்றுக்கொள்கிறோம். கொலோசெயர் 3 : 12 - லுங்கூட பரிசுத்தமும் தாழ்மையும் இணைந்து வருவதை நாம் காண்கிறோம். "நீங்கள்

தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், ... மனத்தாழ்மையையும் ... தரித்துக்கொண்டு" என நாம் வாசிக்கிறோம். "நித்தியவாசியும் பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவமும் உன்னதமுமானவர் சொல்லுகிறார்: உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நான், பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம்பண்ணுகிறேன்" (ஏசாயா 57 : 15). தேவன் மகத்துவமும் உன்னதமுமானவராக இருப்பினும், தாழ்மையுள்ளவர்களிடத்தில் வாசம் செய்கிறார்.

"தங்களைக் கறைப்படுத்தாதவர்கள் இவர்களே; ... ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் இவர்களே" (வெளி. 14 : 4). இதில் 'கறைப்படுதல்' என்னும் பதத்திற்கு மூலபாஷையில் *'மொலுனோ'* (Moluno) என்னும் வார்த்தை உபயோகிக்கப்பட்டுள்ளது. இதன் கருத்து 'எண்ணங்களில் கறைப்படுதல்' என்பதாகும். ஆகவே இவ்வேதபகுதியை 'தங்கள் சிந்தையில் கறைப்படாதவர்கள் இவர்களே' என்று நாம் வாசிக்க வேண்டும். 'ஆட்டுக்குட்டியானவரைப் பின்பற்றுவது' என்பது கிறிஸ்துவின் சாந்தத்தையும் மனத்தாழ்மையையும் பின்பற்றுவதேயாகும். (ஆட்டுக்குட்டி என்பது சாந்தம், தாழ்மை ஆகியவற்றின் சின்னமாயிருக்கிறது). எனவே தங்கள் எண்ணங்களில் கறைப்படாதவர்கள் மட்டுமே கிறிஸ்துவின் மனத்தாழ்மையைப் பின்பற்ற முடியுமென நாம் விளங்கிக்கொள்ளுகிறோம். இத்தகைய பரிசுத்தவான்களே சீயோனில் விலையேறப்பெற்ற கற்களாகப் பிரகாசிப்பார்கள்.

நண்பனே, நீ இவ்வுலகில் ஐசுவரியமுள்ளவனாக, மேன்மை வாய்ந்தவனாக, புகழ் பெற்றவனாக விளங்க வேண்டும் என்பன போன்றவற்றை உன் குறிக்கோள்கவும், விருப்பமாகவும் கொண்டு வாழ்வாயானால், மெய்யான பரிசுத்தம் என்றால் என்ன என்பதை

நீ ஒருபோதும் அறியாதவனாயிருப்பாய். கிறிஸ்தவர்கள் பலரும் பரிசுத்த ஜீவியம் செய்ய முடியாதவர்களாய்த் திணறிக்கொண்டிருப்பதின் காரணமும் இதுவே ஆகும். இது அவர்களுக்கு என்றென்றுமுள்ள ஓயாத போராட்டமாகவே இருக்கிறது.

மேன்மையான பதவி வகிக்க வேண்டும், பெரியவர்களாக வேண்டும் போன்ற வாஞ்சைகள் லூசிபரின் ஆவியினின்றே வருகின்றன. மெய்யான தாழ்மையுள்ள ஒரு மனிதனின் வாஞ்சையோ, 'நான் சிறுகவும், அவர் (அல்லது மற்றவர்கள்) பெருகவும் வேண்டும்' என்பதாகவே இருக்கும். கிறிஸ்தவர்கள் மத்தியிலுங்கூட பல சந்தர்ப்பங்களிலும், 'நான் பெருக வேண்டும்; மற்றவர்கள் சிறுக வேண்டும்' என்ற பொதுவான மனப்பான்மை நிலவுவது வருந்தத்தக்க விஷயமே. அநேக கிறிஸ்தவர்களும் கிறிஸ்தவ ஊழியர்களுங்கூட பதவிகள், பட்டங்கள் ஆகியவற்றிற்காகப் போட்டியிட்டு, தங்களைப் பதவிப் போராட்டங்களில் ஈடுபடுத்திக்கொள்கிறார்கள். தங்கள் பதவியையும் அதிகாரத்தையும் மற்றவர்களுக்கு மனப்பூர்வமாக விட்டுக் கொடுத்து, தங்களைக் கிறிஸ்துவுக்குள் மறைத்துக்கொள்ள ஆர்வங்கொள்ளும் பரிசுத்தவான்களைக் காண்பது அரிதாக உள்ளது. அப்படிப்பட்டவர்களே மெய்யான பரிசுத்த ஜீவியம் செய்யக்கூடிய மெய்யான பரிசுத்தவான்கள் ஆவர். ***தாழ்மையுள்ளவர்களைப் பொறுத்தவரையில், பரிசுத்த ஜீவியம் என்பது அவர்களுக்கு ஒரு போராட்டமாக அல்ல, கிருபையின் ஒரு அற்புத ஈவாகவே இருக்கும்.***

தாழ்மையுள்ளவர்கள் தங்கள் ஜீவியத்தில் எப்பொழுதும் ஓர் எழுப்புதல் உள்ளவர்களாயிருப்பார்கள். ஆவியானவரின் முதல் அசைவாடுதல் ஜலத்தின்மேல் இருந்தது என்பதை நினைவிற்கொள்க (ஆதி. 1 : 2). தண்ணீரின் ஒரு நல்ல தன்மை என்னவெனில், அது எப்போதும் தாழ்வான இடத்தை எடுத்துக்கொள்ளும்படி தாழ்ந்த இடத்தையே நோக்கி ஓடும். அதுவே நமது ஆவியாக அல்லது மனப்பான்மையாக இருத்தல் வேண்டும்.

அப். பவுலுங்கூட தன்னைப் பற்றி, 'பரிசுத்தவான்களெல்லாரிலும் சிறியவனிலும் மிகச் சிறியவனாகிய நான்' (எபே. 3 : 8 - Eng.) என்று குறிப்பிடுகிறார். எனவே இத்தகைய தாழ்மையுள்ள மனுஷன் பரிசுத்த ஜீவியம் செய்து, தான் எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிய சிறைப்படுத்தியதாகக் கூறக்கூடிய வராயிருந்தது ஆச்சரியமல்லவே! (II கொரி. 10 : 5).

சிலர் வார இறுதிக் கூட்டங்களிலும் ஆவிக்குரிய கன் வென்ஷன்களிலும் மற்றும் முகாம்களிலும் ஆவிக்குரிய எழுப்பு தல் அடைகின்றனர்; மற்ற நேரங்களில் அவர்கள் ஆவிக்குரிய பிரகாரம் வறட்சியடைந்தவர்களாகவும் மனச் சோர்வுற்றும் காணப் படுகிறார்கள். பிரியமான தேவபிள்ளையே! சில வேளைகளில் நீ உன் ஆவிக்குரிய ஜீவியத்தில் வறட்சியடைந்தவனாகக் காணப் படுகிறாயா? எப்போதும் நீ உன் எழுப்புதலைக் காத்துக்கொள்கிற வனாக இருப்பதற்கான இரகசியம் ஒன்று உண்டு. அது மெய்யான மனத்தாழ்மையே! தண்ணீரைப் போல மிகவும் தாழ்வான இடத்தை எடுத்துக்கொள்ளவே எப்போதும் நீ ஆயத்தமுள்ளவ னாகவும் வாஞ்சையுள்ளவனாகவும் இருப்பாயாக! அப்போது கர்த்தர் வருமளவும் நீ எழுப்புதல் உள்ளவனாகவே இருப்பாய்!

அதிகாரம் 5

கிறிஸ்துவில் எவ்வித பெருமையுமில்லை

தமது பிறப்பு முதல் மரணம் வரை நம் கர்த்தர் தாழ்மை யின் ஒரு பூரண முன்மாதிரியை நமக்குக் காண்பித்திருக்கிறார்: "நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்" (யோவான் 13 : 15). அவருடைய தாழ்மையைப் பின்பற்றாவிடில் நாம் ஒருபோதும் அவரைப் பின்பற்றுகிறவர்களாயிருக்க முடியாது. மெய்யாகவே ஓர் உண்மை தலைதூக்கி நிற்கிறது. அது, '***நாம் அவரது தாழ்மையைக் குறித்து எவ்வளவு அதிகமாய்க் கற்றுக்கொள்ளு கிறோமோ, அவ்வளவதிகமாய் அதைக் குறித்த பசியும் தாகமும் உள்ளவர்களாய் இருப்போம்***' என்பதே. அது ஒரு பெரும் பாக்கியம்! "... பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்" (மத். 5 : 6). கிறிஸ்துவின் மிகவும் போற்று தற்குரிய நற்பண்பாகிய தாழ்மையானது நம் அனுதின ஜீவியத்தில் அவரைப் பின்பற்றும்படி நம்மை அனல்மூட்டி எழுப்புவதாக! நம்முடைய கர்த்தர் பூமியில் இருந்த நாட்களில் அவரிலிருந்த தாழ்மையைச் சித்திரிக்கும் சில எடுத்துக்காட்டுகள் அடங்கிய ஒரு பட்டியலை நாம் கீழே காண்போம். இது எவ்விதத்திலும் அவரது தாழ்மை முழுவதையும் உள்ளடக்கிய ஒரு பட்டியலாக இருக்க முடியாது என்பதையும் நாம் நினைவிற்கொள்வோமாக!

1. கிறிஸ்துவின் பிறப்பு அல்லது அவருடைய பூமிக்குரிய வாழ்க்கையின் துவக்கம் பெருமையுள்ளதாய் இருக்கவில்லை.

சர்வ வல்லமையுள்ள தேவனாகிய இயேசு, மிகுந்த ஆடம்பரத்தோடும் மாட்சிமையோடும் ஒரு பிரமாண்டமான அரண்மனையில் பிறந்திருந்திருக்கலாம். ஆனால் 'சத்திரத்திலே அவர்களுக்கு இடமில்லாதிருந்தபடியினால், முன்னணையிலே' அவர் கிடத்தப்பட்டார் என நாம் வாசிக்கிறோம் (லூக்கா 2 : 7). அந்நாட்களில் மோட்டார் வாகனங்கள் இல்லாதபடியால், பயணிகள் குதிரைகள் மேலும், கழுதைகள் மேலும் சவாரி செய்தனர். அவர்கள் சத்திரங்களில் தங்கி, அச்சத்திரங்களைச் சேர்ந்த தொழுவங்களில் தங்கள் விலங்கினங்களைக் கட்டி வைப்பது வழக்கம். ஆகவே பண்டைக் காலத்துச் சத்திரங்களிலிருந்த தொழுவங்களைத் தற்காலத்திலுள்ள நவீன உணவு விடுதிகளின் வளாகங்களில் அமைந்துள்ள கார் நிறுத்தும் இடங்களுக்கு (Car Park) நாம் ஒப்பிடலாம். நம்முடைய இரட்சகர் பிறந்தபோது, அவர் தமது மிகுந்த தாழ்மையில் - ஒரு பொதுவான கார் நிறுத்துமிடத்தில் - இல்லை -அதைவிட மோசமான நிலையில் அசுத்தமும் துர்நாற்றமுள்ளதுமாயிருந்திருக்கக் கூடிய பொதுவான ஒரு மாட்டுத் தொழுவத்திலேயே கிடத்தப்பட்டார். அவரது பூலோக வாழ்க்கையின் துவக்கம் எவ்வளவு தாழ்மையானதாயிருந்தது! இதைக் குறித்த ஒரு வெளிப்படுத்தல் நமக்கு உண்டாயிருக்குமானால், ஒருவேளை நாம் ஒரு அரண்மனையில் பிறந்திருந்தாலுங்கூட ஒருபோதும் நம் பிறப்பின் அந்தஸ்தைக் குறித்து மேன்மைபாராட்ட மாட்டோம். நம்முடைய கர்த்தரும் இரட்சகருமான அவரை விட மேன்மையானவர்களாயிருக்க நாம் ஒருக்காலும் முயற்சி செய்யாதிருப்போமாக!

நம்முடைய ஆண்டவரின் பிறப்பு அவரது ஆழ்ந்த தாழ்மையைப் பிரதிபலித்தது போல, நம் ஆவிக்குரிய பிறப்பு ஒவ்வொன்றும் தாழ்மையுடன் சம்பந்தப்பட்டதாகும். கிறிஸ்தவ

ஜீவியத்தில் அநேக ஆவிக்குரிய பிறப்புகள் அல்லது முக்கியமான ஆவிக்குரிய அனுபவங்கள் உள்ளன - உதாரணமாக, மறுபடியும் பிறத்தல், ஜலத்தினால் பிறத்தல், ஆவியினால் பிறத்தல், சீயோனில் பிறத்தல் போன்ற பல அனுபவங்கள் உள்ளன. இப்பிறப்புகள் ஒவ்வொன்றும் அல்லது ஆவிக்குரிய அனுபவங்கள் ஒவ்வொன்றும் நம்மைத் தாழ்மையின் ஆழத்திலிருந்து இன்னும் அதிகமதிகமான ஆழங்களுக்குள் எடுத்துச் செல்ல வேண்டும். அநேகர் மறுபடியும் பிறந்தவர்களாயும் (மனந்திரும்புதல்), ஜலத்தினால் பிறந்தவர்களாயும் (தண்ணீர் ஞானஸ்நானம்), ஆவியினால் பிறந்தவர்களாயும் (பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம்) இருக்கின்றனர். இருப்பினும், அவர்களில் சிலர் சரியான ஆவிக்குரிய வளர்ச்சியின்றி அதிக வறட்சியான நிலையில் இருக்கிறார்கள். கிறிஸ்துவின் தாழ்மையை அவர்கள் கற்றுக் கொள்ளாதிருப்பதே இதன் முக்கியமான ஒரு காரணமாக இருக்கக் கூடும். நாம் அடைந்துகொள்ளும் ஆவிக்குரிய அனுபவங்களுக்கு ஏற்ப நம்மில் தாழ்மையும் வளர்ச்சியடைந்திருக்க வேண்டும். தாழ்மையற்ற யாதொரு ஆவிக்குரிய அனுபவமும் உயிரற்ற ஒரு உடலுக்குச் சமமாகும். மெய்யான தாழ்மையுள்ள ஒரு தேவபிள்ளை ஒருக்காலும் தன் ஆவிக்குரிய ஜீவியத்தில் வறட்சியடைவதில்லை - எந்த மனுஷனாலும் பிசாசினாலும் அவித்துப்போட முடியாத எழுப்புதல் எப்போதும் அவனுக்குள் இருக்கும். எந்தச் சோதனையும் அவனிலுள்ள எழுப்புதலின் அக்கினியை அணைத்துவிட முடியாது.

அருமையான தேவபிள்ளையே! நீ ஆவிக்குரிய பிரகாரமாக வறட்சியுள்ளவனாய் இருக்கிறாயா? நீ ஒருவேளை மறுபடியும் பிறந்தவனாகவும், ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறந்தவனாகவும் இருக்கலாம். ஆனால் நீ உன்னில் கிறிஸ்துவின் தாழ்மைக்கு இடமளிக்காதிருக்கலாம். உன் உள்ளத்தில் வீணான பல மேன்மைபாராட்டல்கள் இருக்கக் கூடும். உன்னில் புண்பட்ட உணர்வுகள், மன்னிக்க முடியாத ஆவி, கோபம் ஆகியவை

இருக்கக் கூடும். உன் ஆவியில் *கிறிஸ்துவின் தாழ்மையை நீ ருசித்திராவிடில் உண்மையில் நீ உன் கிறிஸ்தவ வாழ்க்கையை இன்னும் துவங்கவே இல்லை என்பதை நினைவிற்கொள்வாயாக!* உன் நிலைமை அவ்வாறிருக்குமாயின், இன்று முதலாயினும் ஒரு மெய்யான கிறிஸ்தவ வாழ்க்கையைத் துவங்க அருமையான ஆண்டவர் தாமே உனக்கு உதவி செய்வாராக! ஒரு காரியத்தைச் செய்யாமலே விட்டுவிடுவதைப் பார்க்கிலும், தாமதித்தாகிலும் அதைச் செய்வது நல்லதன்றோ!

2. கிறிஸ்துவின் ஊழியத்தின் துவக்கம் பெருமையுள்ளதாய் இருக்கவில்லை.

கிறிஸ்து தமது ஊழியத்தை உபவாசத்துடன் துவங்கினார். உபவாசம், ஒருவன் தன்னைத் தேவனுக்கு முன்பாகத் தாழ்த்துவதற்கு அடையாளமாகும். *'நான் உபவாசத்தால் என் ஆத்துமாவைத் தாழ்த்தினேன்'* (சங். 35 : 13 - Eng.) என நாம் வாசிக்கிறோம். எனினும் இது உபவாசிப்பவர்கள் அனைவரும் தாழ்மையுள்ளவர்கள் என்று பொருள்படாது. இருப்பினும், சரியான விதத்தில் மேற்கொள்ளப்படும் உபவாசம் நிச்சயமாகவே தேவனுக்கு முன்பாக நம்மைத் தாழ்த்த நமக்கு உதவி செய்யும். அருமை நண்பனே! நீ ஒருபோதும் உபவாசித்திராத ஒருவனாயிருப்பாயானால் *உன் தாழ்மை பொய்யான ஒன்றாகவே இருக்கும்!* இன்று கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகிற பலரும் வாரத்தில் ஒருமுறை கூட உபவாசிப்பதில்லை. எனவே அவர்கள் ஆவிக்குரிய பிரகாரம் (சில சமயம் சரீரப்பிரகாரமாகவும் கூட) மிகவும் பெலவீனராய் இருப்பதில் ஆச்சரியம் ஏதுமில்லை!

கர்த்தராகிய இயேசு தமது ஊழியத்தைத் துவங்கியபோது பிசாசானவன் அவரைச் சோதிக்கும்படி வந்தான். இதை நாம் நுட்பமாகக் கவனித்தால், அச்சோதனைகள் யாவும் அவரிலிருந்த தாழ்மையை நிரூபிப்பவையாகவே இருந்தன என்பதை நாம் காணலாம். "அப்பொழுது சோதனைக்காரன் அவரிடத்தில் வந்து:

நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான். அவர் பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்" (மத். 4 : 3, 4). கர்த்தராகிய இயேசு தாம் தேவனுடைய குமாரன் என்பதைப் பிறருக்கு நிரூபித்துக் காண்பிக்கும்படி, அவரைத் தம் சொந்த மகிமைக்காக ஒரு அற்புதத்தைச் செய்ய வைக்க வேண்டுமென்பதே அவருக்குப் பிசாசு கொண்டுவந்த முதல் சோதனையாகும். கர்த்தராகிய இயேசுவோ, *"மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல"* என்று தாழ்மையுடன் கூறி, தம்மை ஒரு மனுஷன் என ஒப்புக்கொண்டு, தம்மைத்தாமே தாழ்த்தினார். கற்களை அப்பங்களாக மாற்றக்கூடிய வல்லமை அவருக்கிருந்தபோதிலும் *அவர் தம் சொந்த மகிமைக்காகவோ, அல்லது தம்முடைய தனிப்பட்ட தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளும்படியாகவோ அற்புதம் செய்ய மறுத்தார்.* பிசாசானவன் மறுபடியுமாகக் கிறிஸ்துவின் தாழ்மையை மற்றொரு தந்திரமான முறையில் சோதித்தான். "அப்பொழுது பிசாசு ... நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும் ... என்று சொன்னான். அதற்கு இயேசு: உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக என்றும் எழுதியிருக்கிறதே என்றார்" (மத். 4 : 5 - 7). இங்கும் அவர் தாம் தேவனுடைய குமாரன் என்பதைக் காண்பிக்க வேண்டுமென்பதே அவருக்கு வந்த சோதனையாயிருந்தது. ஆனால் அவரோ, இச்சோதனையிலும் இதைத் தொடர்ந்து வந்த அடுத்த சோதனையிலும் பிதாவாகிய தேவனை 'உன் தேவனாகிய கர்த்தர்' என்று குறிப்பிட்டு, அவருடைய தேவத்துவத்தைத் தாழ்மையுடன் அங்கீகரித்தார். கடைசியாக அவர், "அப்பாலே போ சாத்தானே" (வச. 10) என்று பிசாசுக்குக் கட்டளையிடக் கூடியவரானார்; சாத்தானும் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டியதாயிற்று. தாழ்மையுள்ள பரிசுத்தவான்களே சாத்தான் மீது அதிகாரமும் வல்லமையும் உள்ளவர்களாயிருப்பர்.

தேவபிள்ளையே, கர்த்தராகிய இயேசு தம் ஊழியத்தைத் தாழ்மையுடன் துவங்கியது போலவே நாமும் **ஒவ்வொரு *ஊழியத்தையும் ஒவ்வொரு நாளையும்*** தாழ்மையுடன் துவங்க வேண்டும். நீ செய்கிற எல்லாவற்றையும் தாழ்மையுடன் செய்யத் துவங்குவாயாக; ஒவ்வொரு நாளும் உன் வேலை ஸ்தலத்தில் உன் வேலையைத் துவங்குகையில் தாழ்மையான ஒரு ஜெபத்துடன் துவங்குவாயாக. நீ அப்படிச் செய்தால் அந்த நாளின் வேலையின் அழுத்தத்தையும் கடினத்தையும் தாங்கக்கூடிய மகத்தான கிருபையை நீ கண்டடைவாய். உன் பள்ளி வாழ்க்கை, வியாபாரம், மண வாழ்க்கை போன்றவற்றைத் தாழ்மையான ஆவியுடனும் சாந்தமான மனப்பான்மையுடனும் ஆரம்பிப் பாயாக. நாம் எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் திட்டங்கள் வகுக்கும்போது, அது சிறிதாயினும் பெரிதாயினும் அதை நாம் கிறிஸ்துவைப் போன்ற மனத்தாழ்மையுடன் செய்கிறோமா அல்லது நம் சொந்த மகிமைக்காக (அதாவது வீண் மகிமைக்காக) செய்கிறோமா என்று நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போமாக. தாழ்மையின்றி செய்யப்படும் எதுவும் தோல்வியிலேயே முடிவடையும். கிறிஸ்துவைப் போன்ற தாழ்மை எல்லாவற்றின் மேலும் வெற்றிசிறப்பதுடன், நமக்கு நிலையான மகிழ்ச்சியையும் நித்திய ஐசுவரியங்களையும் கொண்டுவருகிறது. நாம் ஒட்டகங் களைப் போல் இருக்க வேண்டும். ஒவ்வொரு நாள் காலையிலும் மாலையிலும் அவை தங்கள் எஜமானுக்கு முன் தாழ்மையுடன் முழங்காற்படியிடுகின்றன; காலையில் எஜமான் தரும் சுமையை ஏற்றுக்கொள்ளவும், மாலையில் அதிலிருந்து விடுபடவும் அவை அப்படிச் செய்கின்றன.

3. *கிறிஸ்துவில் குடும்ப அந்தஸ்து குறித்த பெருமை இருக்க வில்லை.*

"இவன் தச்சனுடைய குமாரன் அல்லவா?" - கர்த்தராகிய இயேசு தச்சுத் தொழில் செய்யும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவரா

யிருந்தார். ஒரு தச்சனுடைய மகனுக்குத் தன் குடும்பத்தைக் குறித்துப் பெருமைபாராட்ட ஒன்றுமில்லையே! கர்த்தராகிய இயேசு ஒரு மகா ராஜாவுக்கும் மகா ராணிக்கும் புதல்வனாக, ஒரு ராஜ அரண்மனையில் பிறப்பதைத் தெரிந்தெடுத்திருக்கலாம். ஆனால் அவர் அப்படிச் செய்திருந்தால் அவர் நமக்குத் தாழ்மையின் மாதிரியாய்த் திகழ்ந்திருக்க முடியாது! தேவபிள்ளை களில் சிலர் மிக கௌரவம் வாய்ந்த குடும்பங்களில் பிறந்த வர்களாயிருப்பது உண்மையே. ஆயினும், நாம் எத்தனை சந்தர்ப்பங்களில் நம் ஆண்டவரின் தாழ்மையை மறந்து, நம்முடைய பின்னணி, குடும்ப அந்தஸ்து ஆகியவற்றின் மேன்மையை மற்றவர்களுக்குக் காண்பிக்க முயற்சிக்கிறோம்! எளிமையான குடும்பங்களில் பிறந்த சிலருங்கூட மற்றவர் களுக்கு முன்பாகத் தங்களை அதிக பகட்டாகக் காண்பித்துக் கொள்ளப் பிரயாசப்படுவது வருந்தத்தக்கதாகும்.

4. *கிறிஸ்துவில் குடியுரிமை பற்றிய பெருமை இருக்கவில்லை.*

சிலர், குறிப்பாக ஐசுவரியமுள்ள நாடுகளில் வசிப்பவர்கள் தாங்கள் வசிக்கும் தேசத்தைப் பற்றிய பெருமையுள்ளவர்களாய் இருக்கின்றனர். கர்த்தராகிய இயேசு நாசரேத் என்னும் ஒரு எளிய கிராமத்தில் வசித்துவந்தார். இந்தக் கிராமத்தைப் பற்றிச் சொல்லு வதற்கு யாதொரு நன்மையுமே இருக்கவில்லை. "நாசரேத்திலி ருந்து யாதொரு நன்மை உண்டாகக் கூடுமா" (யோவான் 1 : 46) என்று ஒருவன் வினவியது நமக்குத் தெரியுமே! அப்போதைய உலகின் சரித்திரப் புகழ் வாய்ந்த ராஜதானி பட்டணங்களாகிய ரோமாபுரியிலோ, எருசலேமிலோ வாழ்வதை அவர் தெரிந்து கொள்ளவில்லை. தேவன் நம்மை எந்த நகரத்தில், கிராமத்தில் வைத்திருந்தாலும், நாம் அந்த இடத்திற்கு எந்த மகிமையையும் அளிக்காமல், கிறிஸ்துவுக்கே மகிமை அளித்து, தாழ்மையாய் ஜீவிப்போமாக. தேவன்தாமே கட்டி உண்டாக்கிக்கொண்டிருக்கிற விண்ணுக்குரிய பட்டணத்தைச் சேர்ந்தவர்களாகிய நாம் அதைக் குறித்தே களிகூர்ந்து மகிழ்வோமாக!

5. கிறிஸ்துவில் அழகைப் பற்றிய பெருமை இருக்கவில்லை.

நம்முடைய கர்த்தரைக் குறித்து, "அவர் *முற்றிலும் அழகுள்ளவர்*" (உன். 5 : 16) என்று நாம் வாசிக்கிறோம். அவரது அழகு பரிசுத்தத்தின் அழகும், சுபாவத்தின் அழகும் ஆகும். அந்த அர்த்தத்தில், அவர் பதினாயிரம் பேரிலும் அழகிற் சிறந்தவராவார். தேவன் நமக்குத் தந்திருக்கும் சரீரத்தின் தோற்றம் எப்படிப்பட்டதாயிருந்தாலும் அதில் நாம் திருப்தியாய் இருப்போமாக. செயற்கை முறையில் நம்மை அழகுபடுத்தும்படி நாம் மேற்கொள்ளும் எந்தப் பிரயாசமும் பெருமையின் நிச்சயமான அடையாளமே ஆகும். பெருமையுள்ளவளாயிருந்த யேசபேல் தன் முகத்தில் வர்ணம் பூசிக்கொண்டாள் (Eng.); தன் கண்களுக்கு மையிட்டு, தன் தலையைச் சிங்காரித்துக் கொண்டாள்; ஆனால் அதிக தாமதமின்றியே தேவனுடைய தண்டனை அவள் மீது வந்தது (II இராஜா. 9 : 30 - 35).

நோவாவின் நாட்களில் பூமியின் மேல் வந்த முதலாவது நியாயத்தீர்ப்பு ஸ்திரீகளின் அழகோடு சம்பந்தப்பட்டதாகவே இருந்தது என்னும் உண்மையை அநேகர் அறியாதவர்களாயிருக்கின்றனர். "தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளை அதிக சௌந்தரியமுள்ளவர்களென்று கண்டு, அவர்களுக்குள்ளே தங்களுக்குப் பெண்களைத் தெரிந்துகொண்டார்கள்"; "மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்று ... கர்த்தர் கண்டு" ; "நான் ... மனுஷனை ... நிக்கிரகம்பண்ணுவேன்" என்றார் (ஆதி. 6 : 2, 5, 7). மனுஷகுமாரத்திகள் (தேவ பக்தியற்ற ஜனம்) ஏன் தேவ பக்தியுள்ள ஸ்திரீகளைக் காட்டிலும் அதிக அழகுள்ளவர்களாகத் தோற்றமளித்தனர்? தேவன் பக்தியுள்ள ஸ்திரீகளுக்குப் புறம்பான அழகைக் காட்டிலும் உள்ளான அழகாகிய தூய்மையையே கொடுக்கிறார். தேவ பக்தியற்ற ஸ்திரீகளுக்கு உள்ளான அழகு இல்லாததால், அவர்கள் புறம்பான அழகைக் குறித்து அல்லது செயற்கையான அழகைக் குறித்தே மிகுந்த கருத்துள்ளவர்களாயிருக்கின்றனர். மேற்கூறப்பட்டுள்ள

வேதபகுதியில், தேவபக்தியற்ற ஸ்திரீகளின் செயற்கையான அழகானது தேவ குமாரர்களை (தேவபிள்ளைகளை) வசீகரித்துவிட்டது போல் தோன்றுகிறது. இது ஜலப்பிரளயத்தினால் உண்டான நியாயத்தீர்ப்பில் முடிவடைந்தது. தேவபக்தியற்ற ஸ்திரீகளின் செயற்கையான அழகு அவ்வளவு கேடு விளைவிக்கக்கூடியதாயிருந்து, நியாயத்தீர்ப்பை வருவித்திருக்குமாயின், தேவ பக்தியுள்ள ஸ்திரீகளின் செயற்கை அழகு எப்படிப்பட்ட கேடும் கொடியதுமான நியாயத்தீர்ப்பை வருவிக்கக் கூடும் என்பதே இங்கு நாம் சிந்திக்க வேண்டிய விஷயமாகும்.

'தேவன் வெளித்தோற்றத்தையல்ல, இருதயத்தைத்தான் காண்கிறார்' என்று சிலர் வாதாடுகிறார்கள். "பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள். சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக" (I தெச. 5 : 22, 23). உங்களுடைய வெளித்தோற்றம் 'பொல்லாங்கானதாய்' இருக்குமாயின், அது உங்கள் ஆவி ஆத்துமா சரீரத்தின் பரிசுத்தமாகுதலைத் தடை செய்யும் என்பதும், நீங்கள் கிறிஸ்துவின் வருகைபரியந்தம் குற்றமற்றவர்களாய்க் காக்கப்பட முடியாது என்பதும் மேற்கூறப்பட்டுள்ள வேதபகுதியில் மிகவும் தெளிவாயிருக்கிறது. "மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக் கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது" என்று அப். பேதுரு போதிக்கிறார் (I பேதுரு 3 : 3, 4). வெளித்தோற்றம், 'இருதயத்தில் மறைந்திருக்கிற குணம்' ஆகிய இரண்டிலுமே நாம் எளிமையுள்ளவர்களாயிருக்க வேண்டும் என்பதைக் குறித்து

தேவன் மிகவும் கருத்துள்ளவராயிருக்கிறார் என்பதில் சந்தேக மில்லை. மேலும், சிலர் புறம்பே மகிமையான தோற்றமுடைய வர்களாக இருக்க விரும்புவதின் காரணம், அவர்கள் உள்ளே மகிமையற்றவர்களாயிருப்பதேயாகும். 'இருதயத்திலல்ல, வெளி வேஷத்தில் மேன்மைபாராட்டுகிறவர்களுக்கு நீங்கள் பதிலளிக்கத் தக்கவர்களாயிருக்கும்படி' என்று நாம் வாசிக்கிறோம் (II கொரி. 5 : 12 - Eng.). கிறிஸ்துவின் மணவாட்டிக்குச் செயற்கை அழகு இல்லை; ஆனால் அந்திக்கிறிஸ்துவின் மணவாட்டிக்கோ செயற்கை அழகு உண்டு (வெளி. 17 : 3, 4).

"போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்" (I தீமோ. 6 : 6). தேவன் உங்களுக்குத் தந்திருக்கும் புறம்பான அழகில் திருப்தியுள்ளவர்களாயிருங்கள்; அதுவே மிகுந்த ஆதாயமாயிருக்கும். *இல்லையெனில் நீங்கள் பெரிய நஷ்டத்தைச் சந்திப்பீர்கள்.* எவ்வாறு? செயற்கை முறையில் வசீகரமாக இருக்கப் பிரயாசப்படுபவர்கள், தங்கள் சரீரத்தின் மிக அற்பமான குறைபாடுகளைக் குறித்துங்கூட மிதமிஞ்சிய சிந்தை யுள்ளவர்களாயிருப்பார்கள். அக்குறைகள் பிறர் காணக் கூடாதவை யாயிருந்தாலும், அவை இவர்களது மனதை எப்போதும் வதைத்துக் கொண்டிருக்கும் ஏதுக்களாக இருக்கக் கூடும். அநேக சந்தர்ப்பங்களில், வசீகரமாயிருப்பவர்கள், தேவன் தங்களுக்கு அளித்திருக்கும் அழகில் திருப்தியற்றவர்களாய், இன்னும் அதிக வசீகரமாயிருக்கப் பிரயாசப்படுவர். அப்படிப்பட்டவர்கள், தங்க ளுடைய வசீகரத்தைத் தாங்கள் இழந்துவிட நேரிடுமோ என்ற பயத்தை உடையவர்களாயிருப்பதால், அது அவர்களில் சோர்வு, மன அமைதியின்மை, பொறாமை, சலிப்பு போன்றவற்றைக் கொண்டுவரக் கூடும். தங்கள் புறம்பான அழகைக் குறித்த உணர் வுள்ளவர்களாகவே (beauty- conscious) இருக்கும் அநேகருடைய பரிதாபகரமான நிலை இதுவே! அவர்களுக்கு வயது அதிகரிப்ப தற்கேற்ப, தாங்கள் தங்களுடைய அழகை இழந்துவிடுவார்களோ என்ற பயமும் அவர்களில் அதிகரிக்கிறது. கடைசியாக,

மற்றவர்கள் தங்களைக் காட்டிலும் வசீகரமாய் இருப்பதைக் காணும்போது அவர்கள் மனச்சோர்வடைகிறார்கள்; சிலர் முடிவில், தற்கொலை செய்துகொள்கிறார்கள் அல்லது மனநல காப்பகத்தைச் சென்றடைகிறார்கள்.

6. கிறிஸ்துவில் புகழ்ச்சியைக் குறித்த பெருமை இருக்கவில்லை.

ஜனங்களுடைய புகழ்ச்சியை விரும்புவது மனித இயல்பு. பெருமையினாலேயே நாம் ஜனங்களுடைய புகழ்ச்சியை நாடித் தேடுகிறோம் என்கிற உண்மையைப் பரிசுத்தவான்களில் வெகு சிலரே கண்டுபிடித்துள்ளனர். கர்த்தராகிய இயேசுவுக்குப் புகழ்ச் சியைக் குறித்த பெருமை இருக்கவில்லை. 'அவர் அசட்டை பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவருமாயி ருந்தார்' (ஏசாயா 53 : 3). மிகப் பெரிய பரிசுத்தவான்களில் சிலருக்குங்கூட - அவர்கள் எத்தனையோ பரிசுத்தமாக்கப்படாத சுபாவங்களை மேற்கொண்டவர்களாயிருப்பினும் - மனிதருடைய பாராட்டுதலை அல்லது அங்கீகாரத்தைப் பெற வேண்டும் என்ற அடங்கா ஆவலை மேற்கொள்ளுவது கடினமானதாகத் தோன்று கிறது. "அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பினார்கள்" என நாம் வாசிக்கிறோம் (யோவான் 12 : 43). மனுஷருடைய புகழ்ச்சியை விரும்புகிறவர்கள் தங்களை மற்றவர்கள் குறைகூறும்போது சோர்ந்துபோய் மனந்தளர்ந்துபோகக் கூடுமாதலால், இது உண்மையில் ஒரு கண்ணியாகவே உள்ளது. நாம் மெய்யாகவே கிறிஸ்துவின் தாழ்மையைக் கற்றுக்கொள்ளும்போது, நம்மிடம் குற்றங்கண்டுபிடிக்கப் பிரயாசப்படுபவர்களை நாம் விசேஷமான விதத்தில் நேசிப்போம். பிறர் நம்மைக் குறைகூறும்போது நாம் அதினால் உள்ளத்தில் புண்படுவோமாயின், நாம் பெருமை என்னும் படுகுழியினுள் இருக்கிறோம் என்று பொருள்.

கர்த்தராகிய இயேசு இப்பூமிக்கு வருமுன், அவர் பரலோகத்திலுள்ள அனைத்து தூதர்களுடைய புகழ்ச்சியையும் தொழுதுகொள்ளுதலையும் உடையவராயிருந்தார். ஆனால் அவர்

பரலோகத்தின் அனைத்து மகிமையையும் துறந்து பூமிக்கு மனிதனாக இறங்கி வந்தபோதோ, புறக்கணிக்கப்பட்டு, அசட்டை பண்ணப்பட்டு, துப்பப்பட்டு, அடிக்கப்பட்டு, பரிகசிக்கப்பட்டு, முடிவில் உலகிலேயே மிக மோசமான குற்றவாளி அவர்தான் என்பது போல சிலுவையிலும் அறையப்பட்டார். ஆயினும் நம்முடைய கர்த்தர் எவ்வித முறுமுறுப்பும் முறையிடுதலுமின்றி இவற்றினூடாகக் கடந்து சென்றார். தமக்கு முன் வைக்கப் பட்டிருந்த சந்தோஷத்தின்பொருட்டு அவர் சிலுவையைச் சகித்தார்.

அருமையான தேவபிள்ளையே, நீ மனுஷருடைய புகழ்ச்சியை விரும்பினால், முடிவில் தேவனுடைய புகழ்ச்சியை இழந்துபோவதற்கான அனைத்து சாத்தியக்கூறுகளும் உனக்கு உண்டு. ஜனங்கள் நம்மைப் புகழ்ந்து பாராட்டக்கூடிய சமயங்கள் இருக்கக் கூடும் என்பது மெய்யாயிருப்பினும், நம்முடைய இருதயம் அதில் சந்தோஷப்படக் கூடாது. புகழப்படும்போது செருக்கடைந்து, குறைகூறப்படும்போது சோர்வடையும் ஒருவன், ஒரு மாம்சீகமான மனிதனாவான். கர்த்தராகிய இயேசுவின் சிலுவை மிகவும் மோசமான புறக்கணிப்பின் உருவாக இருந்த போதிலும், அவரது உயிர்த்தெழுதல் அவர் பிதாவின் அங்கீ கரிப்பையும் பாராட்டுதலையும் பெற்றவர் என்பதை நிரூபித்தது. நாம் இலட்சக்கணக்கானோரின் புகழையும் பாராட்டுதலையும் பெற்றுக்கொண்டு, முடிவில் நரகத்தைச் சென்றடைவதைக் காட்டி லும், தற்காலத்தில் பிறரால் புறக்கணிக்கப்பட்டு அவமதிக்கப் படினும், முடிவில் நம்முடைய கர்த்தருடைய பாராட்டுதலைப் பெற்றுக்கொண்டவர்களாய் அவருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசிப்பதே நலம்.

நம்முடைய கர்த்தர் நமக்குக் காண்பித்திருக்கும் முன் மாதிரியைப் பாருங்கள்! அவர் எருசலேமில் ஜெயத்துடன் பிரவேசித்த நாளில், ஜனங்களெல்லாரும் 'ஓசன்னா' என்று ஆர்ப்பரித்தார்கள்; சிறு பிள்ளைகளுங்கூட அவரைப் பாடித்

துதித்தனர். நம்முடைய இரட்சகர் மனிதரால் பாராட்டப்பட்டு மேன்மைப்படுத்தப்பட்ட அந்நாளைப் போல் வேறொரு நாள் பூமியில் அவருக்கு இருந்ததில்லை. பாராட்டப்படுதல், புகழப் படுதல் ஆகிய எல்லாவற்றின் மத்தியிலும் அவர் செய்தது என்ன? அவர் எருசலேமைப் பார்த்து, அதற்காகக் கண்ணீர் விட்டழுதார்: "திரளான கூட்டமாகிய சீஷரெல்லாரும் ... சந்தோ ஷப்பட்டு, ... மிகுந்த சத்தத்தோடே தேவனைப் புகழ்ந்தார்கள். ... அவர் சமீபமாய் வந்தபோது நகரத்தைப்பார்த்து, அதற்காகக் கண்ணீர் விட்டழு(தார்)" (லூக்கா 19 : 37, 38, 41). தாழ்மைக்கு எத்தகையதோர் எடுத்துக்காட்டு இது!

7. *கிறிஸ்துவில் ஐசுவரியத்தைக் குறித்த பெருமை இருக்கவில்லை.*

நம்முடைய கர்த்தர் இப்பூமியில் தமது ஊழியத்தைப் பசியோடு ஆரம்பித்து, தாகத்தோடு முடித்தார் (மத். 4 : 2; யோவான் 19 : 28). அவருக்கென்று சொந்தமாக ஒரு வீடு இருக்கவில்லை, அவர் தங்குவதற்கென்று ஒரு வாடகை வீடும் அவருக்கு இருக்கவில்லை. "நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு, மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை" என்று அவர் சொன்னார் (லூக்கா 9 : 58). ஐசுவரியமுள்ளவர்களாயிருப்பதில் தவறொன்றுமில்லை யென்றாலும், செல்வத்தின் மேலும், மற்றும் சொகுசான கார்கள், விலையுயர்ந்த வீடுகள் போன்றவற்றுடன் வாழும் ஆடம்பரமான ஒரு வாழ்க்கையின் மேலும் உள்ள வாஞ்சை பெருமையின் ஆவியிலிருந்தே முளைத்தெழும்புகிறது. இது ஒரு கண்ணியாக மாறக் கூடும். ஆகையால், "உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக்கடவோம்" (I தீமோ. 6 : 8). (பணப் பற்றாக்குறைவு அல்ல) பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது.

"ஐசுவரியவான்களே, கேளுங்கள், உங்கள்மேல் வரும் நிர்ப்பந்தங்களினிமித்தம் அலறி அழுங்கள். உங்கள் ஐசுவரியம்

அழிந்து, உங்கள் வஸ்திரங்கள் பொட்டரித்துப்போயின. உங்கள் பொன்னும் வெள்ளியும் துருப்பிடித்தது; அவைகளிலுள்ள துரு உங்களுக்கு விரோதமாகச் சாட்சியாயிருந்து, அக்கினியைப்போல உங்கள் மாம்சத்தைத் தின்னும்" (யாக். 5 : 1 - 3). இது எத்தகைய தொரு பயங்கரமான எச்சரிப்பாயிருக்கிறது! ஐசுவரியவான் தன்னுடைய நிர்ப்பந்தங்களினிமித்தம் அலறி அழ வேண்டும். நாம் வெள்ளி, பொன் அல்லது பணத்தை நேசித்தால், அது உண்மையில் நம்முடைய மாம்சத்தைத் தின்னும் ஒரு அக்கினி யாக மாறிவிடக்கூடும்!

"ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள்" (I தீமோ. 6 : 9, 10). நாம் இவ்வுலக ஆஸ்திகளை விரும்பினால், அநேக சோதனை களிலும் கண்ணிகளிலும் விழ வேண்டியதாகும் என்பதை இவ்வேதபகுதி நமக்கு வெளிப்படுத்துகிறது. மேலும், மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகள் நம்முடைய ஆவி ஆத்துமா சரீரத்தை அழித்துப்போடக்கூடும். முடிவில் நாமே நம்மை அநேக வேதனைகளாலே உருவக் குத்திக்கொண்டு கர்த்தர் பேரிலுள்ள விசுவாசத்தையும் இழந்துபோவோம்.

'மிகுந்த ஐசுவரியம்' என்பதற்கு எபிரெய மொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள சரியான பதம், 'மிகவும் பளுவானது' என்றுங்கூட பொருள்படும். 'ஐசுவரியங்களைச் சம்பாதிப்பதில் பாரம் மிகுந்த கவலை உண்டு; அவைகளைப் பாதுகாப்பதில் பயம் உண்டு; அவைகளைத் தவறாக உபயோகிப்பதில் சோதனை உண்டு; அவைகளைத் துர்ப்பிரயோகம் செய்வதில் குற்றம் உண்டு; அவற்றை இழப்பதில் துக்கம் உண்டு; பயங்கரமான நியாயத்தீர்ப்பு நாளன்று, தேவனிடம் அவைகளுக்குரிய கணக்கு ஒப்புவிக்க

வேண்டிய நிர்ப்பந்தமும் உண்டு' என்று ஒரு தேவமனிதன் கூறுகிறார். சகோதரரே, நாம் ஐசுவரியத்தின் பெருமைக்குள் விழுந்து விடாதிருப்போமாக. நமக்கு ஆஸ்திகளைக் கொடுப்பது தேவனுக்குப் பிரியமாயிருக்குமாயின், நாம் நித்தியமான ஐசுவரி யங்களைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஏழை எளியவர்களின் மீதும் கரிசனையுள்ளவர்களாயிருந்து, நம்முடைய உலகப்பிரகார மான ஆஸ்திகளைக் கர்த்தருக்காகச் செலவழிப்போமாக.

8. கிறிஸ்துவில் தம் ஆவிக்குரிய மேன்மையைப் பற்றிய பெருமை இருக்கவில்லை.

"நானோ ஒரு புழு, மனுஷனல்ல; மனுஷரால் நிந்திக்கப் பட்டும், ஜனங்களால் அவமதிக்கப்பட்டும் இருக்கிறேன்" (சங். 22 : 6) என்று நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைப் பற்றி முன் னுரைக்கப்பட்டுள்ளது. தரையில் ஊர்ந்துகொண்டிருக்கும் ஒரு புழுவுக்கு மேன்மைபாராட்ட ஒன்றுமேயில்லையே! நாம் பெற்றுக் கொண்டிருக்கும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் அனைத்தின் மத்தியிலும், நாம் வெறும் மண்ணென்பதையும், மண்ணுக்குத் திரும்ப வேண்டியவர்களென்பதையும் உணர வேண்டும். நம்மில் ஏதாயினும் இருக்குமாயின், அது கர்த்தர் நமக்கு எல்லாவற்றிற்கும் எல்லாமாக இருப்பதினாலேயே ஆகும்.

மனுஷீகப் பெருமையிலுள்ள பல்வேறு வகைகளில், "உன்னைப்பார்க்கிலும் நான் பரிசுத்தன்" என்கிற மனப்பான்மை, பெருமையின் மிக மோசமான தரங்களில் ஒன்றாகும். ஆகையால், ஆவிக்குரிய மேன்மைகளைப் பற்றிய பெருமைக்கு மிக மோசமான தண்டனையுண்டு: "நீ உன்மட்டிலிரு, என் சமீபத்தில் வராதே, உன்னைப்பார்க்கிலும் நான் பரிசுத்தன் என்று சொல்லு கிறார்கள்; இவர்கள் என் கோபத்தாலாகிய புகையும், நாள்முழுதும் எரிகிற அக்கினியுமாயிருப்பார்கள். இதோ, அது எனக்கு முன்பாக எழுதியிருக்கிறது; நான் மவுனமாயிராமல் சரிக்குச் சரிக்கட்டு வேன்" (ஏசாயா 65 : 5, 6).

9. கிறிஸ்துவில் தம்மைத் தாம் மேன்மையாக எண்ணிக் கொள்கிற அல்லது தாம் முக்கியத்துவம் வாய்ந்தவர் என்று எண்ணுகிற பெருமை இருக்கவில்லை.

"நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்" என்று கர்த்தராகிய இயேசு கூறினார் (மத். 11 : 29). நம்மிலுள்ள பெருமையானது நம்மை விட பிறரை மேன்மையாக எண்ண நமக்கு இடமளிக்காமலிருக்கக் கூடும் (பிலி. 2 : 3). அதன் விளைவாக, பிறர் நம்மை ஏற்றுக்கொள்ளாமலிருக்கும்போது நாம் இடறலடைகிறோம். நாம் நம்முடைய பெருமையை அல்லது நாம் ஏதோ முக்கியமானவர்கள் என்ற மனப்பான்மையை முற்றிலும் விட்டு விடுவோமென்றால், பிறர் நம்மைப் பரிகசிக்கும்போது அல்லது நம்மைக் குறித்துத் தீமையான மொழிகளைப் பொய்யாய்ச் சொல்லும்போது நாம் சந்தோஷப்பட்டுக் களிகூரலாம். துரதிர்ஷ்டவசமாக, கிறிஸ்தவர்கள் பலரும் தாங்கள் துன்பப்படுத்தப்படும்போது அல்லது நிந்திக்கப்படும்போது சந்தோஷப்பட்டுக் களிகூருவதற்குப் பதிலாக, சுய அனுதாபத்தினால் அழுதரற்றுகிறார்கள் அல்லது முறையிட்டு முறுமுறுக்கிறார்கள்.

"மனுஷகுமாரன் நிமித்தமாக ஜனங்கள் உங்களைப் பகைத்து, உங்களைப் புறம்பாக்கி, உங்களை நிந்தித்து, உங்கள் நாமத்தைப் பொல்லாததென்று தள்ளிவிடும்போது நீங்கள் பாக்கியவான்களாயிருப்பீர்கள். அந்நாளிலே நீங்கள் சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்" (லூக்கா 6 : 22, 23). கிறிஸ்தவர்களில் ஒரு சதவீதத்திற்கும் குறைவானவர்களே இந்த அழகிய வேதபகுதியைப் பயிற்சிக்கின்றனர் என நாம் கூறலாம். மற்றவர்களால் ஏன் அதைப் பயிற்சிக்க முடிவதில்லை? மனிதன் தன்னுடைய நற்பெயரைத் தவிர வேறெதையும் அர்ப்பணித்துவிட ஆயத்தமாயிருக்கிறான். நம்மைக் குறித்து யாரும் தீமையாகப் பேசுவதை நாம் விரும்புவதில்லை - நாம் நற்பெயரை ஆசிக்கிறோம். ஏதாயினும் ஒரு

சந்தர்ப்பத்தில் நம்முடைய பெயர் கெடுக்கப்படுமாயின், அதினிமித்தம் நாம் ஏமாற்றமும் கோபமும் கலக்கமும் அடைகிறோம். கர்த்தராகிய இயேசு தம்முடைய நற்பெயரை இழந்தார். ஜனங்கள் அவரைப் பிசாசுகளின் தலைவனாகிய 'பெயெல்செபூல்' என்று அழைத்தனர். அவர் ஒரு குற்றவாளியாக, ஏன் பிரதானமான குற்றவாளியாக எண்ணப்பட்டு, பொது ஜனங்கள் யாவரும் காணத்தக்க வகையில் இரண்டு குற்றவாளிகளுக்கிடையே சிலுவையிலறையப்பட்டார். அவர் துப்பப்பட்டு, கண்கள் கட்டப்பட்டு, தலையில் குட்டப்பட்டார். இவை யாவும் அவரைச் சிறுமைப் படுத்தும் செயல்களாயிருந்தபோதிலும், அவர் அவற்றையெல்லாம் சகித்தார். அவருடைய பெயர் கெடுக்கப்பட்டபடியினால், பிதாவானவர், கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும் எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார் (பிலி. 2 : 10, 11). இது நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தோடு சம்பந்தப்படுத்தப் படக் கூடிய ஆச்சரியமான ஒரு சத்தியமாகும். நாம் ஒரு தவறும் இழைக்காமலிருந்தும் நம்முடைய பெயர் கெடுக்கப்படும்போது அதில் நாம் சந்தோஷப்பட்டுக் களிகூரக் கற்றுக்கொள்வோமாயின், அப்போது பிசாசின் கூட்டமெல்லாம் நடுங்கி, தேவ மகிமைக்கென்று நம்முடைய பாதத்தில் விழும். மறுபக்கத்தில், ஜனங்கள் நம்மைப் புறக்கணித்து நிந்திக்கும்போது நாம் துக்கப்பட்டு மனச்சோர்வடைவோமாயின், பிசாசானவன் நம்முடைய ஜீவியத்தின் மேல் ஆதிக்கம் செலுத்த முற்படுவான். அவன் இந்த உபாயத்தைக் கொண்டே உங்கள் ஜீவியம் முழுவதையும் பாதிக்கப்படத்தக்க தாக்கி விடக் கூடும்! ஆகவே எச்சரிக்கையாயிருங்கள். நம்முடைய சுபாவத்தின் பெலவீனமான அம்சத்தைத் தனக்கு சாதகமாக்கிக்கொண்டு, அதன் வழியாகவே அவன் ஒரு திருடனைப் போல் நம்மிடம் வருகிறான் என்பதை நினைவிற் கொள்ளுங்கள். அருமையான நண்பனே, நீ அசட்டைபண்ணப்

பட்டு புறக்கணிக்கப்படும்போது சந்தோஷப்பட்டுக் களிகூரும்படியாக, உன்னை நீயே முக்கியமானவனாக எண்ணிக்கொள்ளும் எண்ணத்தைச் சிலுவையின் அடியில் அர்ப்பணித்துவிடுவாயாக; அப்போது பரலோகத்தில் உன்னுடைய பலன் மிகுதியாயிருக்கும்; பூமியில் சாத்தான் உன்னுடைய கால்களின் கீழ் நசுக்கப்படுவான்!

10. கிறிஸ்துவில் பிறரைப் பார்க்கிலும் தம்மை உயர்ந்தவராக எண்ணிக்கொள்ளும் பெருமை இருக்கவில்லை.

ஒருவன் தன்னை மற்றவர்களைப் பார்க்கிலும் உயர்ந்தவனாக எண்ணிக்கொள்ளும் பெருமை என்றால் என்ன? அது, அவன் தான் மற்றவர்களை விட மேலானவனாதலால் பிறர் தன்னை மதிக்க வேண்டும், தனக்குச் சேவை செய்ய வேண்டும் அல்லது கீழ்ப்படிய வேண்டும் என்கிற மனப்பான்மை உள்ளவனாயிருத்தல் அல்லது கற்பனைசெய்துகொள்ளுதல் ஆகும். அது, நம்முடைய கருத்துக்களும் திட்டங்களும் மற்றவர்களுடையவைகளைக் காட்டிலும் சிறந்தவை என்று எண்ணுதலுமாகும். நம்முடைய அபிப்பிராயங்களை ஏற்றுக்கொள்ளாதவர்களிடம் அல்லது மதிக்காதவர்களிடம் நாம் கோபமும் துக்கமுமடைகிறோம். ஆயினும், கிறிஸ்துவிலிருந்த அருமையான ஆவியைப் பாருங்கள்! *"நான் உங்கள் நடுவிலே பணிவிடைக்காரனைப்போல இருக்கிறேன்"* என்று அவர் கூறினார் (லூக்கா 22 : 27).

'நான் மற்றவர்களைக் காட்டிலும் மேலானவன்' என்ற உணர்வை அல்லது தற்பெருமையை இந்நவீன காலத்து மொழியில் - *'தன்னைத்தான் பெரியவனாகக் காண்பித்துக்கொள்ளுதல்'* ('showing off') என நாம் அழைக்கலாம். அந்திக்கிறிஸ்து தன்னைத்தானே மேன்மையானவனாகக் காட்டிக்கொள்வதைப் பாருங்கள் - "அவன் எதிர்த்துநிற்கிறவனாயும், தேவனென்னப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவ

னாயும் இருப்பான்" (II தெச. 2 : 4). ஒரு அர்த்தத்தில், ஒருவன் தான் மற்றவர்களிலும் மேலானவன் என்று தன்னைக் குறித்து எண்ணிக்கொள்ளும் பெருமை, அவன் தன்னை ஜனங்கள் 'வணங்கி', மதித்து, தனக்குக் கீழடங்கியிருக்கும்படி தன்னைத்தானே பிறரைவிட மேலானவனாக உயர்த்திக்கொள்வதாகும்.

நாம் எவ்வளவு திறமையுள்ளவர்கள், பெரியவர்கள், ஐசுவரியவான்கள், ஞானிகள், பெலவான்கள் என்பதை ஜனங்கள் அறிய வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். நம்முடைய நடை, உடை, பாவனை, நாம் மற்றவர்களிடம் நடந்துகொள்ளும் விதம், பேச்சு எல்லாம் நம்முடைய 'மேன்மையை' அல்லது நாம் எவ்விதம் மற்றெல்லாரையும் விட உயர்ந்தவர்கள் என்பதை வெளிப்படுத்துவதாயிருக்க வேண்டுமென நாம் விரும்புகிறோம். இதுதான் சாலொமோன் ராஜாவிலிருந்த மிகப் பெரிய பிரச்சினைகளில் ஒன்று என்று சில பரிசுத்தவான்கள் கருதுகின்றனர். அவன் தன்னைத்தான் வெளிப்படுத்திக் காட்டிக்கொண்டதைப் பாருங்கள் - "நான் பெரிய வேலைகளைச் செய்தேன்; எனக்காக வீடுகளைக் கட்டினேன், திராட்சத்தோட்டங்களை நாட்டினேன். எனக்காகத் தோட்டங்களையும் சிங்காரவனங்களையும் உண்டாக்கி, அவைகளில் சகலவகைக் கனிவிருட்சங்களையும் நாட்டினேன். மரங்கள் பயிராகும் தோப்புக்கு நீர்ப்பாய்ச்சுகிறதற்குக் குளங்களை உண்டுபண்ணினேன். வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் சம்பாதித்தேன்; வீட்டிலும் வேலைக்காரர் பிறந்தார்கள்; எனக்கு முன் எருசலேமிலிருந்த எல்லாரைப்பார்க்கிலும் ஆடுமாடு முதலான திரண்ட ஆஸ்திகள் எனக்கு இருந்தது. வெள்ளியையும் பொன்னையும், ராஜ சம்பத்தையும் மாகாணங்களிலுள்ள பொருள்களையும் சேகரித்தேன்; சங்கீதக்காரரையும் சங்கீதக்காரிகளையும், மனுபுத்திரருக்கு இன்பமான பலவித வாத்தியங்களையும் சம்பாதித்தேன். எனக்குமுன் எருசலேமிலிருந்த எல்லாரைப் பார்க்கிலும் நான் பெரியவனும் திரவிய சம்பன்னனுமானேன்" (பிர. 2 : 4 - 9). *முழு உலகிலும் உள்ள அனைவரிலும் பெரியவனாகத்*

தன்னைக் காண்பித்துக்கொண்ட அவனுக்கு முடிவில் சம்பவித்தது என்ன? "என் கைகள் செய்த சகல வேலைகளையும், நான் பட்ட எல்லாப் பிரயாசத்தையும் கண்ணோக்கிப் பார்த்தேன்; இதோ, எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருந்தது; சூரியனுக்குக் கீழே பலன் ஒன்றுமில்லை" என்று அவன் கூறுகிறான் (வச. 11). சாலொமோனுக்கு அவனுடைய ஜீவியத்தின் முடிவில் நரம்புத் தளர்ச்சி நோய் ஏற்பட்டிருக்கக் கூடும் என்றும், அதினிமித்தமாகவே அவன் ஒரு பைத்தியக்காரனைப் போல "மாயை, மாயை, எல்லாம் மாயை" என்று புலம்பத் தொடங்கி விட்டான் என்றும் சில பரிசுத்தவான்கள் கருதுகிறார்கள். தன்னை மேன்மையானவனாகக் காட்டிக்கொள்வதற்கென்றே இப்படிப்பட்ட சிறப்பான காரியங்களைச் செய்துகொண்டிருந்த அம்மனிதனுக்கு எப்படிப்பட்டதொரு துக்ககரமான முடிவு உண்டாயிற்று!

அருமையான தேவபிள்ளையே, உன்னை எல்லாரிலும் மேலானவனாக எண்ணிக்கொள்ளச் செய்கிற பெருமையின் வல்லமைக்கு நீ கீழ்ப்பட்டிருக்கிறாயா என்று ஒரு கணம் ஆராய்ந்து பார். இந்தத் தற்பெருமையானது சக்திவாய்ந்த ஒரு போதைப்பொருளைப் போன்றது. எவ்வளவதிகமாக அப்போதைப் பொருளை நீ உட்கொள்ளுகிறாயோ - அது உன்னை உணர்வற்றவனாக அல்லது பைத்தியக்காரனாக மாற்றும் வரை - அவ்வளவதிகமாக அதற்காக நீ ஏங்கிக்கொண்டிருப்பாய். சாலொமோனுடைய ஞானம், அவன் தன்னைத்தானே மேன்மையானவனாக வெளிப்படுத்திக் காட்டிக்கொண்டதின் மூலம் *பைத்தியமாக* மாறிற்று என்பதை நினைவிற்கொள்வாயாக. முடிவில் அவனே அதை ஒத்துக்கொண்டு, "நான், ஞானமானது என்ன என்றும், பைத்தியமும் மதியீனமும் என்ன என்றும் பார்த்து அறியும்படி திரும்பினேன்" என்று கூறுகிறான் (பிர. 2 : 12). தாங்கள் மேலானவர்கள் என்ற பெருமை உடையவர்களாயிருந்த அநேகர் முடிவில் பைத்தியக்காரர்களாக அல்லது மனநோயுற்றவர்களாக மாறினார்கள் என்பதைச் சரித்திரமுங்கூட நமக்குப் போதிக்கிறது.

நம்முடைய மேன்மைபாராட்டல் எப்பொழுதும் மகிமையின் கர்த்தரில் மாத்திரம் இருக்கும்படி, இப்படிப்பட்ட எல்லா விதமான பெருமைகளினின்றும் நாம் நம்மை வெறுமையாக்கிக் கொள்ள கர்த்தர்தாமே நமக்குக் கிருபை அருளுவாராக. இவ்வாறு தங்களைத் தாழ்த்தி வெறுமையாக்கிக்கொள்கிற பரிசுத்தவான்களுடைய முடிவு நிச்சயமாகவே மகிமையுள்ளதாயிருக்கும்.

11. கிறிஸ்துவில் கல்வியறிவைக் குறித்த பெருமை இருக்கவில்லை.

கர்த்தராகிய இயேசு பள்ளிக்குச் செல்லவில்லை. 'இவர் பள்ளிக்குச் செல்லாதவராயிருந்தும் எப்படி இவ்வளவு காரியங்களை அறிந்திருக்க முடியும்?' என நாம் வாசிக்கிறோம் (யோவான் 7 : 15 - Living Bible). கல்வி கற்பதில் யாதொரு தவறுமில்லை; உண்மையில், அது பல விதங்களில் நன்மை பயப்பதாயுள்ளது. ஆனால் நம் கல்வித்தகுதிகளைக் குறித்து நம்மில் உண்டாகும் பெருமையே தவறானதாகும். சில சமயங்களில் நாம் நம்முடைய உயர்கல்வி, பட்டங்கள், பதவிப் பெயர்கள் ஆகியவற்றைப் பிறர் அறிய வேண்டுமென்று விரும்புகிறோம். நாம் அடைந்திருக்கும் கல்வித்தகுதிகளைக் கர்த்தருக்குச் சரியான விதத்தில் ஒப்புக் கொடுக்காதிருக்கும் பட்சத்தில், அது நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கும், நாம் தேவசித்தம் செய்வதற்கும் பெரும் இடையூறாக மாறக் கூடும். 'மோசே எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களிலும் கற்பிக்கப்பட்டான்' (அப். 7 : 22). எகிப்தின் அரண்மனையில் அவன் நாற்பது வருடங்களாகப் பெற்றிருந்த கல்வியறிவு அல்லது கல்வித்துறை சார்ந்த சாதனைகள், அவன் நாற்பது வருடங்களாக ஆடுகளை மேய்த்துக்கொண்டு வனாந்தரத்தில் சந்தித்த கஷ்டங்களின் வாயிலாக நொறுக்கப்பட வேண்டியதாயிற்று.

நற்சுபாவமற்ற அறிவு அபாயகரமானது என்பது உண்மையாகும். ஆகையினாலேயே தேவனுடைய வசனம், 'நற்சுபாவத்தோடே ஞானத்தையும் கூட்டி வழங்குங்கள்' (II பேதுரு 1 : 5, 7 - Eng.)

என்று சரியாகக் கூறுகிறது. உலகத்தில் உங்களுக்கு உண்டாயிருக்கும் கல்வியறிவின் அளவும், உங்களுடைய சுபாவத்தின் தரமும் சமநிலையுள்ளவையாக இராவிடில், நீங்கள் 'படித்த முட்டாளாகவே' இருப்பீர்கள். இன்றைய உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் உள்ள ஒரு பெரும் பிரச்சினை இதுவேயாகும். கல்வி நிறுவனங்களில் இளைஞர்கள் பூமிக்குரிய கல்வியறிவை அதிகமாக அடைகிறார்கள்; ஆனால் அவர்கள் நல்லொழுக்கக் கல்வியறிவை அல்லது ஆவிக்குரிய கல்வியறிவை மிகவும் குறைவாகவே பெறுகிறார்கள். இதினிமித்தமாகவே, அநேக மாணவர்கள் சீர்கெட்டுப்போனவர்களாக பல்கலைக்கழகங்களினின்று வெளிவருகிறார்கள். பலரும் புகைப் பிடிக்கவும், மது அருந்தவும், போதைப் பொருட்களை உட்கொள்ளவும், ஒழுக்கமற்ற செயல்களில் ஈடுபடவும் தங்களுடைய கல்லூரிகளில் கற்றுக்கொள்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்டவர்கள் பின்னாட்களில் சமுதாயத்தில் முக்கியமான பதவிகளை வகிக்கும்போது, அவர்கள் முழுச் சமுதாயத்தையும் கெடுக்கிறார்கள் என்பது ஆச்சரியமல்லவே. 'திறமையும் கல்வியும் நம்மை உயர்ந்த ஸ்தானத்திற்குக் கொண்டுவரக்கூடும்; ஆனால் நற்குணம் மட்டுமே நம்மை அதில் நிலைகொள்ளச் செய்யும்' என்பதை நாம் மறவாதிருப்போமாக.

அப். பவுல் ஒரு பெரிய கல்விமானாயிருந்தார் - தேசாதிபதியாகிய பெஸ்துவுங்கூட அவருடைய 'அதிகக் கல்வியைக்' குறித்து அறிந்திருந்தான் (அப். 26 : 24). ஆனால் அவர் கிறிஸ்துவை அறிந்துகொள்வதற்காக, (தன் அதிகக் கல்வி உட்பட) எல்லாவற்றையும் குப்பையாக எண்ணியதினிமித்தம், அவருடைய 'அதிகக் கல்வி' அன்று மாத்திரமல்லாமல் இன்றுங்கூட ஒரு பெரிய ஆசீர்வாதத்தின் ஊற்றாக இருக்கிறது - அவருடைய நிருபங்களைப் பாருங்கள்! அவை மிகவும் ஆழ்ந்த கருத்துள்ளவையாகவும், அநேகர் ஆசீர்வதிக்கப்படுவதற்குக் காரணமாகவும் இருக்கின்றன.

அருமையான நண்பனே, மற்ற அநேகருக்கு இல்லாத சில விசேஷமான தகுதிகள் அல்லது பட்டங்கள் உனக்கு இருக்கக் கூடும். அதைக் குறித்து உன்னுடைய இருதயத்திலிருக்கும் வீணான மேன்மைபாராட்டல், தேவன் தம்முடைய மகிமைக்கென்று உன்னுடைய கல்வியறிவை உபயோகிப்பதைத் தடைபண்ணும். அப். பவுலைப் போல, அதைக் 'கிறிஸ்துவை அறிகிற அறிவின் மேன்மைக்காக' நீ குப்பையாக எண்ணுவாயானால், தேவன் உன்னுடைய கல்வியறிவைத் தம்முடைய மகிமைக்காக இலட்சக்கணக்கான ஜனங்களுக்கு ஆசீர்வாதமாக்குவார். கல்வியில் நீ பெற்றிருக்கும் பட்டங்கள் மறைக்கப்பட்டு, கிறிஸ்து மட்டுமே உன்னிலும் உன் மூலமாகவும் வெளிப்படுவாராக. நம்முடைய சாதனைகள், இலட்சியங்கள், நாம் நம்பிக்கை வைத்திருக்கும் மேன்மையான நற்சான்றுகள் அனைத்தையும் கர்த்தருடைய பாதத்தில் நாம் அர்ப்பணித்துவிடுவோமாக.

12. *கிறிஸ்துவில் பிரயாணம்செய்தலைப் பற்றிய பெருமை இருக்கவில்லை.*

கர்த்தராகிய இயேசு இருநூறு மைல் சுற்று வட்டாரத்திற்குள் மட்டுமே எப்போதும் பிரயாணம் செய்துவந்தார்; அதுவும் அவர் பெரும்பாலும் நடந்தே சென்றார். அவர் தன் தேசத்தை விட்டுச் சென்றதாகக் கூறக்கூடிய சந்தர்ப்பங்கள் அரிது. அவர் குழந்தையாயிருந்தபோது, ஒரு குறுகிய காலத்திற்கு எகிப்துக்கு எடுத்துச் செல்லப்பட்டார் (மத். 2 : 14). அவர் தம்முடைய ஊழியத்தின்போது தீரு சீதோன் பட்டணங்களின் எல்லைகளுக்கு ஒருமுறை சென்றார், அவ்வளவுதான் (மாற்கு 7 : 24). அதிகப் பிரயாணங்களை மேற்கொள்வதில் தவறொன்றுமில்லை. அப். பவுல் பல்வேறு சபைகளுக்கு ஊழியஞ்செய்கையில் அதிகமான பிரயாணங்களை மேற்கொண்டார். நாம் எந்த மனப்பான்மையோடு அல்லது நோக்கத்தோடு பிரயாணம் செய்கிறோம் என்பதைக் குறித்தே நாம் கவனமாயிருக்க வேண்டும். சிலர் தங்கள் பிரயாணங்களைக்

குறித்து, 'நான் ஐந்து முறை உலகம் முழுவதையும் சுற்றி வந்திருக்கிறேன்; அநேக தேசங்களுக்கு விஜயம் செய்திருக்கிறேன்' என்றெல்லாம் பெருமையாகச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். அப். பவுலுடன் சேர்ந்து நாமுங்கூட, "நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக" (கலா. 6 : 14) என்று அறிக்கை செய்வோமாக.

13. *கிறிஸ்துவில் ஜாதி, இனம் பற்றிய பெருமை இருக்கவில்லை.*

ஜாதிப் பெருமை என்ற ஒன்று உண்டு என்றும், அதன் மூலமாகவே ஜாதி வேற்றுமையுணர்வு உண்டாகிறது என்றும் அநேகர் உணராதிருக்கின்றனர். அது சிலர் ஜாதிவெறிகொண்டவர்களாக மாறுவதற்கும் வழிவகுத்துவிடுகிறது.

நம்முடைய கர்த்தர் யூத குலத்தைச் சார்ந்த ஒரு தாய்க்குப் பிறந்தார். யூதர்கள் தங்களை உயர்ந்த ஜாதியைச் சேர்ந்தவர்களாக எண்ணிக்கொண்டனர். அவர்களால் சமாரியர் தாழ்ந்த ஜாதியினர் என்று கருதப்பட்டனர். ஒரு சமாரியன் கையிலிருந்து தண்ணீர் வாங்கிக் குடிக்கவுங்கூட ஒரு யூதன் மறுத்துவிடுவான். யூதர்கள் ஒருமுறை கர்த்தராகிய இயேசுவைச் 'சமாரியன்' என்று பரியாசமாக அழைத்தபோது, அவர் மௌனமாயிருந்தார் (யோவான் 8 : 48).

இன சம்பந்தமான வேற்றுமையுணர்வானது, மொழி, தோலின் நிறம், கோத்திரம், பண்பாடு அல்லது தேசம் ஆகியவற்றோடு சம்பந்தப்பட்டதாகும். இன வேற்றுமை உணர்வினிமித்தம் அநேக நாடுகளில் இப்பொழுது யுத்தங்கள் நடக்கின்றன; அநேக ஆயிரங்கள் கொல்லப்படுகின்றனர். ஜாதிப் பெருமையினிமித்தம் ஏற்பட்டுள்ள பகைமை, பதற்றம் இவற்றினிமித்தம் எந்தத் தேசத்திலும் சமாதானம் என்பதே இல்லை. அநேக கிறிஸ்தவர்களுங்கூட மொழி, ஜாதி இவற்றின் அடிப்படையில் பிரிந்திருக்கிறார்கள். இது வருந்தத்தக்க ஒரு விஷயமாகும். ஜனங்களை ஒன்றாக இணைப்பதே தேவனுடைய திட்டம் ஆகும். 'என்

னுடைய வீடு *சகல ஜாதிகளுக்கும்* ஜெபவீடு என்னப்படும்' என்று கர்த்தர் உரைக்கிறார் (ஏசாயா 56 : 7 NIV).

மொழி வேறுபாட்டின் ஆவி, ஜாதி வேறுபாட்டின் ஆவி, கோத்திர வேறுபாட்டின் ஆவி போன்ற எந்த ஆவியாயிருப்பினும், அது மனுஷரை ஆவிக்குரிய பிரகாரமாகவும், சரீரப் பிரகாரமாகவும், மனநிலை சம்பந்தமாகவும், எழுச்சிகள் சம்பந்தமாகவும், இன்னும் தன்னால் இயன்ற எந்த வகையிலும் பிரித்து அழிக்கும்படி காத்துக்கொண்டிருக்கும் ஒரு பயங்கரமான பிசாசாகும். சிலுவையின் பாதத்தண்டையில் நாம் அனைவரும் ஒன்றாய் இணைந்திருக்கும்படியாக, இந்த அசுத்த ஆவிகளை நாம் பகுத்தறிந்து, கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் அவைகளை நம்மை விட்டுத் துரத்திவிட வேண்டும்.

அருமையான தேவபிள்ளையே, உன்னில் ஜாதி அல்லது நிறத்தைக் குறித்த வேற்றுமையுணர்வு இருக்கிறதா? அவ்வாறிருக்குமாயின் தேவன் இம்மட்டும் உன்னைத் தண்டிக்காமல் விட்டிருப்பது தேவனுடைய இரக்கம் மட்டுமே! தேவன் மனிதனை மண்ணினால் உண்டாக்கினார்; மனிதன் மறுபடியும் மண்ணுக்கே திரும்புவான். மொழி, நிறம், ஜாதி போன்ற வித்தியாசங்களைப் பார்ப்பதற்கு இந்த 'மண்ணுக்கு' என்ன உரிமை இருக்கிறது? நாம் 'மண்' என்று கர்த்தர் நினைவுகூருகிறார் (சங். 103 : 14), ஆனால் நாம் அதை நினைவுகூருகிறோமா?

14. *கிறிஸ்துவில் பேச்சுத் திறமையைக் குறித்த பெருமை இருக்கவில்லை.*

சிலருக்கு, தாங்கள் மற்றவர்களைக் காட்டிலும் நன்றாகப் பேசக்கூடியவர்கள் என்ற உணர்வு இருக்கிறது. கர்த்தராகிய இயேசுவுக்கு இவ்விதமான பெருமை இருக்கவில்லை. "நான் சுயமாய்ப் பேசவில்லை, நான் பேசவேண்டியது இன்னதென்றும் உபதேசிக்கவேண்டியது இன்னதென்றும் என்னை அனுப்பின பிதாவே எனக்குக் கட்டளையிட்டார்" என்று அவர் கூறுகிறார் (யோவான் 12 : 49).

சில சொல்வன்மை மிக்கவர்களும் சாதுரியமாகப் பேசும் திறமை கொண்டவர்களுமாயிருக்கிறார்கள். நாம் எந்த அளவுக்குத் தாலந்துகளுள்ளவர்களாயிருக்கிறோமோ அந்த அளவுக்குத் தேவனுக்கே எல்லா மகிமையையும் செலுத்திக்கொண்டு, அதிகத் தாழ்மையுள்ளவர்களாயும் இருக்க வேண்டும். இல்லையெனில் 'மேடைப் பிரசங்கியின் பெருமை' என்னும் கண்ணியில் நாம் சிக்கிக்கொள்ள நேரிடும். சில பிரசங்கிக்கவோ அல்லது பாடவோ தங்கள் குரலில் ஒரு விசேஷமான கிருபை அல்லது திறமை உள்ளவர்களாய் இருக்கிறார்கள். ஏரோது ராஜாவுக்கு வியக்கத்தக்க அருமையான குரல் இருந்தது என்பது வெளிப்படை - "ஜனங்கள் இது மனுஷசத்தமல்ல இது தேவசத்தம் என்று ஆர்ப்பரித்தார்கள்" (அப். 12 : 22). ஆனால் அவன் தேவனுக்கு மகிமை செலுத்தத் தவறியதால் புழுக்களுக்கு இரையானான். இனிமையாகப் பாடும் தாலந்து பெற்ற பாடகர்கள் பலரும் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தைப் பெருமையினால் அழித்துக்கொண்டார்கள் என்பது வருந்தத்தக்க ஒரு விஷயமாகும்.

மோசே எகிப்தின் அரமனையில் இருந்தபோது, வாக்கில் வல்லவனாயிருந்தான் (அப். 7 : 22). 'அவன் ஒரு வல்லமையான பேச்சாளனாக மாறினான்' என்று மற்றொரு ஆங்கில மொழி பெயர்ப்பு கூறுகிறது. அவன் சொல்வன்மை மிக்க ஒரு பேச்சாளனாயிருந்தபோது தேவனால் அவனை உபயோகிக்க முடியவில்லை என்பது எவ்வளவு விநோதமாயிருக்கிறது! நாற்பது வருடங்களாக வனாந்தரத்திலிருந்து ஆடுகளை மேய்த்த பின்பு, அவன் தன்னுடைய சொல்வன்மையை இழந்து ஒரு திக்குவாயனாக மாறினான். அவன் தன்னுடைய சொல்வன்மையை இழந்த பின்னரே - "எனக்கு ஆராதனைசெய்ய என் ஜனங்களை அனுப்பிவிடு" என்ற - பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட அக்கினிமயமான ஒரு தூதுடன் தேவன் அவனைப் பார்வோனிடம் பேசும்படி அனுப்பினார். மோசே ஒரு வல்லமையான பேச்சாளனாயிருந்தபோது தேவன் அவனைப் பார்வோனிடம் அனுப்பியிருந்திருப்பாரேயானால் எல்லா எகிப்தியருக்கும் என்று சொல்லி மிகவும் சொல்வன்மையுடன் அவன் தன்னுடைய வார்த்தைகளை பேசியிருப்பான். அடிமைத்தனத்தின் நிலைமையைப் பற்றியும் விடுதலையின் மகிமையைக் குறித்தும் பார்வோனுக்கு முன்பாக ஒரு நீண்ட சொற்பொழிவாற்றியிருந்திருப்பான். அது பார்வோனைச் சிறிதளவேனும் அசைத்திருக்காது. ஆனால் இப்போதோ மோசே திக்குவாய் உள்ளவனாக, கர்த்தர் தனக்குக் கொடுத்த ஒருசில வார்த்தைகளை மட்டுமே பேசக்கூடியவனானான். "எனக்கு ஆராதனைசெய்ய என் ஜனங்களை அனுப்பிவிடு" என்ற இவ்வார்த்தைகள் முடிவில் தேவனுடைய நோக்கம் நிறைவேற வழிவகுத்தன.

அருமையான தேவபிள்ளையே, நீ ஒருவேளை பாடுவதற்கோ அல்லது பேசுவதற்கோ அழகிய குரலை தானமாகப் பெற்றிருக்கலாம். அவ்வாறாயின், அதிகமான தாழ்மைக்காக நீ தேவனை நோக்கிக் கதற வேண்டுமென்பதைத் தயவுகூர்ந்து நினைவிற்கொள்வாயாக. இல்லையெனில், உன்னுடைய வரமே உன்னுடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு கல்லறையாக மாறிவிடக் கூடும்!

15. கிறிஸ்துவில் தம் சொந்த பெலன் பற்றிய பெருமை அல்லது தன்னம்பிக்கை இருக்கவில்லை.

கர்த்தராகிய இயேசு *'பெலவீனத்தால் சிலுவையிலறையப்பட்டார்'* (II கொரி. 13 : 4). நம்முடைய தன்னம்பிக்கையினின்று அல்லது நம் பெலனைப் பற்றிய பெருமையினின்று நம்மை நாம் வெறுமையாக்கிக் கொள்ளும்போது, நாமும் அப். பவுலோடு சேர்ந்து, *"என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு"* (பிலி. 4 : 13) என்று கூறலாம். நம் பெலத்தைப் பற்றி நமக்கிருக்கும் பெருமை (ஆவிக்குரிய பிரகாரமாகவோ அல்லது சரீரப்பிரகாரமாகவோ நமக்கிருக்கும் பெலத்தில் நாம் கொண்டிருக்கும் மிதமிஞ்சிய தன்

னம்பிக்கை) நம்மை வஞ்சித்து, நம் ஜீவியத்தின் முடிவில் ஏமாற்ற மடையச் செய்யக் கூடும். முடிவில் தேவன் நமக்கு ஒப்புவித்த வேலையை நம்மால் செய்து நிறைவேற்ற முடியவில்லை என்பதை நாம் உணர்ந்துகொள்ளுவோம். தங்கள் பெலத்தைப் பற்றிய பெருமையுள்ளவர்கள் தங்கள் ஜீவியத்தில் தேவனுடைய திட்டத்தை ஒருபோதும் நிறைவேற்றக் கூடாதவர்களாய் இருப் பார்கள் என்பது நிரூபிக்கப்பட்ட ஓர் உண்மையாகும்.

பேதுருவின் ஜீவியத்தின் துவக்கத்தில் அவனிலிருந்த ஒரு பெருங்குறை அவனது மிதமிஞ்சிய தன்னம்பிக்கையே ஆகும். இந்தப் பெருமை அவனுக்கு அதிகமான இன்னல்களை விளைவித்தது. அவனது மிதமிஞ்சிய தன்னம்பிக்கையினின்று பிறந்த அறிக்கையைப் பாருங்கள் : ***'ஆண்டவரே, காவலுக்கும் சாவுக்கும் உம்மோடு செல்ல நான் ஆயத்தமாயிருக்கிறேன்'*** (லூக்கா 22 : 33 - Eng.). உடனடியாகக் கர்த்தர் அவனுடைய வார்த்தை களைத் திருத்தும்படி பிரயாசப்பட்டார். ஆனால் அவனோ அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அவன் இன்னமும் தன்னைக் குறித்த நம்பிக்கையுள்ளவனாகவே இருந்தான். 'கிறிஸ்துவுக்காகத் தங்கள் கடைசிச் சொட்டு இரத்தத்தையும் சிந்துவதற்கு ஆயத்தமாயிருப் பதாகப் பெருமையாகக் கூறிக்கொள்பவர்கள், முதல் துளி இரத்தத்தைச் சிந்த வேண்டியது வரும்போதுதானே தங்கள் மனதை மாற்றிக்கொள்வார்கள்' என ஒரு கூற்றுண்டு. மாறாக, சங்கீதக்காரனின் ஜெபத்தைப் பாருங்கள்: "என்னை நடத்தும்" (சங். 119 : 35). ஆங்கிலத்தில் இது *'என்னைப் போகப் பண்ணும்'* என்று கூறப்பட்டுள்ளது. பேதுரு கர்த்தராகிய இயேசுவிடம், 'நான் செல்ல ஆயத்தமாயிருக்கிறேன்' என்று கூறியபோது, அவன் பொய் சொல்லவில்லை. அவன் உண்மையாகவே அவ்விதம் செல்லவும், ஆண்டவராகிய இயேசுவுக்காக மரிக்கவும் விரும்பினான். அப்படியானால் அவனுடைய பிரச்சினைதான் என்ன? *கர்த்த ராகிய இயேசுவைப் பின்பற்றும்படி தனக்கிருந்த வாஞ்சையையே, தான் அவரைப் பின்பற்றுவதற்காகத் தனக்கிருந்த திறமை என*

அவன் தவறாக விளங்கிக்கொண்டான். நாமுங்கூட பேதுரு செய்த இத்தவற்றை எளிதாகச் செய்துவிடக் கூடும். திறமையும் வாஞ்சையும் ஒன்றல்ல. கர்த்தராகிய இயேசுவைப் பின்பற்று வதற்கோ அல்லது அவருக்காக ஏதாயினும் ஒன்றைச் செய்வதற்கோ நமக்கிருக்கும் வாஞ்சையையே அதைச் செய்வ தற்காக நமக்கிருக்கும் திறமை என நாம் எடுத்துக்கொள்ளக் கூடாது. நம்முடைய திறமை தேவனிடத்திலிருந்து வருகிறது. அவரைப் பின்பற்றும்படியான நம்முடைய வாஞ்சை எவ்வளவு ஆழமானதாயிருக்கிறதோ, அவ்வளவு அதிகமானதாக அந்த வாஞ்சையை நிறைவேற்றும்படியாக அவருடைய பெலத்தை நாடுவதற்கான நம்முடைய தாழ்மையும் இருக்க வேண்டும். பேதுருவின் தன்னம்பிக்கையை நொறுக்குவதற்குத் தேவனுக்குச் சிறிது காலம் பிடித்தது. அவன் ஒரு வேலைக்காரியின் முன்னிலையில் மீண்டும் மீண்டும் பொய் சொல்லி, கர்த்தரை மூன்று முறை மறுதலித்ததுடன், அவரைச் சபிக்கவும் சத்தியம் பண்ணவும் தொடங்கினான். பின்னர் அவன் தன் மதியீனத்தை உணர்ந்து, மனங்கசந்து அழுதான். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! முடிவில் அவன் தன் எஜமானுக்கு உபயோகமான சுத்தி கரிக்கப்பட்ட ஒரு பாத்திரமானான். அப். பவுல், *'இந்த வேலையைச் செய்ய எங்களால் ஆகும் என்று நாங்கள் சொல்லுகிறதில்லை. நாங்கள் செய்யும் எல்லாவற்றையும் செய்ய எங்களைத் தகுதி படுத்துகிறவர் தேவனே'* (II கொரி. 3 : 5 NCV) என்று கூறுகிறார்.

தேவன் நம்மை வல்லமையாக உபயோகிக்க விரும்பு கிறார். ஆனால் அநேக சந்தர்ப்பங்களில் நாமே அதற்குத் தடையாயிருக்கிறோம். நம் தன்னம்பிக்கையும் நம் சொந்த பெலத்தின் மேல் நமக்கிருக்கும் நம்பிக்கையும் நம் ஜீவியத்தில் தேவனுடைய பெரிதான திட்டம் நிறைவேறாதபடி தடை செய்கின்றன. நம்மை நாமே தாழ்த்தி, நம் சொந்த பெலத்தி னின்றும் மித மிஞ்சிய தன்னம்பிக்கையினின்றும் நம்மை வெறுமையாக்குவோமா? 'நான் போக ஆயத்தமாயிருக்கிறேன்'

என்று கூறுவதற்குப் பதிலாக 'நீர் என்னைப் போகப்பண்ணும்' என்று நாம் ஜெபம்பண்ணுவோமாக.

16. கிறிஸ்துவில் அதிகாரம், வல்லமை ஆகியவற்றைப் பற்றிய பெருமை இருக்கவில்லை.

கர்த்தராகிய இயேசுவுக்கு வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் இருந்தது. அவர் மரணம், பாதாளம் ஆகியவற்றின் மேலும் அதிகாரம் உள்ளவராயிருந்தார். அவர் இவ்வெல்லா வல்லமையும் அதிகாரமும் உள்ளவராயிருந்தபோதிலும், அவற்றோடுகூட அவரில் ஒரு தாழ்மையான ஆவி இருந்தது. "நான் என் சுயமாய் ஒன்றுஞ் செய்கிறதில்லை" என்று அவர் கூறுகிறார் (யோவான் 5 : 30). நாம் அதிகார வெறி பிடித்த உலகில் ஜீவித்துக்கொண்டிருக்கிறோம். ஒரு கூட்டம் ஜனங்கள் உலகப் பிரகாரமான வல்லமையும் அதிகாரமும் உள்ளவர்களாயிருக்க விரும்புவதினிமித்தமாக உலகம் முழுவதிலும் யுத்தங்களும் இரத்தஞ்சிந்துதலும் காணப்படுகிறது. அதிகாரத்திற்காகவும் பதவிக்காகவும் போராடி சண்டையிடும் தலைவர்களைக் கொண்ட கிறிஸ்தவ சபைகளுங்கூட இருக்கின்றன என்பது உண்மையாகவே வருந்தத்தக்க விஷயமாகும். கர்த்தராகிய இயேசு இவ்வுலகில் தாம் செய்துகொண்டிருந்த ஊழியத்தின் முடிவை நெருங்குகையில் தம் சீஷர்களின் கால்களைக் கழுவி, அதின் மூலம், "உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் எல்லாருக்கும் ஊழியக்காரனாயிருக்கக்கடவன்" (மாற்கு 10 : 44) என்ற தம்முடைய போதனையை உறுதிப்படுத்தினார்.

ஏறக்குறைய உலகில் உள்ள ஒவ்வொருவரும் ஏதாயினும் ஒரு விதத்தில் பூமிக்குரிய அதிகாரத்தைத் தேடும் அளவிற்கு முழு உலகமும் அதிகமாகக் கெட்டுப்போயிருக்கிறது. பிசாசானவன், ஜனங்கள் தன்னை வணங்கும்படியாக அப்படிப்பட்ட அதிகாரத்தை அவர்களுக்குக் கொடுக்க விரும்புகிறான். வெளிப்படுத்தின விசேஷம் 13 - ஆம் அதிகாரத்தில், 'பலம்', 'அதிகாரம்' 'சத்துவம்' என்னும் வார்த்தைகள் 9 முறை குறிப்பிடப்

பட்டுள்ளதை நாம் காண்கிறோம். இவ்வதிகாரமும் வல்லமையும், அந்திக்கிறிஸ்து தன் கடுங்கொடிய நோக்கங்களை நிறைவேற்றும்படி அவனுக்குச் சாத்தானால் கொடுக்கப்படும் எதிர்மறையான வல்லமையாகவே குறிப்பிடப்பட்டுள்ளன. 'அதிகாரம் கெடுத்துப்போடுகிறது; முழுமையான அதிகாரமோ முற்றிலும் கெடுத்துப்போடுகிறது' என்று ஒரு பழமொழி உண்டு. பெரும்பான்மையான அரசியல் தலைவர்களும் மத சம்பந்தமான தலைவர்களும் அதிகார வெறிபிடித்தவர்களாயிருக்கின்றனர். ஆயினும், தங்கள் அதிகாரத்தையும் பதவியையும் மற்றவர்களுக்கு விட்டுக்கொடுத்துவிட்டு, அதன் மூலம் மற்றவர்களுக்கு நல்ல முன்மாதிரியாகத் திகழும் பெருந்தன்மையுள்ள தலைவர்களும் சிலர் இருக்கின்றனர்.

'ஆனால் உன்னைப் பொறுத்தவரை, நீ உனக்குப் பெரிய காரியங்களைத் தேடுகிறாயோ? அவற்றைத் தேடாதே; இதோ, மாம்சமான யாவர்மேலும் நான் நாசத்தை வரப்பண்ணுகிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்' (எரே. 45 : 5 NASB). பிரியமான தேவபிள்ளையே, தேவன் ஒருவேளை உன்னை உன் வேலை ஸ்தலத்தில், சமுதாயத்தில் அல்லது ஆவிக்குரிய உலகில் ஒரு நல்ல ஸ்தானத்தில் வைத்திருக்கலாம். அவர் உனக்கு அளித்திருக்கும் அதிகாரத்தையும் வல்லமையையும் நீ ஒருபோதும் தவறான முறையில் உபயோகிக்கவோ அல்லது துர்ப்பிரயோகம் செய்யவோ முற்படாதே. அதற்குப் பதிலாக நீ தாழ்மையாயிருந்து, கிறிஸ்துவின் சாந்தமுள்ள, தாழ்மையான சுபாவத்தை வெளிப்படுத்திக் காண்பிக்கும்படி உன் அதிகாரத்தை அல்லது பதவியை உபயோகிப்பாயாக. நீ மரிக்கும்போது உன் அதிகாரமும் வல்லமையும் உன்னோடுகூட வரப்போகிறதில்லை; உன் சுபாவமே உன்னோடு வரும் என்பதை நினைவிற்கொள்வாயாக.

17. கிறிஸ்துவில் சுயாதீனத்தின் பெருமை இருக்கவில்லை.

"மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ,

அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார்; அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார்"; 'எனக்குச் சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறேன்' (யோவான் 5 : 19, 30) என்று கர்த்தராகிய இயேசு கூறினார். நம்முடைய கர்த்தர் பிதாவுக்குச் சமமானவராயிருந்தும், அவர் சுயமாக ஒன்றும் பேசவுமில்லை, செய்யவுமில்லை.

இந்நாட்களில் எங்கும் சபைகள் துளிர்த்தெழுகின்றன. பெரும்பாலும், அற்புதமான வெளிப்படுத்தல்கள் கிடைத்தினாலோ அல்லது ஆத்துமாக்களின் மேலுள்ள பாரத்தினாலோ அல்ல, சுயாதீன ஆவியினிமித்தமாகவே பல சபைகள் துளிர்த்தெழுகின்றன. ஜனங்கள் தங்களைத் தடை செய்வதற்கு யாருமின்றி, தாங்கள் சுயாதீனமாகத் தங்கள் சொந்த சித்தத்தைச் செய்ய வேண்டுமென விரும்புகின்றனர். அப்படிப்பட்ட மனப்பான்மையுள்ள சபைத் தலைவர்கள் மரிக்கும்போது, சில சமயங்களில் அவர்களுடைய சபைகளுங்கூட அவர்களுடன் சேர்ந்து மாண்டுபோகின்றன. கர்த்தராகிய இயேசு தம்முடைய சீஷர்களை ஊழியம் செய்யும்படி அனுப்பினபோது அவர்களை ஒருபோதும் தனியே அனுப்பாமல், இரண்டிரண்டு பேராகவே அனுப்பினார். கழுதையைக் கொண்டு வருவதற்குங்கூட அவர் இரண்டு சீஷர்களைச் சேர்த்தே அனுப்பினார் (லூக்கா 19 : 29, 30).

தேவனுடைய ஆறு நாட்களின் சிருஷ்டிப்பில், அவர் மனுஷனைச் சிருஷ்டிக்க வேண்டிய கட்டம் வந்தபோது, சுயாதீனத்தின் [illegible] பிதாவும் குமாரனும் பரிசுத்த ஆவியானவரும் கூடி ஆலோசனை செய்தனர். 'நமது சாயலாக மனுஷனை உண்டாக்குவோமாக' (ஆதி. 1 : 26) என்று அவர்கள் கூறினார்கள். [illegible]

படுவதற்கான காரணமாயிருக்கின்றனர்! நாம் ஒன்றையும் சுயாதீன ஆவியின் பெருமையுடன் செய்யாதிருக்கக் கர்த்தர் தாமே நமக்கு உதவி செய்வாராக.

கர்த்தராகிய இயேசுவுக்கு எதைக் குறித்தும் எவ்விதமான பெருமையும் இருக்கவில்லை. இப்பூமியில் அவர் இருந்தபோது, அவரது ஜீவியம் பிறர் முன்னிலையில் சிறந்த வெற்றியுள்ளதாகத் தோற்றமளிக்கவில்லை. "அவர் அசட்டைபண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார்; அவரை விட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக்கொண்டோம்; அவர் அசட்டைபண்ணப்பட்டிருந்தார்; அவரை எண்ணாமற்போனோம்" என அவரைக் குறித்துக் கூறப்பட்டுள்ளது (ஏசாயா 53 : 3). அவருடைய ஊழியமுங்கூட பிறர் முன்னிலையில் வெற்றியுள்ளதாகத் தோற்றமளிக்கவில்லை. அவர் தம் சொந்த சீஷர்கள் உட்பட, எல்லாராலும் கைவிடப்பட்டார். ஜீவியத்திலோ அல்லது ஊழியத்திலோ தாம் அடைந்திருந்த வெற்றியைக் காண்பித்துக்கொள்ளும் பெருமை அவரில் அறவே இருக்கவில்லை. முடிவில் அவருடைய மரணமுங்கூட சிறுமைப்படுத்தப்படுதலாகவேயிருந்தது; அவர் மிக மோசமான ஒரு குற்றவாளியைப் போல மரித்தார். அவருக்கு ஒரு தாழ்மையான பிறப்பும் தாழ்மையான மரணமுமே இருந்தன. 'கிறிஸ்துவும் நமக்காகப் பாடுபட்டு, நாம் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி நமக்கு (தாழ்மையின்) மாதிரியைப் பின்வைத்துப்போனார்' (1 பேதுரு 2 : 21).

நம்மிலுள்ள ஒவ்வொரு அணுவும் கிறிஸ்துவைப் போன்ற தாழ்மையை நாடுவதாக! அதன் மூலமாக, நாம் இவ்வுலகை விட்டுக் கடந்துபோன பின்னரும், [illegible] கிறிஸ்துவைப் போன்ற தாழ்மையின் [illegible]

❖❖❖❖

அதிகாரம் 6

கிறிஸ்துவினுடைய தாழ்மையின் ஐந்து அம்சங்கள்

"தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார் " (பிலி. 2 : 7, 8).

1. 'தம்மைத்தாமே வெறுமையாக்கினார்':

பேர், புகழ், கனம், பிரசித்தி போன்றவற்றிற்காகப் பேராவல் கொள்வது மனுஷீக சுபாவம் ஆகும். ஆனால் பேர், புகழ் போன்றவற்றை விட்டுவிடுவதே தெய்வீக சுபாவமாகும். "தம்மைத்தாமே வெறுமையாக்கி" என்பது Amplified Bible - இல் 'ஒரு வஸ்திரத்தைக் களைவது போல (தம் சிலாக்கியங்கள் அனைத்தையும் தமக்கு உரிமையாயிருந்த மகத்துவத்தையும்) களைந்துவிட்டு' என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மனிதன் இன்னும் இதைக் கற்றுக்கொள்ளவில்லை: *தங்களுக்குச் சமுதாயத்தில் பேர் உண்டாகப்பண்ணும்படி முயற்சிக்கிறவர்கள் முடிவில் கெட்ட பெயரையே பெற்றுக்கொள்ளுகிறார்கள்!* பாபேல் கோபுரத்தைப் பற்றிய சரித்திரத்தில் இந்தச் சத்தியம் தெளிவாகச்

சித்திரிக்கப்பட்டுள்ளது. "பின்னும் அவர்கள்: ... நமக்கு ஒரு நகரத்தையும், வானத்தை அளாவும் சிகரமுள்ள ஒரு கோபுரத்தையும் கட்டி, *நமக்குப் பேர் உண்டாகப்பண்ணுவோம் வாருங்கள்* என்று சொல்லிக்கொண்டார்கள்" (ஆதி. 11 : 4). ஆனால் முடிவில் அவர்கள் எப்படிப்பட்ட கெட்ட பெயரைச் சம்பாதித்துக்கொண்டார்கள்! ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின்னர், இப்போதுங்கூட அவர்களுடைய கெட்ட பெயர் யாவரும் அறியத்தக்கதாகப் பிரபலமடைந்துள்ளது. பேரையும் புகழையும் நாடித் தேடுகிறவர்கள் இதை இன்னும் கற்றுக்கொள்ளாதிருக்கின்றனர். 'சரித்திரத்திலிருந்து நாம் கற்றுக்கொண்டிராத ஒரு பாடம், சரித்திரமே' என்னும் கூற்று எவ்வளவு உண்மையானது!

அசுத்த ஆவிகளில் ஒரு கூட்டத்தின் வேலை, ஜனங்களைப் *பிரசித்தி பெற்றவர்களாக அல்லது பிரபலமானவர்களாக மாற்றுவதே* என்பதைத் தேவனுடைய ஜனங்களில் அநேகரும் இன்னும் அறியாதிருக்கின்றனர். நாம் தேவனுடைய வசனத்திற்கு கடந்து வருவோம்: "அசுத்த ஆவிகளும் அவரைக் கண்டபோது, அவர் முன்பாக விழுந்து: நீர் தேவனுடைய குமாரன் என்று சத்தமிட்டன. *தம்மைப் பிரசித்தம்பண்ணாதபடி* அவைகளுக்குக் கண்டிப்பாய்க் கட்டளையிட்டார்" (மாற்கு 3 : 11, 12).

அருமையான தேவபிள்ளையே, இவ்வுலகத்தில் *நீ பேர், புகழ், பிரசித்தி,* அல்லது நன்மதிப்பை நாடித் தேடிக்கொண்டிருப்பாயாகில் *நீ அசுத்த ஆவிகளாலேயே நடத்தப்பட்டுக்கொண்டிருக்கிறாய்* என்பதை உணருவாயாக. அதிகத் தாமதமாகுமுன் நீ மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பு. தொலைக்காட்சியின் மூலமாகவும் வானொலி மூலமாகவும் நீ செய்யும் ஊழியம் உன்னைப் பிரபலமடையச் செய்யக் கூடும். உனக்குப் பேரும் புகழும் உண்டாக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் நீ ஒரு ஊழியத்தைச் செய்வாயாகில், அதினிமித்தம் நீ செலுத்த வேண்டிய கிரயம் யாது என்பதை நீ அறிவாயா? நீ ஒருவேளை அசுத்த ஆவிகளால் கட்டப்படக் கூடும்!

'பிரபலமான ராஜாக்களை அழித்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது' (சங். 136 : 18). இங்கு 'ராஜாக்கள்' என்பது ஆளுகை செய்யும் ஆவிகளை அல்லது நம்மைப் பிரபலமானவர்களாக மாற்றும்படி நம் இருதயத்தை ஆண்டு நடத்தும் ஆவிகளைக் குறிக்கிறது. நம்மை ஆளுகை செய்யும் இந்த ஆவிகளை நாம் அழித்துவிடும்போது, தேவனுடைய என்றுமுள்ள கிருபை என்றென்றும் நம்மேல் இருக்கும். அல்லேலூயா! "இந்த மெல்கிசேதேக்கு சாலேமின் ராஜாவும், உன்னதமான தேவனுடைய ஆசாரியனுமாயிருந்தான்; ராஜாக்களை முறியடித்துவந்த ஆபிரகாமுக்கு இவன் எதிர்கொண்டுபோய், அவனை ஆசீர்வதித்தான்" (எபி. 7 : 1). ஆபிரகாமைப் போல நாம் இந்த 'ராஜாக்கள்' அனைவரையும் - அதாவது, பெரியவர்களாக வேண்டும், புகழ்பெற்றவர்களாக விளங்க வேண்டும் என்பவை போன்ற வாஞ்சைகள் அனைத்தையும் - அழித்துப்போடு வோமாயின், அப்போது பரிசுத்த ஆவியானவர் (மெல்கிசேதேக்கு) நம்மைச் சந்தித்து ஆசீர்வதிப்பார்.

ஒருவன் தன்னிடத்திலுள்ள எதையும் இழந்துவிட ஆயத்த மாயிருக்கக்கூடும்; ஆனால் அவன் ஒருபோதும் தன் நற்பெயரை இழக்க விரும்பமாட்டான். கர்த்தராகிய இயேசு எல்லாவற்றையும், தம் பெயரையுங்கூட விட்டுவிட்டார். அவர் தமது நற்பெயரையும் விட்டுக்கொடுத்தபோது, முடிவாக் எல்லா நாமங்களுக்கும் மேலான நாமத்தைப் பெற்றுக்கொண்டார். ஒருவேளை உங்கள் பெயர் கெடுக்கப்படும்படி தேவன் அனுமதிக்கக் கூடும். திடன்கொள்ளுங்கள்! நீங்கள் இந்தச் சோதனையை மேற்கொண் டால் தேவன் உங்களுக்கு ஒரு புதிய பெயரைக் கொடுப்பார். "ஜெயங்கொள்ளுகிறவனுக்கு நான் ... புதிய நாமத்தையும் கொடுப் பேன்" (வெளி. 2 : 17). எனவே புகழ்பெற்றவர்களாகத் திகழ்வதை நாடுதலாகிய சோதனையை நாம் மேற்கொண்டு, உன்னதமான வரின் மறைவில் வசிக்கிற, மறைந்திருக்கும் பரிசுத்தவான்களா யிருக்க வாஞ்சிப்போமாக. உண்மையில் இதுவே மெய்யான

தாழ்மையின் முதலாவது படியாகும். பேர்பெற்றவர்களாக விளங்க வேண்டும் என்ற ஆவலின் மேல் ஜெயம்பெற்று, தாழ்மையின் இந்த முதலாவது படியைக் கடக்காவிட்டால் நாம் எவ்விதம் அதின் மற்ற படிகளுக்குக் கடந்து செல்லக் கூடும்?

'நம்மைக் குறித்து ஜனங்கள் நினைப்பது எதுவோ அதுவே புகழ் ஆகும். தேவன் நம் இருதயத்தில் காண்பது எதுவோ அதுவே சுபாவம் ஆகும்' என்று ஒரு முறை ஒரு பரிசுத்தவான் கூறினார். நம்முடைய கர்த்தர் செய்தது போல நம்மை நாமே வெறுமையாக்குவோமாக.

2. 'அடிமையின் ரூபமெடுத்தார்':

ஒரு சாதாரணமான வேலைக்காரனுக்கு, அவன் வேலை செய்வதற்கென வரையறுக்கப்பட்ட வேலை நேரம், தன் கூலியைக் கேட்டுப் பெற்றுக்கொள்வதற்குரிய உரிமை போன்ற சில உரிமைகள் உள்ளன. ஆனால் ஒரு அடிமைக்கோ (bondservant or slave) உரிமை என்பது அறவே இல்லை - அவனுக்குக் கூலியோ, குறிப்பிட்ட வேலை நேரமோ இல்லை; முறையிடவோ அல்லது முறுமுறுக்கவோ அவனுக்கு எந்த உரிமையும் இல்லை. இப்பூமியில் அவனுக்குச் சொந்தமென யாதுமில்லை. எல்லாமே அவனுடைய எஜமானால் அவனுக்கு ஈவாகக் கொடுக்கப் பட்டிருப்பவையே! யாதொரு காரணமும் காண்பியாமல் எந்த நேரத்திலும் அவைகளை அவனிடமிருந்து பறித்துவிட அவ னுடைய எஜமானுக்கு எல்லா உரிமையும் உண்டு. ஒரு அடிமை எப்போதும் மற்றவர்களுக்குப் பணிவிடை செய்துகொண்டி ருப்பான்; மற்றவர்கள் தனக்குப் பணிவிடை செய்வார்கள் என அவன் ஒருபோதும் எண்ணுவதில்லை. தன் எஜமானுடைய கால்களைக் கழுவுவது ஒரு அடிமையின் வேலையாகும். ஆண்டவராகிய இயேசு தம்முடைய *சீஷர்களின்* கால்களைக் கழுவினார்; அவர்களில் அநேகர் மீன் பிடிக்கிறவர்களாயிருந்தனர்.

அண்டசராசரங்களுக்கும் தேவனானவர் பரலோகத்தின் சகல மகிமையையும் துறந்து, ஒரு பணிவிடைக்காரனாகும் பொருட்டாக அல்லது ஒரு அடிமையாகும் பொருட்டாகப் பூமிக்கு இறங்கி வந்ததைக் கற்பனை செய்து பாருங்கள். எத்தகையதொரு தாழ்மை இது!

ஒரு அடிமைக்குப் பதவி உயர்வு பெற வேண்டுமென்ற எண்ணமோ, வாஞ்சையோ இராது. கிறிஸ்துவைப் போன்ற தாழ்மையைப் பெற்றுக்கொள்ள நாம் விரும்புவோமாயின், நாம் ஒரு அடிமையின் ஆவியுள்ளவர்களாயிருக்க ஆயத்தமாயிருக்க வேண்டும். பூமிக்குரிய மேன்மையையோ, உயர்வையோ நாம் நாடித் தேடுவோமாயின், நாம் முட்புதராக அல்லது முட்களாக மாறிவிடுவோம். பூமிக்குரிய மேன்மைகளைத் தேடுகிறவர்கள் உபயோகமற்ற முட்களைப் போன்றவர்களே என்பதற்கு வேதாகமத்தில் நம் மனக்கண்களைப் பிரகாசிப்பிக்கிற, ஆர்வமூட்டும் கதை ஒன்று உள்ளது. "விருட்சங்கள் தங்களுக்கு ஒரு ராஜாவை அபிஷேகம்பண்ணும்படி போய், ஒலிவமரத்தைப் பார்த்து: நீ எங்களுக்கு ராஜாவாயிரு என்றது. அதற்கு ஒலிவமரம்: தேவர்களும் மனுஷரும் புகழுகிற என்னிலுள்ள என் கொழுமையை நான் விட்டு, மரங்களை அரசாளப்போவேனோ என்றது. (நாம் பூமிக்குரிய பதவி உயர்வை அல்லது கனத்தை நாடுவோமாயின், நாம் நம்முடைய கொழுமையை அல்லது பிறருக்குப் பிரயோஜனமாயிருப்பதை இழந்துவிடக் கூடும்). அப்பொழுது மரங்கள் அத்திமரத்தைப் பார்த்து: நீ வந்து, எங்களுக்கு ராஜாவாயிரு என்றது. அதற்கு அத்திமரம்: நான் என் மதுரத்தையும் என் நற்கனியையும் விட்டு, மரங்களை அரசாளப்போவேனோ என்றது. (நாம் பூமிக்குரிய பதவி உயர்வை நாடுவோமாயின், நாம் நம் இனிமையையும் நற்கனியையும் - ஆவியின் கனியையும் இழந்துபோகக் கூடும்). அப்பொழுது மரங்கள் திராட்சச்செடியைப் பார்த்து: நீ வந்து, எங்களுக்கு ராஜாவாயிரு என்றது. அதற்குத் திராட்சச்செடி: தேவர்களையும் மனுஷரையும் மகிழப்பண்ணும் என் ரசத்தை நான் விட்டு மரங்களை அரசாளப்போவேனோ என்றது. (நாம் பூமிக்குரிய பதவி உயர்வை நாடுவோமாயின், நாம் தேவனைப் பிரியப்படுத்தும் அனுபவத்தையும், மனுஷரை ஊக்குவித்து உற்சாகப்படுத்தும் அனுபவத்தையும் இழந்துபோக நேரிடும்). அப்பொழுது மரங்களெல்லாம் முட்செடியைப் பார்த்து: நீ வந்து, எங்களுக்கு ராஜாவாயிரு என்றது. அதற்கு முட்செடியானது மரங்களைப் பார்த்து: நீங்கள் என்னை உங்களுக்கு ராஜாவாக அபிஷேகம்பண்ணுகிறது மெய்யானால், என் நிழலிலே வந்தடையுங்கள்; இல்லாவிட்டால் முட்செடியிலிருந்து அக்கினி புறப்பட்டு லீபனோனின் கேதுரு மரங்களைப் பட்சிக்கக்கடவது என்றது" (நியா. 9 : 8 – 15). ஒரு முட்புதரானது "என் நிழலிலே வந்தடையுங்கள்" என மற்றவர்களை அழைத்தாலும், அது ஒரு நிழலும் தருவதில்லை. அதில் கனிகளோ, பூக்களோ, ஏன் இலைகளுங்கூட இருப்பதில்லை. இவ்வுவமையானது, கனத்தையும் ஸ்தானத்தையும் தேடுகிறவர்கள் முட்புதரைப் போன்றவர்களே அன்றி, எவ்விதத்திலும் அதைக் காட்டிலும் மேலானவர்கள் அல்லர் என்பதை வெளிப்படுத்துகிறது.

கிறிஸ்துவைப் போன்ற தாழ்மை, 'அடிமையின் ரூபமெடுத்தல்' ஆகும்; அதாவது, எப்போதும் மற்றவர்களுக்குப் பணிவிடைக்காரராக (அடிமைக்கு அடிமையாக) இருக்க மனப்பூர்வமுள்ளவர்களாயிருத்தல் ஆகும். பரிசுத்த தூதர்கள் 'பணிவிடை ஆவிகள்' அல்லது வேலைக்காரர்கள் என்று அழைக்கப்படுகின்றனர் (எபி. 1 : 14). ஆனால் விழுந்துபோன தூதர்களோ, தங்களுக்கு ஆராதனையையும் கனத்தையும் உரிமை கோருகின்றனர். (பிசாசானவன் கர்த்தராகிய இயேசுவையுங்கூட தன்னைப் பணிந்துகொள்ளும்படி கோரினான்). அருமையான தேவபிள்ளையே, நீ (எப்போதும் மற்றவர்களுக்குப் பணிவிடை செய்தலை நாடுகிற) ஒரு 'பரிசுத்த தூதனாயிருக்கிறாயா' அல்லது (எப்போதும் மற்றவர்களிடத்திலிருந்து கனத்தையும் மகிமையையும் சேவையையும் எதிர்பார்க்கிற அல்லது உரிமைகோருகிற)

விழுந்துபோன ஒரு தூதனாயிருக்கிறாயா? நீ கனிதரும் ஒரு விருட்சமாயிருக்கிறாயா அல்லது ஒரு முட்புதராயிருக்கிறாயா?

நாம் எப்போதும் பணிவிடையின் ஆவியுள்ளவர்களாக, கிறிஸ்துவுக்காக அடிமைகளாயிருக்க தேவன் தாமே நமக்கு உதவிசெய்வாராக.

3. 'மனுஷர் சாயலானார்':

சர்வ வல்லமையுள்ள தேவன் ஒரு சிருஷ்டியாகத் தம்மைத்தாமே ஒரு வரம்புக்குட்படுத்திக்கொண்டார். ஒரு ஸ்திரீயின் கர்ப்பத்திற்குள் அவர் தம்மை மட்டுப்படுத்திக்கொண்டு, பூமிக்குரிய பெற்றோருக்கு ஒரு பிள்ளையாகக் கீழ்ப்படிந்து அடங்கியிருந்தார். அவர் தம் பன்னிரண்டாம் வயது முதல் தம்முடைய பூமிக்குரிய ஊழியத்தை ஆரம்பித்த முப்பதாவது வயது வரை அவரைக் குறித்து யாதொரு விவரமும் குறிப்பிடப் படவில்லை. இப்பூமியில் ஜீவித்த நாட்களில் மற்றெல்லா மனுஷரையும் போல அவர் ஒரு சாதாரண ஜீவியம் செய்தார் என்பது வெளிப்படை. நம்மில் ஒருவரைப் போல அவர் பசி, தாகம், வேதனை, களைப்பு போன்ற யாவற்றையும் அனுபவித்தார்.

"அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்" - அவர் முதலாவது ஒரு அடிமையானார்; அதன் பின்பு மனிதனானார். அதாவது நாம் அடிமைகளாகாவிட்டால், உண்மையான அர்த்தத்தில் மனுஷராக முடியாது. மனுஷன் பூமியின் மண்ணினால் (தூசியினால் - Eng.) உருவாக்கப்பட்டான். தூசி என்பது எண்ணப்படுவதற்கு ஒரு பொருட்டாயிராததும், சிறியதும், எந்த விலைமதிப்பும் அற்றதுமாகும். கர்த்தராகிய இயேசு நமக்காக ஒரு 'மனுஷன்' அல்லது 'மண்' (தூசி) ஆனார் - அவர் சிறியவரும், ஒரு பொருட்டாக எண்ணப்படாதவரும், அற்பமானவருமானார்.

மனுஷனுடைய ஆரம்பம் மண் அல்லது தூசியே ஆகும்; அவனுடைய முடிவும் அதுவே. நாம் இவ்வுலகத்தில் ராஜாக்களாக

ஆளுகை செய்தாலும், தேவன் நம்மை மண்ணென்றே நினைவுகூருகிறார் (சங். 103 : 14). ஆயினும் 'நாம் மண்ணாயிருக்கிறோம், மண்ணுக்குத் திரும்புவோம்' என்பதை நாம் நினைவுகூருகிறோமா என்பதே கேள்வியாகும்.

தேவன் ஒருபோதும் 'மண்ணை' மறந்துபோகிறதில்லை; அவர் 'மண்ணை' நினைவுகூருகிறார். தேவன் நம்மை மறந்துவிட்டார் என்று எப்போதாகிலும் நாம் எண்ணுவோமாகில், அதன் உண்மை யாதெனில், நாம் 'மண்ணாயிராமல்', 'வைரக்கற்களாக' இருப்பதாக நம்மைக் குறித்துக் கற்பனை செய்துகொண்டோம் என்பதாகவேயிருக்கக் கூடும். தேவன் 'மண்ணுக்குத்' தயை செய்கிறார். அந்த 'மண்' முடிவாகச் சென்றடையும் இடம் சீயோன் ஆகும். சங்கீதம் 102 : 13, 15 காண்க. இது ஆச்சரியமன்றோ? "அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து தூக்கிவிடுகிறார்" (சங். 113 : 7). 'அவர் தூக்கிவிடுகிறார் (raiseth)' என்பதன் அர்த்தம், 'அவர் தொடர்ந்து தூக்கிவிட்டுக்கொண்டேயிருக்கிறார்' என்பதாகும். நம் ஜீவியம் மாற்றப்பட வேண்டுமாயின், நாம் புழுதியாய் அல்லது மண்ணாய் இருக்கிறோம் என்ற வெளிப்படுத்தல் நமக்கு இருக்க வேண்டும். நாம் மண்ணென்பதை மறந்துபோகும்போது, நாம் அநேக பிரச்சினைகளுக்குள்ளாகி, தேவசித்தத்தை விட்டு வெளியே சென்றுவிடக் கூடும்.

"என் காதினால் உம்மைக்குறித்துக் கேள்விப்பட்டேன்; இப்பொழுதோ என் கண் உம்மைக் காண்கிறது. ஆகையால் நான் என்னை அருவருத்து, தூளிலும் சாம்பலிலும் இருந்து மனஸ்தாபப்படுகிறேன்" என்று யோபு கூறுகிறான் (யோபு 42 : 5, 6). மண்ணுக்கு அல்லது தூளுக்குச் சமமாய் நாம் நம்மைத் தாழ்த்தும்போது மட்டுமே உண்மையான மனஸ்தாபம் சாத்தியமாகிறது. யோபைப் போல, நமக்கு நம் தேவனைப் பற்றிய தெளிவான தரிசனம் உண்டாகும்போது, நாம் இவ்வுலகத்திலுள்ள எல்லாரிலும் மிகப் பெரிய பரிசுத்தவான்களாய் இருந்தாலும்,

'தூளிலும் சாம்பலிலும்' இருந்து மனஸ்தாபப்பட வேண்டியவர்களே என்பதை உணருவோம். நாம் நம்மைத் தூளுக்குச் சமமாய்த் தாழ்த்தக் கற்றுக்கொள்ளும்போது, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயம் நமக்கு எப்போதும் உண்டாயிருக்கும் (சங். 51 : 17). அப்படிப்பட்ட இருதயம் அல்லது ஆவிக்குரிய அனுபவமே நம்மைக் கர்த்தரால் அங்கீகரிக்கப்படத்தக்கவர்களாக்குகிறது.

ராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமாகிய நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நம்மை மீட்கும் பொருட்டாகப் பரலோகத்தின் சகல மகிமையையும் விட்டு, ஒரு மனிதனாகும்படி அல்லது 'மண்ணாகும்படி' இறங்கி வந்தாராயின், நாம் எவ்வளவு அதிகமாய் நம்மைத் தாழ்த்த வேண்டும்!

4. 'மரணபரியந்தம் கீழ்ப்படிந்தார்':

கிறிஸ்துவின் கீழ்ப்படிதலுக்கும் நம்முடைய கீழ்ப்படிதலுக்கும் இடையே மிகப் பெரிய வித்தியாசம் உண்டு. நாம் தேவனுக்குக் கீழ்ப்படிவதின் மூலம் மகிமை, கனம், ஆசீர்வாதங்கள், சுகம் முதலியவற்றைப் பெற்றுக்கொள்கிறோம். கர்த்தராகிய இயேசு தம் கீழ்ப்படிதலின் மூலம் தமது எல்லா மகிமையையும், கனத்தையும் விட்டு, முடிவாக, சிலுவையில் தமது ஜீவனைக் கொடுத்தபோது தம்முடைய நற்பெயரையும் இழந்துபோனார். எனவே, ஒரு அர்த்தத்தில், மிக அதிகமான தூய்மையான நோக்கத்துடன் கூடிய நம்முடைய மிகச் சிறந்த கீழ்ப்படிதலிலுங்கூட தன்னலம் இருக்கிறது; ஏனெனில் நம்முடைய கீழ்ப்படிதலானது பெரிய ஆசீர்வாதங்களையும் மகிமையையும் முடிவான பலனாக நமக்கு அருளப்போகிறது என்பதை நாம் அறிவோம்.

"அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு" (எபி. 5 : 8) என்று கூறப்பட்டிருப்பது,

கர்த்தராகிய இயேசு பூமிக்கு வந்த பின்னர் பாடுகளின் மூலம் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார் என்று பொருள்படுவது போல நமக்குத் தோன்றக் கூடும். பரலோகத்தில் கர்த்தராகிய இயேசு பிதாவுக்குக் கீழ்ப்படிந்திருந்தார் என்பது நிச்சயம். ஆனால் *பரலோகத்தில் அவருடைய கீழ்ப்படிதலின் காரணமாக அவர் யாதொரு விதத்திலும் பாடுகளைச் சகிக்க வேண்டியதாயிருக்க*வில்லை. பரலோகத்தில் அவருக்குக் கொடுக்கப்பட்ட கட்டளைகள், 'குமாரனே, சிங்காசனத்தில் வீற்றிருந்து, எல்லாத் தூதர்களையும் துரைத்தனங்களையும் ஆளுகை செய்யும்; பரிசுத்த தூதர்கள் அனைவரிடமிருந்தும் ஆராதனையையும் புகழ்ச்சியையும் பெற்றுக்கொள்ளும்' என்பன போன்றவையாயிருந்தன. இக்கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதல் கர்த்தராகிய இயேசுவை எந்தப் பாடுகளுக்கும் உட்படுத்தவில்லை. அது அவருடைய மகிமையையும் கனத்தையும் அதிகரிக்கவே செய்தது. ஆனால் அவர் பிதாவுக்குக் கீழ்ப்படிந்து பூமிக்கு வந்ததும், பாவம் நிறைந்த மனுக்குலத்திற்காக மரித்ததும் மிக அதிகமான பாடுகளையும் அவமானத்தையும் அவருக்குக் கொண்டுவந்தன.

"மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி" என்பது ஆங்கிலத்தில் 'மரணத்திற்கேதுவாகக் கீழ்ப்படிந்தவராகி' (obedient unto death) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. 'மரணபரியந்தம்' (until death) கீழ்ப்படிவதற்கும், 'மரணத்திற்கேதுவாகக்' (unto death) கீழ்ப்படிவதற்கும் இடையே பெரும் வித்தியாசம் உண்டு. ஒரு வேலையாள் அல்லது அடிமை தன் மரணபரியந்தம் தன் எஜமானுக்குக் கீழ்ப்படிந்திருக்கக் கூடும்; ஆனால் அவன் தன் உள்ளத்திற்குள் முறுமுறுத்து, முறையிட்டு, தன் எஜமானின் 'இரும்புப் பிடியிலிருந்து' வெளியே வரும்படி விரும்பிக்கொண்டிருக்கலாம். நாமோ மரணத்திற்கேதுவாகக் கீழ்ப்படிய வேண்டும். நாம் நம்முடைய ஆண்டவருக்கு மனப்பூர்வமாகவும் சந்தோஷமாகவும் கீழ்ப்படியும்போது, அதினிமித்தம் நாம் மரிக்க வேண்டியதாயிருந்தாலும் அதைச் செய்து நிறைவேற்றுவோம். அத்துடன்

நம்முடைய விஷயத்தில் அது *நம்முடைய பழைய மனுஷனுக்கு அல்லது பழைய சுபாவத்திற்கு மரணத்தைக் கொண்டுவருகிறது.* மாறாக, மரணபரியந்தம் கீழ்ப்படிதல் என்பதில், நாம் இருதயத்திற்குள் முரட்டாட்டமுள்ளவர்களாயும் சந்தோஷமற்றவர்களாயும் இருந்துகொண்டே, நாம் மரிக்கும் வரையிலும் கீழ்ப்படிந்து கொண்டிருக்கலாம். இதில் நாம் சரீரப்பிரகாரமாகக் கீழ்ப்படிந்தாலும், நம்முடைய மனதில் நாம் எதிர்த்து எரிச்சலடைந்து கொண்டிருப்போம்; நாம் கீழ்ப்படிந்தாலும் அது மனமகிழ்ச்சியுடன் கூடிய கீழ்ப்படிதலாயிராது. அது ஒருபோதும் நம் சுபாவத்தை மாற்றவோ, நம் பழைய சுபாவத்திற்கு மரணத்தைக் கொண்டுவரவோ முடியாது. "நான் உற்சாகமாய் அப்படிச் செய்தால் எனக்குப் பலன் உண்டு" என அப். பவுல் கூறுகிறார் (I கொரி. 9 : 17). நாம் மனப்பூர்வமாய்த் தேவ சித்தம் செய்யும்போது, நம் சுய சித்தத்திற்கும் பெருமைக்கும் ஒரு மரண அடி கொடுக்கப்படுகிறது. அதன்மூலம் கிறிஸ்துவைப் போன்ற தாழ்மை நமக்குப் பலனாகக் கிடைக்கிறது; கிறிஸ்துவையும், நித்தியத்திலுள்ள மிக அழகான இடமாகிய புதிய எருசலேம் அல்லது சீயோனையும் நாம் பிரதிபலனாகப் பெற்றுக்கொள்கிறோம்.

கிறிஸ்துவுக்கு நேரிட்ட சோதனைகளுக்கும் நமக்கு நேரிடுகிற சோதனைகளுக்கும் இடையேயுள்ள முக்கியமான வித்தியாசம் யாது? நமக்கு வரும் சோதனைகளில் பெரும்பாலானவையும் நம்மைத் தாழ்மையுள்ளவர்களாக்கும்படியாகவே வருகின்றன: "உன் தேவனாகிய கர்த்தர் *உன்னைச் சிறுமைப்படுத்தும்படிக்கு* ... உன்னை இந்த நாற்பது வருஷமளவும் வனாந்தரத்திலே நடத்திவந்த *எல்லா வழியையும்* நினைப்பாயாக" (உபா. 8 : 2). ஆனால் கிறிஸ்துவுக்கு நேரிட்ட சோதனைகளோ, அவரிலிருந்த நேர்த்தியான தாழ்மையின் சுபாவத்தை நமக்கு நிரூபித்துக் காண்பிக்கும்படி அல்லது வெளிப்படுத்தும்படி வந்தவையே ஆகும். இருப்பினும், நாமுங்கூட கிறிஸ்துவைப் போன்ற தாழ்மைக்குக் கடந்துவரக் கூடும். அதாவது, தேவனுடைய

கிருபையினால் நாமுங்கூட, நமக்கு வரும் சோதனைகளில் நம்மில் உருவாக்கப்பட்டுள்ள கிறிஸ்துவைப் போன்ற தாழ்மையை நிரூபித்துக் காண்பிக்கக் கூடிய அல்லது வெளிப்படுத்தக் கூடிய அதே நிலைவரத்திற்கு வரக் கூடும். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

வில்லியம் கேரி (William Carey) என்பவர் இருநூறு வருடங்களுக்கு முன்பு இங்கிலாந்திலிருந்து வட இந்தியாவிற்கு வந்து, புதிதாக ஊழியம் ஆரம்பித்த மிஷனரி ஆவார். அவர் நிறுவிய பல்கலைக்கழகமே இந்தியாவில் கிறிஸ்தவர்களால் நிறுவப்பட்ட முதல் பல்கலைக்கழகமாகும். அவர் அவ்விடத்து மொழியில் வேதாகமத்தை மொழிபெயர்த்ததுடன், மற்றும் பல தொண்டுகளையும் ஆற்றியுள்ளார். இந்தியர்கள் அவருடைய சிறந்த முன்மாதிரியுள்ள மிஷனரிப் பணிகளால் கவரப்பட்டு, அவரைக் கௌரவிக்கும் வகையில் அவருக்கு ஒரு விருந்து செய்தனர். வேறு சில ஆங்கிலேய கனவான்களும் அவ்விருந்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் ஒருவர் திரு. கேரி கனம்பண்ணப்பட்ட விதத்தைக் கண்டு மிகவும் பொறாமை கொண்டு, விருந்தில் மேசையின் மறுமுனையில் அமர்ந்திருந்த இந்தியரான ஒரு கனவானை நோக்கி, 'எனக்கு வில்லியம் கேரியை இங்கிலாந்திலேயே தெரியும்; அவர் ஒரு காலணி தயாரிப்பாளராகத்தான் (shoemaker) இருந்தார்!' என்று தாழ்ந்த குரலில் கூறினார். இவ்வார்த்தைகள் கேரியின் செவிகளில் விழவே அவர், 'ஐயா! தயவுசெய்து மன்னிக்கவும். நான் காலணி தயாரிப்பாளனாக அல்ல, காலணிகளைப் பழுது பார்க்கிறவனாக (cobbler) மாத்திரமே இருந்தேன்!' என்று சாந்தமாகக் கூறினார். இதுவே கிறிஸ்துவைப் போன்ற தாழ்மையாகும். தாழ்த்தப்படும்போது அல்லது அவமதிக்கப்படும்போது, நம்முடைய பிரதிக்கிரியை தவறானதாயிருக்குமாயின், நாம் தாழ்மை என்னும் பள்ளியில் பூஜ்யம் மதிப்பெண் பெற்றுத் தோல்வியுற்றிருக்கிறோம் என்பதே அதன் பொருளாகும். நாம் தாழ்த்தப்படும்போது அதை நல்ல மனப்பான்மையுடன் ஏற்றுக்கொண்டு, யாரிடமும் மனத்தாங்கல்

அடையாமல் நம்மை இன்னும் அதிகமாகத் தாழ்த்த ஆயத்தமாயிருந்தால், நாம் அச்சோதனைகளிலிருந்து மகத்தான வெற்றி பெற்றவர்களாய் வெளிவருவோம்; மகிமைக்குப் பறந்து செல்லக் கூடியவர்களுமாவோம்!

5. '*சிலுவையின் மரணபரியந்தம்*':

சிலுவை மரணம், எந்த ஒரு மனுஷனும் கடந்து போவதற்கு மிகக் கடினமானதும், மிக மோசமான விதத்தில் சிறுமைப்படுத்துவதுமான ஒரு நீச மரணமாகும். இப்பூமியிலேயே மிக மோசமான குற்றவாளி அவரே என்பது போல்தான் கிறிஸ்துவின் மரணம் இருந்தது. 'கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையிலறையப்பட்டிருக்கிறேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து, எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவ குமாரனுடைய விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்' என அப். பவுல் எழுதுகிறார் (கலா. 2 : 20 - Eng.). சிலுவையிலறையப்படுதல் என்பது முற்றும் தாழ்த்தப்படுதல் அல்லது சிறுமைப்படுத்தப்படுதல் ஆகும். 'கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டிருக்கிறேன்' என்பதன் அர்த்தம், 'நான் கிறிஸ்துவுடனே கூடச் சிறுமைப்படுத்தப்பட்டிருக்கிறேன்' என்பதாகும். அநேகர் ஆண்டவராகிய இயேசுவை நேசிக்கிறார்கள். ஆனால் அவர்கள் சிலுவைக்குப் பகைஞராயிருக்கிறார்கள். "ஏனெனில், அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள்; அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞரென்று உங்களுக்கு அநேகந்தரம் சொன்னேன், இப்பொழுது கண்ணீரோடும் சொல்லுகிறேன். அவர்களுடைய முடிவு அழிவு, அவர்களுடைய தேவன் வயிறு, அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலச்சையே, அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள்" என அப். பவுல் கூறுகிறார் (பிலி. 3 : 18, 19). நீங்கள் கிறிஸ்துவுக்காகச் சிறுமைப்படுத்தப்படுவதை விரும்புகிறீர்களா? சிலுவையிலறையப்படுதல் இன்றி உயிர்த்தெழுதல்

இல்லையே! சிலுவையிலறையப்படுதல் என்பது புறக்கணிக்கப்படுதலாகும். கர்த்தராகிய இயேசுவின் கல்வாரிப் பாதையில் அவருடைய சீஷர்கள் அனைவரும் அவரைப் புறக்கணித்து அவரை விட்டுப் போய்விட்டனர். புறக்கணிக்கப்படுதல் என்பது தாழ்த்தப்படுதலின் ஒரு பகுதியாகும். வேண்டாமென்று புறக்கணித்துத் தள்ளப்பட்ட கல்லே மூலைக்குத் தலைக்கல்லாயிற்று. நம்மை மூலைக்கல்லாக அல்லது மிக விலையேறப்பெற்ற கல்லாக மாற்றுவது நாம் சந்திக்கும் புறக்கணிப்புகள் அல்ல, புறக்கணிக்கப்படும்போது நம்மிலிருந்து வெளிப்படும் நம் பிரதிக்கிரியையே ஆகும்.

பிறரால் புறக்கணிக்கப்பட்டுத் தள்ளப்படும்போது நம் பிரதிக்கிரியை எவ்விதம் இருக்க வேண்டும் என்பதை நாம் காண்போம். "வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக்கல்லாயிற்று. அது கர்த்தராலே ஆயிற்று. அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது. இது கர்த்தர் உண்டுபண்ணின நாள்; இதிலே களிகூர்ந்து மகிழக்கடவோம்" (சங். 118 : 22 - 24). சில மிக முக்கியமான பாடங்களை இவ்வேதபகுதியிலிருந்து நாம் கற்றுக்கொள்ளுகிறோம்: (i) "*அது கர்த்தராலே ஆயிற்று*" - நாம் மனுஷரால் தள்ளப்படும்போது, அது கர்த்தராலே ஆயிற்று அல்லது அது கர்த்தருடைய செயல் என நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். அது மனுஷராலே ஆயிற்று என நாம் எடுத்துக் கொள்வோமாகில், நம் பிரதிக்கிரியை தவறானதாயிருக்கும். நாம் அதைக் கர்த்தரிடத்திலிருந்து வந்ததாக எடுத்துக்கொள்வோமாயின், அதை ஏற்றுக்கொள்ளும்படியான கிருபையைத் தேவன் நமக்குத் தந்தருளுவார். (ii) "*அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது*" - புறக்கணிப்புகளைக் கர்த்தரிடத்திலிருந்து வந்ததாக நாம் எடுத்துக்கொள்வோமாயின், தேவன் நம்முடைய சுபாவத்தில் ஆச்சரியமான ஒரு கிரியையை நடப்பிப்பார். (iii) "*இதிலே களிகூர்ந்து மகிழக்கடவோம்*" - புறக்கணிப்புகள் மூலமாகத் தேவன் நம்முடைய சுபாவத்தில் கிரியை

நடப்பிக்கிறார் என்பதை நாம் உணருவோமாயின், நம்மால் அதிலே களிகூர்ந்து மகிழக் கூடும். (iv) ***"வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின (புறக்கணித்த) கல்லே, மூலைக்குத் தலைக்கல்லாயிற்று"*** - நமக்கு நேரிடுகிற புறக்கணிப்புகளை நாம் கிறிஸ்துவைப் போன்ற ஆவியுடன் ஏற்றுக்கொள்ளும்போது, அது நமக்குப் பெரிய கனத்தைக் கொண்டுவருகிறது; கர்த்தராகிய இயேசு புறக் கணிக்கப்பட்ட பின் உயிரோடெழுப்பப்பட்டது போலவும், தமது உயிர்த்தெழுதலுக்குப் பின் மூலைக்குத் தலைக்கல்லானது போலவும், நாமுங்கூட மேன்மையாகக் கனப்படுத்தப்படுவோம். புறக்கணிக்கப் படுகையில் பெருமையுள்ளவர்களின் பிரதிக்கிரியை தவறானதா யிருக்கும். சவுல் இஸ்ரவேலின் ராஜாவாயிராதபடிக்குப் புறக் கணிக்கப்பட்டபோது, அவன் அதிகக் கோபமடைந்து, தனக்கு அடுத்த ராஜாவாயிருக்கும்படி தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட தாவீதைக் கொன்றுபோட விரும்பினான். அவனுக்குச் சம்பவித்தது யாது? அவன் தன் அபிஷேகத்தை இழந்துபோனதுடன், ஒரு கொடூர மரணத்தைச் சந்திக்கும் வரை ஒரு பொல்லாத ஆவி அவனை அலைக்கழித்துக்கொண்டிருந்தது.

அருமையான தேவபிள்ளையே, சவுலைப் போல நீ ஒருவேளை பெருமையின் ஆவியினால் அலைக்கழிக்கப் பட்டுக்கொண்டிருக்கக் கூடும். "அழிவு வருமுன் மனுஷனுடைய இருதயம் இறுமாப்பாயிருக்கும்; மேன்மைக்கு முன்னானது தாழ்மை" (நீதி. 18 : 12). நாம் அழிவைச் சந்திக்குமுன்னதாகப் பெருமையின் ஆவியை நம்மைவிட்டு அகற்றிவிடும்படி கர்த்தர் தாமே நமக்கு உதவி செய்வாராக. கிறிஸ்துவைப் போன்ற தாழ்மையை நாம் தரித்துக்கொள்வோமாக. சர்வ வல்லமையுள்ள தேவன் ஒரு மனுஷனுக்குள் நடப்பிக்கக்கூடிய மிகப் பெரிய கிரியை, கிறிஸ்துவைப் போன்ற தாழ்மையை அவனுக்கு அருளிச் செய்வதே ஆகும்.

அதிகாரம் 7

தாழ்மையின் விலைமதித்தற்கரிய பிரதிபலன்கள்

நமது சபையின் ஸ்தாபகரான பாஸ்டர் பால் அவர்கள் ஒருமுறை ஒரு தரிசனம் கண்டார். அத்தரிசனத்தில் சீயோனை நோக்கி உயர்ந்து செல்லும் ஏழு படிக்கட்டுகளை அவர் கண்டார். முதலாவது படியின் மீது 'தாழ்மை' என்று எழுதப்பட்டிருந்தது. அடுத்த படியின் மீது வேறு ஏதேனும் ஒரு தெய்வீக சுபாவம் குறிக்கப்பட்டிருக்கும் என்று இயல்பாகவே அவர் எதிர்பார்த்தார். ஆனால் அந்தப் படியின் மீதும் 'தாழ்மை' என்றே எழுதப் பட்டிருந்ததைக் கண்டு அவர் பெரும் வியப்படைந்தார். பின்னர் ஏழு படிகளிலுமே 'தாழ்மை' என்ற அதே வார்த்தை எழுதப் பட்டிருந்ததை அவர் கண்டார். இந்தத் தரிசனமானது அவரது ஜீவியம் முழுவதையுமே மறுருபப்படுத்திற்று. அவர் தாழ்மை மிக்க ஒரு மனிதனானார். அதுவே அவரது வாழ்க்கை, ஊழியம் ஆகியவற்றின் வெற்றியாய் அமைந்துவிட்டது. ஒரு குறுகிய கால அளவிற்குள்ளாகவே பூமியின் நான்கு மூலைகளுக்கும் பரவி யிருக்கும் ஒரு ஊழியத்தை ஸ்தாபிக்கும்படியாக அவ்வளவு கல்வியறிவில்லாத ஒரு சாதாரண மனுஷன் எவ்விதம் தேவனால் உபயோகிக்கப்படக் கூடும்? அவர் மரித்து ஐம்பது ஆண்டு களுக்கும் மேல் கடந்துவிட்டன; ஆயினும் அவரால் ஸ்தாபிக்கப் பட்ட அந்த ஊழியம் இன்றும் தொடர்ந்து செழித்தோங்குகிறது;

கிறிஸ்துவைப் போன்ற தாழ்மையைக் கற்றுக்கொள் - நீ தேவனால் அதிகமாய் உபயோகப்படுத்தப்படுவாய்; உன் மரணத்திற்குப் பின்னருங்கூட உனது சேவையின் பலன் தொடரும்! இருப்பினும் தாழ்மையை நீ வாஞ்சிப்பது, நீ தேவனால் வல்லமையாக உபயோகிக்கப்படும் ஒரு மனுஷனாக மாற வேண்டுமென்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதாயிருக்கக் கூடாது. உன் நோக்கம் அதுவாயிருக்குமாயின், மெய்யான தாழ்மையை நீ ஒருபோதும் அறிந்துகொள்ளப்போவதில்லை. தாழ்மையின் மேல் உள்ள உன் வாஞ்சையானது, நீ தேவனால் உபயோகிக்கப்பட வேண்டும் என்ற வாஞ்சையின் அடிப்படையில் அல்ல, கிறிஸ்துவைப் போலாக வேண்டும் என்று உனக்குள் அக்கினியைப் போல பற்றி எரிந்துகொண்டிருக்கும் வாஞ்சையின் அடிப்படையிலேயே இருக்க வேண்டும்.

தாழ்மையுள்ளோர் பெற்றுக்கொள்ளும் இரு கிரீடங்கள்:

"மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷனுடைய குமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம்? அவனை தேவதூதரிலும் சற்றுச் சிறியவனாக்கினீர்; மகிமையினாலும் கனத்தினாலும் அவனுக்கு முடிசூட்டி, உம்முடைய கரத்தின் கிரியைகளின்மேல் அவனை அதிகாரியாக வைத்து, சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்" (எபி. 2 : 6, 7).

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்ட சில சத்தியங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. தேவன் ஏன் மனுஷனைத் தேவதூதரிலும் சிறியவனாக்கினார்? இதை நாம் விளங்கிக்கொண்டால், தேவன் ஏன் நம்மைச் சில சமயங்களில் மற்றவர்களைக் காட்டிலும் தாழ்ந்தவர்களாக்குகிறார் (அல்லது சிறியவர்களாக்குகிறார்) என்பதையும், நாம் தாழ்த்தப்படும்படியாக அவர் ஏன் அனுமதிக்கிறார் என்பதையும் விளங்கிக்கொள்வோம். தேவன் நம்மைக் காட்டிலும் இளையவர்களை அல்லது அனுபவத்தில் குறைந்தவர்களை அல்லது குறைந்த தகுதியுள்ள

வர்களை நம்மைக் காட்டிலும் அதிகமாகக் கனம்பண்ணப்பட, பாராட்டப்பட ஏன் அனுமதிக்கிறார்? நாம் நிந்திக்கப்படவும், பரிகசிக்கப்படவும், அவமதிக்கப்படவும் தேவன் ஏன் இடங்கொடுக்கிறார்? அதற்குப் பின்னாக உள்ள தேவனுடைய மகத்தான திட்டத்தை நாம் விளங்கிக்கொள்ளாவிட்டால், நாம் கோபமும் எரிச்சலும் கலக்கமும் அடைந்து, அதினிமித்தமாக நித்தியத்தில் நமக்குக் கிடைக்கக் கூடிய மேன்மையான பிரதிபலனையும் இழந்துபோவோம். "மனுஷகுமாரன் நிமித்தமாக ஜனங்கள் உங்களைப் பகைத்து, உங்களைப் புறம்பாக்கி, உங்களை நிந்தித்து, உங்கள் நாமத்தைப் பொல்லாததென்று தள்ளிவிடும்போது நீங்கள் பாக்கியவான்களாயிருப்பீர்கள். அந்நாளிலே நீங்கள் சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்" (லூக்கா 6 : 22, 23).

யாராயினும் ஒருவர் தங்களை அவமதிக்கும்போதோ, தாழ்த்தும்போதோ ஜனங்கள் கோபமும் கசப்பும் அடைவதன் காரணம், பரலோகத்தில் தங்களுக்குள்ள மிகுதியான பிரதிபலனைக் குறித்து அவர்கள் அறியாதிருப்பதே ஆகும். யாராயினும் ஒருவர் உங்கள் முகத்தில் துப்பினால் உடனடியாக உங்களுக்கு ஒரு கோடி ரூபாய் பரிசாக அளிக்கப்படும் என்ற ஒரு அறிவிப்பைக் குறித்து நீங்கள் அறியவருவதாக வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் ஒரு பைசாகூட இல்லாத ஒரு ஆளாயிருந்து, உங்கள் அவசரத் தேவைகளைச் சந்திக்க பணம் உங்களுக்குத் தேவைப்பட்டு, அதற்கும் எவ்வித வழியுமின்றி கலங்கியிருக்கும் சந்தர்ப்பத்தில், திடீரென உங்களுடைய விரோதி ஒருவர் உங்களைக் கண்டு, உங்கள் முகத்தில் துப்பினால் உங்கள் பிரதிக்கிரியை என்னவாயிருக்கும்? நீங்கள் நிச்சயமாகவே சந்தோஷப்பட்டுக் களிகூருவீர்கள்! ஏனெனில் 'உங்கள் பலன் பூமியில் மிகுதியாயிருக்கும்'. பொங்கி வழியும் சந்தோஷத்துடன் உங்களுக்கு எவ்விதம் ஒரு கோடி ரூபாய் கிடைத்தது என்பதை எல்லோரிடமும் நீங்கள் கூறுவீர்கள். உங்கள் குடும்பம் முழு

வதுங்கூட உங்களுடன் சேர்ந்து களிகூர்ந்து மகிழ்வதுடன், ஒரு கோடி ரூபாய் உங்களுக்குக் கிடைக்க வழிவகுத்த அந்தத் துப்பப்படுதலுக்காகத் தேவனுக்கு நன்றி செலுத்தும். தேவஜனங்களில் அநேகர் பூமிக்குரிய சிந்தையுள்ளவர்களாயிருப்பதினால் பரலோகத்தில் தங்களுக்குள்ள பிரதிபலனைக் குறித்துச் சந்தோஷப்பட்டுக் களிகூர முடியாதவர்களாயிருக்கின்றனர்.

தேவன் *நம்மைப் பற்றி நினைவுள்ளவராயிருப்பதினாலேயே* நாம் தாழ்த்தப்படுவதற்கும் நிந்திக்கப்படுவதற்கும் இடமளிக்கிறார். "மனுஷனை நீர் நினைக்கிறதற்கு ... அவன் எம்மாத்திரம்? ... அவனைத் தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்" (சங். 8 : 4, 5). நாம் பெரும்பாலும் இதற்கு மாறாகவே சிந்திக்கிறோம்; தேவன் நம்மேல் நினைவுள்ளவராயிருப்பதில்லை என்றும், எனவேதான் அவர் நம்மைச் சிறுமைப்படுத்துகிறார் அல்லது தாழ்த்துகிறார் என்றும் நாம் எண்ணிக்கொள்கிறோம். 'தேவன் நம்மேல் நினைவுள்ளவராயிருக்கிறார்; ஆகவேதான் அவர் நம்மைத் தாழ்த்துகிறார்' என்று சொல்வதில் ஏதாயினும் அர்த்தம் உண்டா? ஆம்! அதில் நிச்சயமாகவே அர்த்தம் உண்டு. தேவன் நமக்காக மிகுதியான பிரதிபலன்களைப் பரலோகத்தில் சேர்த்து வைத்திருப்பதினாலேயே நாம் தாழ்த்தப்படுவதையும் அவமதிக்கப்படுவதையும் அவர் அனுமதிக்கிறார். மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் "நீர் அவனைத் தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்" என்பதைத் தொடர்ந்து, "மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர்" என நாம் வாசிக்கிறோம். தேவன் நமக்கு *மகிமையின் கிரீடம், கனத்தின் கிரீடம் ஆகிய இரண்டு கிரீடங்*களைத் தரும்படியாகவே நம்மைத் தாழ்த்துகிறார். அவருடைய பரிசுத்த நாமத்துக்கு ஸ்தோத்திரம்! மகிமையின் கிரீடமும் கனத்தின் கிரீடமுமாகிய இவ்விரு கிரீடங்களும் விசேஷமானவை. வேதாகமத்தில் பெரும்பாலும் ஒரு தெய்வீக சுபாவத்திற்கு அல்லது ஒரு ஊழியத்திற்கென ஒரு பிரதிபலன் அல்லது ஒரு கிரீடமே வைக்கப்பட்டிருப்பதாக நாம் காண்கிறோம். உதாரணமாக, மரணபரியந்தம் உண்மையாயிருப்பவர்களுக்கென ஜீவ கிரீடம் வைக்கப்பட்டிருக்கிறது (வெளி. 2 : 10). ஆனால், மெய்யான தாழ்மையுள்ளவர்களுக்கோ தேவன் மகிமை, கனம் ஆகிய இரண்டு கிரீடங்களைத் தருகிறார்.

"ஞானமே முக்கியம், ஞானத்தைச் சம்பாதி; என்னத்தைச் சம்பாதித்தாலும் புத்தியைச் சம்பாதித்துக்கொள்"; "அது மகிமையான கிரீடத்தை உனக்குச் சூட்டும்" (நீதி. 4 : 7, 9). நாம் கிறிஸ்துவைப் போன்ற தாழ்மையை நாடும்போது மெய்யான ஞானத்தையே நாடுகிறோம். பெருமையானது நம் ஞானத்தைக் கெடுத்துப்போடுகிறது. பெருமையுள்ள ஒரு மனுஷன் நிச்சயமாகவே தேவனுடைய பார்வையில் மதியீனனாயிருக்கிறான். தாழ்மையுள்ள பரிசுத்தவான்களின் மூலமாகத் தேவனுடைய கனமானது ஒரு கிரீடத்தைப் போல பிரகாசிக்கிறது. இதுவே கனத்தின் கிரீடம் ஆகும். "அழிவு வருமுன் மனுஷனுடைய இருதயம் இறுமாப்பாயிருக்கும்; மேன்மைக்கு முன்னானது தாழ்மை" (நீதி. 18 : 12).

தாழ்மையானது கனத்தை வருவிப்பது போல, பெருமையானது சாபத்தை வருவிக்கிறது. 'சபிக்கப்பட்ட அகங்காரிகள்' என்று நாம் வாசிக்கிறோமே! (சங். 119 : 21). தாழ்மையின் பலன் இரட்டிப்பான கிரீடமும், பெருமையின் பலன் இரட்டிப்பான சாபமுமாகும். பெருமையுள்ளவர்கள் பூமியில் சபிக்கப்பட்டவர்களாயிருந்து, நித்தியம் முழுவதிலும் சபிக்கப்பட்டவர்களாகவே தொடருவார்கள். பெருமை தன்னில் தானே ஒரு சாபமாயிருப்பது போல, தாழ்மை தானே ஒரு கிரீடமாயிருக்கிறது.

அருமையான தேவபிள்ளையே, உன் எல்லாத் தாழ்த்தப்படுதலும், நிந்திக்கப்படுதலும், அவமதிக்கப்படுதலும் தேவன் உன்மேல் கொண்டிருக்கும் அன்பு, கரிசனை ஆகியவற்றின் அடையாளங்கள் மாத்திரமே என்பதை நீ உணருகிறாயா? நீ அவைகளைக் குறித்து

மகிழ்ந்து களிகூர்ந்து உன்னை அவமதிப்பவர்களையும் புறக்கணிப்பவர்களையும் நேசிக்கிறாயா? கடந்த காலத்தில் உனக்கு இன்னல் இழைத்தவர்களைக் குறித்துத் தவறான மனப்பான்மைகொண்டிருந்த தினிமித்தம் நீ இழந்துபோன மிகுதியான பிரதிபலன்களைக் குறித்து எண்ணிப்பார். அவமதிக்கப்படுதல், நிந்திக்கப்படுதல் போன்றவை உன்னைப் பரலோகத்தில் மிகுந்த ஐசுவரியமுள்ளவனாக்குகின்றன என்பதை நீ உணருவாயாகில், உனக்கு அப்படிப்பட்ட பிரதிபலன்கள் கிடைக்கச் செய்யும் கருவிகளாயிருக்கும் உன் சத்துருக்களை நேசிப்பது உனக்கு ஒரு பிரச்சினையாகவே இராது.

தாழ்மையானது மலைகளையும் அசைக்கிறது!

"பெரிய பர்வதமே, நீ எம்மாத்திரம்? செருபாபேலுக்கு முன்பாக நீ சமபூமியாவாய்; தலைக்கல்லை அவன் கொண்டு வருவான்; அதற்குக் கிருபையுண்டாவதாக, கிருபையுண்டாவதாக என்று ஆர்ப்பரிப்பார்கள்" (சக. 4 : 7). தாழ்மையில் அடங்கியுள்ள ஆசீர்வாதங்களைக் குறித்து இவ்வேதபகுதியிலிருந்து சில அழகான சத்தியங்களை நாம் கற்றுக்கொள்ளக் கூடும். இங்கே 'கிருபை' என்னும் பதம் இருமுறை குறிப்பிடப்பட்டுள்ளதை நாம் கவனிக்கலாம். கிருபை தாழ்மையுள்ளவர்களுக்குரியது. எனவே ஒரு அர்த்தத்தில், கிறிஸ்துவைப் போன்ற மெய்யான தாழ்மை அல்லது இரட்டிப்பான தாழ்மையுள்ளவர்களுக்கு (அதாவது, ஜீவியத்தில் தாழ்மையும், சேவையில் தாழ்மையும்) இரட்டிப்பான கிருபை உரியது. மெய்யான தாழ்மையுள்ள பரிசுத்தவான்களின் முன்னிலையில் பிரமாண்டமான மலைக்கு அல்லது கடுமையான இடுக்கண்களுக்கு என்ன சம்பவிக்கும்? அவை சமபூமியாகும்!

அருமையான தேவபிள்ளையே, உனக்கு முன்பாக ஒரு 'பெரிய பர்வதம்' காணப்படுகிறதா? உன் வாழ்வின் முன்னேற்றத்தை அச்சுறுத்தும் பெரிய பர்வதத்தைக் கண்டு நீ

கவலைப்பட்டுக் கலங்கிக்கொண்டிருக்கிறாயா? நீ கிறிஸ்துவின் தாழ்மையை நாடுவாயாகில் அப்பர்வதம் மறைந்துபோகும். 'தலைக்கல்' என்று இங்கு குறிப்பிடப்பட்டிருப்பது, 'கடைசியான' அதாவது 'முடிவான' கல்லாகும். கிறிஸ்துவைப் போன்ற தாழ்மையை நாம் தழுவிக்கொள்வோமாகில், தேவனுடைய கிரியையானது ஒரு அர்த்தத்தில் நம் ஜீவியத்தில் முடிவுற்றிருக்கும் அல்லது பூரணமாக்கப்பட்டிருக்கும்.

அஸிஸியின் புனித பிரான்ஸிஸ் பின்வருமாறு வேண்டிக் கொண்டார். நாமும் கர்த்தரை நோக்கி அவ்விதமாகவே வேண்டிக் கொள்வோமா?

'சாந்தமும் மனத்தாழ்மையுமுள்ள கர்த்தராகிய இயேசுவே, எனக்குச் செவிகொடும்.

நான் நேசிக்கப்பட வேண்டும் என்ற வாஞ்சையிலிருந்து
நான் உயர்த்தப்பட வேண்டும் என்ற வாஞ்சையிலிருந்து
நான் கனப்படுத்தப்பட வேண்டும் என்ற வாஞ்சையிலிருந்து
நான் புகழப்பட வேண்டும் என்ற வாஞ்சையிலிருந்து
நான் பிறரைக் காட்டிலும் மேன்மையானவனாகத் தெரிந்து கொள்ளப்பட வேண்டும் என்ற வாஞ்சையிலிருந்து
நான் கலந்தாலோசிக்கப்பட வேண்டும் என்ற வாஞ்சையிலிருந்து
நான் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற வாஞ்சையிலிருந்து

நான் தாழ்த்தப்பட்டுவிடுவேனோ என்ற பயத்திலிருந்து
நான் அவமதிக்கப்பட்டுவிடுவேனோ என்ற பயத்திலிருந்து
நான் பாடுகளுக்குள்ளாக்கப்படுவேனோ என்ற பயத்திலிருந்து
நான் பிறரால் மறக்கப்பட்டுப்போவேனோ என்ற பயத்திலிருந்து
நான் பிறரால் பரிகசிக்கப்படுவேனோ என்ற பயத்திலிருந்து
எனக்குப் பிறர் தீங்கிழைத்துவிடுவரோ என்ற பயத்திலிருந்து
என்னைப் பிறர் சந்தேகிப்பரோ என்ற பயத்திலிருந்து
மீட்பராகிய இயேசுவே, என்னை விடுதலையாக்கும்.

மேலும், ஆண்டவராகிய இயேசுவே, கீழ்க்கண்டவைகளை நான் வாஞ்சிக்க எனக்குக் கிருபை தாரும் -

என்னிலும் பிறர் அதிகமாய் நேசிக்கப்பட வேண்டும்
என்னிலும் பிறர் மேலானவர்களாய் எண்ணப்பட வேண்டும்
உலகின் கணிப்பில் பிறர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்
பிறர் தெரிந்தெடுக்கப்பட்டு, நான் ஒதுக்கப்படவும்
பிறர் புகழப்பட்டு நான் அசட்டை பண்ணப்படவும் வேண்டும்
எல்லாவற்றிலும் என்னிலும் பிறர் மேலானவர்களாகத் தெரிந்து கொள்ளப்பட வேண்டும்
நான் எவ்வளவாய் பரிசுத்தமாக்கப்பட வேண்டுமோ அவ்வளவாய்ப் பரிசுத்தமாக்கப்படவும்,
என்னிலும் பிறர் பரிசுத்தவான்களாய்க் கணிக்கப்படவும் வேண்டும்'.

எமது வெளியீடுகள்

A. உபதேச புத்தகங்கள்	வெளியீடு எண்
1 தேவன், தேவ தூதர்கள், மனுஷன்	A 1
2 மீட்பு, மனந்திரும்புதல், மறுபடியும் பிறத்தல்	A 2
3 ஞானஸ்நானம் பற்றிய உபதேசம்	A 3
4 தெய்வீக சுகதைப் பற்றிய உபதேசம்	A 4
5 வெளகீகம் பற்றிய உபதேசம்	A 5
6 பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பற்றிய உபதேசம்	A 6
7 புதிய ஏற்பாட்டு ஊழியம் (பகுதி I)	A 7
8 பூரண பரிசுத்தமாகுதல் (வினா - விடை)	A 8
9 கிறிஸ்துவின் இரண்டாம் வருகை (வினா - விடை)	A 9
10 மகா உபத்திரவம் (வினா - விடை)	A10
12 ஞானஸ்நானம்	A12
13 பரிசுத்த ஆவியின் அபிஷேகம்	A13
14 தெய்வீக சுகத்தின் தூதுகள்	A14
15 புதிய ஏற்பாட்டு ஊழியம் (பகுதி II)	A15
B. விளக்கவுரை புத்தகங்கள்	
1 அப்போஸ்தலருடைய நடபடிகள் - விளக்கவுரை	B 1
2 எபேசிய நிருபத்தின் விளக்கவுரை	B 2
3 வெளிப்படுத்தின விசேஷத்தின் விளக்கவுரை	B 3
C. இதர புத்தகங்கள்	
1 மனுஷனின் நித்திய வாழ்க்கை	C 1
2 ஆசரிப்புக்கூடாரம்	C 2
3 ஜெபம்	C 3
4 வேதாகமத்தின் மறைபொருள் விளக்கங்கள் சில	C 4
5 பிதாக்களின் கல்லறைகள்	C 5
6 சோதனை ஜீவகிரீடம் பெற இன்றியமையாதது	C 6
7 பாஸ்டர் பால் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு	C 7

		வெளியீடு எண்
8	தேவசித்தம்	C 8
9	கிறிஸ்துவும் அந்திக்கிறிஸ்துவும்	C 9
10	யோசேப்பின் வாழ்க்கை - சிறந்தோர் மாதிரி!	C10
11	எருசலேமின் அலங்கமும் வாசல்களும்	C11
12	மன்னித்தல் - பரலோகத்தின் ஒரு முன்சுவை!	C12
13	மனுஷீக பெருமையும் தெய்வீகத் தாழ்மையும்	C13
14	தாழ்மையும் தூய்மையும் (ரூத்தின் சரித்திரம்)	C14
15	தானியேல் - மாசற்றோர் உத்தமன்!	C15
16	23-ஆம் சங்கீதத்தின் இனிமை	C16
17	பூரண வடிவுள்ள சீயோன்	C17
18	இருபது நியாயத்தீர்ப்புகள்	C18
19	காலை மன்னா	C19
20	இதோ, இங்கிருக்கிறது பதில்!	C20
21	விசுவாசம்	C21

சிறுநூல் வெளியீடுகள்

(i) சமாதானம்
(ii) ஆழமான சத்தியங்கள்
(iii) முதலாம் உயிர்த்தெழுதல்
(iv) உள்ளத்தின் பெலன்
(v) புதிய ஏற்பாட்டுச் சபை - அது எதற்காக?
(vi) புதிய ஏற்பாட்டுச் சபையின் நடத்திப்பு
(vii) நித்திய தேவன் - அவர் திரித்துவரா?
(viii) சீயோன் மலையில் 1, 44, 000 பேர் - இவர்கள் யார்?
(ix) விவாகரத்தும் மறுமணமும்

இருவரது வாழ்வில் பெருமையும் தாழ்மையும் உண்டு பண்ணக்கூடிய விளைவுகளை நாம் விளங்கிக்கொள்ள இந்நூல் நமக்கு உதவிசெய்கிறது. தாழ்மை என்பது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மாம்ச சரீரத்தில் வாழ்ந்தபோது வெளிப்படுத்திய மிக முக்கியமான தெய்வீகப் பண்புகளில் ஒன்றாகும். எல்லாத் தீமைக்கும் வித்தாகிய பெருமை மனுஷனுடைய இருதயத்தில் ஆழமாகப் பதிந்துள்ளது. மனிதன் ஜீவியத்தில் இருப்பதைப் பற்றிய உணர்வே இல்லாதவனாய் அவன் அந்த அம்சத்தில் மரத்துப்போயிருக்கிறான். இந்நூலை வாசிக்கையில், நம்மில் இருக்கும் 'பெருமையை' நாம் தேவனுடைய கண்ணோட்டத்தில் கண்டு, அதன் மேல் ஒரு வெறுப்பை உண்டாக்கிக்கொள்ளக்கூடியவர்களாவோம். நம் பெருமையினிமித்தம் இம்மையில் நம் வாழ்க்கையிலும், மறுமையில் நித்தியத்திலும் உண்டாகக் கூடிய விளைவுகளும், பெருமையுள்ளவர்கள் மீது வரும் தேவ நியாயத்தீர்ப்பும் அதிர்ச்சியூட்டக்கூடியவையாகும்!

நம் பெருமையின் அவல நிலையைக் கண்ணுற்று நாம் மனந்தளர்ந்துபோக வேண்டியதில்லை. கிறிஸ்துவின் தாழ்மை அதிலின்று மீளும் வழியை நமக்குக் காண்பிக்கிறது. கிறிஸ்தவ ஜீவியத்தின் மகிழ்ச்சியின் உச்சநிலை, நாம் அடைந்து கொள்ளும் கிறிஸ்துவின் தாழ்மையின் ஆழத்திலேயே தங்கியிருக்கிறது. தாழ்மை என்பது தேவன் நமக்கு அளித்திருக்கும் சக்தி வாய்ந்த ஓர் ஆயுதமாகும். மறுபக்கத்தில், பெருமையோ ஒருவனுடைய ஜீவியத்தை என்றென்றைக்கும் நித்தியமாய் அழித்துப்போடுகிறது. இவ்விரு சுபாவங்களில் எது நம் ஜீவியத்தை ஆளுகை செய்கிறது என்பதைக் கண்டுகொள்ள இந்நூல் நமக்குப் பேருதவியாயிருக்கும்.

இந்நூலை வாசிக்கும் நாம் கிறிஸ்துவுடன் நித்தியத்தில் ஆளுகை செய்யும்படி அவரது தாழ்மையை வஸ்திரத்தைப் போலவும், ஒரு போராயுதத்தைப் போலவும் தரித்துக்கொள்ள ஆண்டவர்தாமே நமக்கு அருள்புரிவாராக.